பாரத மணி

தொடர் முத்து 90 | ஸரஸ்வதி பூஜா மலர் | 9-10-4

ஆசிரியர் : கா. சி. வேங்கடரமணி

★



பாண்டவர் கோட்டை

★

விலை அணா 2.

THE BHARATA MANI, MADRAS.

யுத்தம்

நேர்ந்த சமயத்தில்கூட மார்க்கெட் நிலவர
ஏற்றத் தாழ்வினுல் பாதிக்கப்படாதது

லைப் இன்ஷியூரன்ஸ்

அதற்கு தேய்மானம் கிடையாது, நஷ்டம் கிடையாது; ஆனுல், லாபம் கூடுவதால், அதன் மதிப்பு அதிகரிக்கிறது. உடனே சொத்து ஏற்படுத்துகிறது. எதிர்காலப் பாதுகாப்பாகவும் இருக்கிறது. அதன் பெறுமானம் தன் இயற்கை மதிப்புக்கு அதிகமாகவே யுள்ளது. எந்த பண நிலையிலிருப்பவர்களுக்கும், யாவருக்கும் ஏற்ற லாபகரமான, பாத்திரமான நாணயமான பாலிஸிகளை ஹிந்துஸ்தான் அளிக்கிறது.

இன்றே இப்பொழுதே
இன்ஷ்யூர் செய்யுங்கள்.

ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ்
இன்ஷியூரன்ஸ் ஸொஸைடி, லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:
'ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்'
ஸுரேந்திரநாத் பானர்ஜி ரோடு,
கல்கத்தா.

சென்னை பிராஞ்சு:
'ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்,
107, அரண்மனைக்காரத் தெரு,
மதராஸ்.

பாரதமணி

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
295, லிங்க செட்டி தெரு, மதராஸ்

வருஷ சந்தா { உள்நாடு ரூ. 4
வெளிநாடு ரூ. 6

மாலை 5	புதன் 9-10-40 விக்ரமஹு புரட்டாசி மீ 24உ	முத்து 1

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
போகிற போக்கில்		2
யுத்தப் பெருக்கு	கா. சி. வேங்கடரமணி	5
அசலம் ஐயர் வைபவம்	" ரவிகன் "	7
குஞ்சு	" குகப்ரியை "	11
பகவான்	ஐயாவையர். மணிக்குடி	17
முன்று தேவியர்	வே. நாராயணன், எம். ஏ., எம். எல்.	18
சுருதி மண்டலத்தின் சௌடால் கச்சேரிகள் ...	ய. மஹாலிங்க சாஸ்திரி, எம். ஏ., பி. எல்.	20
நாம் வேண்டுவதென்ன ?	கி. சந்திரசேகரன், எம். ஏ., பி. எல்.	23
தாசில் சுப்பராயர்	வரகவி. திரு. அ. சுப்ரமண்யபாரதி	25
எல்லாம் நன்மைக்கே	டி. எஸ். சுந்தரேச சர்மா	29
சமாதானமும் சமூக நியாயமும்	ஏ. ஜி. வெங்கடாசாரி	33
மன்னிப்பு	ஏ. முகம்மது ரஷீத்	36
சென்னை ஸேவாஸதனம்		38
சுப நிகழ்ச்சிகள்	" பாஸ்கரன் "	39
நவராத்திரி		41
வில்லியம் டெல்	பெ. நா. அப்புஸ்வாமி	42
சிறுவர் பகுதி		45

" பாரத மணி " யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



'போகிற போக்கில்' இரண்டுமாதமாய்த் தியான சமாதியில் இருந்து விட்டது. அந்த நிஷ்டையி லிருந்து அதைக் கலைக்க எனக்கு மனம் வரவில்லை. தூங்கும் குழந்தையின் தூக்கத்தைக் கூடவல்லவோ கலைக்க நமக்கு மனம் வருகிறதில்லை! இந்தியாவின் அஹிம்ஸா தர்மம் நமது ரத்த வோட்டத்தில் கலந்து நிற்கிறது. நாம் குடிக்கும் நீரிலும் கலந்திருக்கிறது.

என் தவம் முடிந்து விட்டது. இரண்டு மாதம் மோடாரின் காலோசை கேளாத வனவாசம். அதுவும் முடிந்து தினசரி கர்மாவுக்கும் பத்திரிகையின் புழுதி உழவுக்கும் கொழுவில்லாக் கலப்பையுடன் திரும்பி விட்டேன்.

எனது பழைய நண்பர் கோபுவின் பங்களாவுக்குச் சென்று ஸரஸ்வதியினிடமிருந்து ஒரு கோப்பை காபியை ஆசீர்வாதமாக இன்று பெற்று நான் மறுபடியும் 'போகிற போக்கிலே' ஆரம்பித்து விட்டேன். 'போகிற போக்கில்' வரவில்லையே யென்று குறையா யிருந்த நண்பர்கள் இப்போது குறையைத் தீர்த்துக் கொள்ளலாம். இக்காரணமாக நிறுத்தி வைத்திருக்கும், செலுத்த வேண்டிய பாக்கி சந்தாவையும் உடனே பாரத மணிக்கு அனுப்பிவிடலாம். மறுபடியும் தவத்துக்குப் போகாமலே என்னைத் திருப்பிவிடலாம்.

கொஞ்ச காலத்துக்கு முன் ஒரு மகானை நான் தரிசிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்த தென்று எழுதி யிருந்தேன்.

அவர் அன்பு பொருந்திய வாக்கும் ஒளியும் என்மனோ நிலையை மாற்றி விட்டன.

"மணி, உனக்கு ஏன் இந்தப் பாடு? தாமரைக் குளத்தில் நீந்தித் தாமரை மலர் பறித்தவனுக்கு—அல்லிக் குட்டையின் சேற்றில் ஏன் இவ்வளவு ஆனந்தம்?"—உபமான அழகைக் கண்டு களித்து மௌனமாய் நின்றேன். இந்த மகான் ஒரு பெரிய ஸம்ஸ்க்ருத வித்வான். ஆற்றுப் படுகை மணலில் ஊற்று வெள்ளப் பெருக்கைப் போல் பரிசுத்தமான வாக்கு வெள்ளத்தை உடையவர். இந்த மகானும், சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியாரைப் போல் உபமான உபமேயங்களைக் கடற்கரையில் கிளிஞ்சல்களைச் சுலபமாய்ப் பொறுக்குவது போல் பொறுக்கியெடுத்து உல்லாசமாக விளையாடக் கூடியவர். அரசியல் துறையில் உடைந்த கிளிஞ்சல்கள் தான் அதிகம். ஆனால் இத்துறையில் அது கிடையாது. தாமரைக் குளங்களே யொழிய அல்லிக் குட்டைகள் கிடையா.

"வரவர, தாமரைக் குளங்கள் அழிந்து கொண்டு வருகின்றன. இலை யிருந்தாலும் பூ கிடையாது; தமிழ் நாட்டுக் குட்டைகளில் அல்லியாவது முளைக்கிறதா என்று பார்க்கலாம் என்ற எண்ணம்தான் இரண்டு வருஷங்களாக" என்று விநயத்துடன் பதில் அளித்தேன்.

"பத்திரிகைத் தொழில் கஷ்டமான வேலையாயிற்றே—பலர் சேர்ந்தல்லவோ வேலை செய்ய வேண்டும்?—வீடு கட்டுவது போல், கல்யாணம் செய்வதுபோல், தேரிழுப்பதுபோல், யானைக்குத் தீனி போடுவதுபோல்!" என்றார் அவர்.

"ஆமாம், அதுவும் தோப்பு துரவு காடுகள் இல்லாத இடங்களில் யானைக்குத்

தீனி போடுவதுபோல் நம் தமிழ் நாட்டில் பத்திரிகை வளர்ப்பது" என்றேன்.

அவர் யானைக்குத் தீனிச் செலவு விவரங்களை யெல்லாம் ஊக்கமாய்க் கேட்டார்; தீனி கிடைக்கும் வழிகளையும் தேடும் வழிகளையும் கேட்டார். இதுதான் தக்க சமயமென்றெண்ணி விவரமாய் நான் எடுத்துச் சொன்னேன். அது ஒரு கட்டுரையைப்போல் விளங்குகின்றது.

"பத்திரிகைத் தொழிலில் வியாபார நாகரிகக் கற்பனைகள் முழுவதும் அடங்கித் தொடர்ந்து நிற்கின்றன. கண்கட்டி வித்தைதான்—ஐந்து நிமிஷங்களுக்குள் மாங்கொட்டை போட்டு, அதைச் செடியாக்கி மரமாக்கி அந்த மரம் பூப்பூத்துக் காய்காய்த்துப் பழுத்து அதை நாம் சாப்பிட்டாயிற்று. காலணா காசுக்குக் கால் ரூபாய் பெறும்படியான வியாபாரம் செய்யும் திறமை—மேல்நாட்டு வியாபார மோசடி வழிதான். என் கையில் ஓரணாக் காசுதான் இருக்கிறது. எனக்கோ ஏராளப் பசி. நான் ஒரு குண்டோதரன். அந்த ஓரணாவுக்குச் 'சாம்பார் பாத்' போட்டால் போதாது. இலை போட்ட—தாட்டிலையா யிருந்தால் மிகவும் நலம்—கறி, பச்சடி மாத்திரம் போதாது. கொஞ்சம் பாயஸம் —சேமியா, ஒரு ஜிலேபி, இரண்டுவடை, மூன்று பஜ்ஜி—சாப்பிட்ட பிறகு வழக்கம் போல் வெற்றிலை பாக்கு, சந்தனம்; பிறகு விச்ராந்தி செய்து கொள்ள ஓர் அறை. அதில் விசிறி, ரேடியோ—பிறகு ஹோட்டலைவிட்டு வெளியேறிப் போகும் பொழுது தனக்கு அதிர்ஷ்டமிருந்து ஒரு 'லக்கி டிப்'—ஆயிர ரூபாய்க்குச் 'செக்'. ஓரணா காசுக்கு இவ்வளவு தூரம் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றால் எந்த 'கபே' எவ்வளவு 'மாடர்'னா யிருந்தாலும் கொடுத்து முன்னேற்றமடைய முடியும்? ஆனால் அன்னவிக்கிரய சாலையில்கூடச் செய்து கொடுக்க முடியாத வசதிகளைப் பத்திரிகாலயத்தில் வாசகர்கள் எதிர்பார்க்கிறார்கள். இவ்வளவுக்கும் நீங்கள் வசதி செய்து கொடுத்தால்தான் பத்திரிகை ஓட்டத்தில் ஓடிப்பிழைக்கலாம். அன்னம் ப்ரதானமல்ல—விஷயம் ப்ரதானமல்ல. சிற்றுண்டிகளுக்குத் தான் செலாவணி."

வேர்த்து விறுவிறுத்து என் உபந்யாஸத்தை முடித்தேன்.

"பத்திரிகைத் தொழிலில் பழக்கமில்லாத எங்களுக்கெல்லாம் விளங்கும்படி கொஞ்சம் சொல்லேன்" என்று அவர் சொன்னார்.

நான் மறுபடியும் ஆரம்பித்தேன். "நாலணா செலவுசெய்து உற்பத்தி செய்யும் பண்டத்தைப் பத்திரிகைத்தொழிலில் ஓரணாவுக்குவிற்க வேண்டும். இல்லாவிட்டால் உங்களுக்கு மூச்சுவிடக்கூட இடங்கிடையாது. இதனால் ஏற்படும் மூன்றணா நஷ்டத்தை ஈடுசெய்ய மாற்று வழியில் நீ சம்பாதிக்க வேண்டும்—விளம்பர வேட்டை, போட்டிப் பந்தயம், அதிர்ஷ்டப் பரிசு. விஷயத்துக்காகப் பத்திரிகை ஏற்பட்டிருந்தாலும்அதை முக்கிய கருத்தாக எண்ணிப் பத்திரிகை போட முடியாது—மகாத்மா காந்தியாக இருந்தாலொழிய அல்லது பிர்லாவாக இருந்தாலொழிய—அப்பொழுது கூட ஓரணாக்கு நான்கு பக்கங்கள்தான் "ஹரிஜன்" போல் பிரசுரிக்க முடியும். தற்கால நாகரிகத்தில் முக்கியமாய்ப் பத்திரிகைகள் விஷயத்திற்காகஅல்ல; விளம்பரத்துக்காகவும் பண்டம், பாடிகள் விற்பனைக்காகவுந்தான். உங்களுக்கு மிகவும் கவலையிருந்தால் இடுக்கிலேயே விஷயதானம் செய்யலாம். ஆக்ஷேபனை யில்லை. கட்டுரைகளை அச்சிடலாம். புட்டிகளை விற்பனை செய்ய, ஜப்பானியர்கள் செய்து வருவது போல் பற்பொடியை அடைத்து விற்கலாம். அத்தகைய பற்பொடி எவ்வளவு நேர்த்தியாக இருக்குமென்று நீங்களே அறியலாம்—விளம்பரம் வேண்டாம். என் திட்டத்தில் பாங்கிங், இன்ஷ்யூரன்ஸ், 'எலக்ட்ரிசிடி' இவைகளைப்போல் பத்திரிகைகளையும் தேசியமாக்க வேண்டியது அவசியம். அப்பொழுதுதான் ஜாதியைப் பிரித்துப் பத்திரிகைத் தொழிலிலிருந்து பயன்படலாம். விஷயத்திற்காகப் பத்திரிகைகள் சில. விளம்பரத்திற்காக விளம்பரங்கள் சில. கலி காலத்தில் கலி முற்றி ஜாதி சங்கரம

ணம் ஏற்பட்டுப் பத்திரிகைகளும் கஷ்டத்துக்குள்ளகப்பட்டுக் கொண்டன"-என்று மகானிடம் புலம்பினேன்.

“மணி, நீ புலம்பவேண்டாம். இந்தத் துக்கத்தைத் தீர்க்க வழி உன் கையிலேயே இருக்கிறது. கிடைக்கும் தீனிக்குத் தகுந்த யானையை நீ உண்டாக்கிக் கொள்ளலாமே. ஓரணாவுக்குள்ள உண்மையான சாப்பாட்டை நீ போடேன். உன் கடமை தீர்ந்து விட்டது. தவிர, வாரம் வாரம் பத்திரிகை வெளிவர வேண்டுமென்று சங்கற்பம் செய்யக்கூடாது. எவ்வெப்பொழுது ஈசன் உன் கையில் தீனி அளிக்கிறானோ அப்பொழுது தீனியைப்போட்டு யானை வளர்த்துவா. வளர்ந்தது போதும். யானை செத்துவிடுமோ என்று பயப்படாதே. பத்திரிகைக்குத் தீனி சம்பந்தப் பட்டவரையில் யானையின்உடல். உயிர் சம்பந்தப்பட்ட வரையில் ஒட்டகையின் உயிர். தொட்ட காரியத்தை ஊக்கத்துடன் பலனை எதிர் பார்க்காமல் நடத்து. ஆனால் அல்லிக்குட்டைச் சேற்றில் ஆழ்ந்து தாமரைக் குளத்தை மறந்து விடாதே. வருஷத்துக்கு ஒரு புத்தகமாவது எழுது—அது தான் உன் முக்கிய கர்மா—வழி காட்டி.” என்று அவர் அன்புடன் ஆசீர்வாதம் செய்தார். சாந்தமடைந்து அருள் பெற்று என் மனோ நிலையும் நின்றது.

சென்னைக்குத் திரும்பினேன். இந்த முக்தோடு பாரதமணிக்கு மூன்றாவது வருஷப் பிறப்பு— ஆண்டு நிறைவு. சங்கற்ப விசேஷத்தால் நான் இந்தப் பத்திரிகைத் தொழிலில் அல்லிக்குட்டையில் சேற்றை வாரிக்கொண் டிருக்கிறேன்.

ஏனென்றால் என் தீர்மானக் கொள்கை, நாற்றங்காலில்லாமல் வயலில் நட முடியாது. அப்படியே பத்திரிக்கைகள் இல்லாமல் இலக்கியப் பெருக்கும் கவிதைச் செல்வமும் நவீன நாகரிக விவசாயத்தில் ஏற்படாது. இதை உண்மையாகக் கொண்டு நான் உழைக்க முன் வருகிறேன். கைவிடாமல் முயன்றால் என் எண்ணத்தை ஈசன் நிறைவேற்றுவாரென்ற நம்பிக்கையில் நான் நிற்கிறேன்

ஆகையால் நண்பர்களே, பாரதமணியிலுள்ள குற்றம் குறைகளை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். ஓரணாவுக்குள்ள தயிர் சாதம் கூடப் பல வாரங்களில் இல்லாமலிருக்கலாம். சொந்தத்தில் எருமை, (அச்சாபீஸ்) வாங்கிவிட்டால் விலைக்கு மோர் வாங்கவேண்டாம். தயிர் சாதம் அலுக்க சலிக்கக் கிடைக்கும். நண்பர்களே, அதுவரையில் எலுமிச்சம்பழம், கடுகு, கரு வேப்பிலை, நீர் இவைகளின் ஆதரவில்தான் காரியத்தை நடத்த வேண்டியிருக்கிறது.

மணி.

ஈரோடு டி. முன்சீப் கோர்ட்டு

1940 ௵ S. C. No. 605

1940 ௵ I. A. No. 275

ஈரோடு தாலூக்கா எழுமாத்தூர் கிராமம் காரக்காட்டு வலசு கவுண்டியப்ப கவுண்டன் மகன் குப்பண கவுண்டன்-வாதி

ஷை யூர் பழனிமலைக் கவுண்டன் மகன் செங்கோட்டு வேலப்ப கவுண்டன்— பிரதிவாதி

10-9-1938 தேதி வாதிக்குப் பிரதிவாதி ரூ. 130-க்கு எழுதிக் கொடுத்திருக்கும் புரோநோட்டுப்படி ரூ. 144-14-4க்கு பிராது செய்து 11-10-1940 தேதி வாய்தாப் போடப்பட்டிருக்கிறது.

Erode, 28-9-'40 } (Sd) U. S. Subramania Aiyer
வாதி வக்கீல்.

யுத்தப் பெருக்கு

[கா. சி. வேங்கடரமணி]

காவேரி நதியில் ஆடி மாசத்திய குழம்பின செவ்வெள்ளப் பெருக்குப்போல், நாளுக்கு நாள் மேல் நாட்டில் யுத்தவெள்ளம் பெருகிக் கொண்டு வருகிறது. ஆசியாவிலும் ஈசான்யத்தில் குழப்பம் அதிகரிக்கிறது. ஏற்கனவே மூன்று வருஷ காலமாய் ஜப்பான் சைனா யுத்தம் தீவிரமாய் நடந்துகொண்டே வருகிறது. இதற்கெல்லாம் முடிவென்ன வென்று அறியாமல் நாம் நிற்கிறோம்.

ஜப்பானின் மனோநிலைதான் இப்பொழுது நமது கண்டத்தில் குழப்பத்திற்குக் காரணம். மேல் நாட்டு நாகரிகத்தின் வியாபாரப் போட்டி ஆசையையும், அன்னியரைச் சுரண்டி யாகிலும் தான் பிழைத்தால் போதுமென்கிற வேதாந்தத்தையும், கையாண்டு கொஞ்ச காலமாகக் கட்டுரையில் கண்ட தவளையைப்போல் ஜப்பான் ஊதிக்கொண்டு வருகிறது.

சமீபத்தில் ஜப்பானியர் படைகள் இண்டோ சீனாவில் வந்து இறங்கிவிட்டன. ஸையாம் தேசத்தின் சிநேகத்தையும் அடைந்து அந்த நாட்டையும் கைவசப்படுத்திக் கொண்டு விட்டது. ஜர்மனிக்கு இத்தாலியின் நட்பு இந்த யுத்தத்தில் எவ்வளவு பயன்படுகிறதோ அவ்வளவு சைனா, ஸையாம் தேசத்தின் நட்பு பயன்படு மென்பதில் ஐயமில்லை. இதனால் சிங்கப்பூரை மடக்கிவிடலாம் என்கிற எண்ணம் அவர்களைத் தூண்டி வருகிறது. ஈசான்ய தேசங்களுக்கு அதிபதியாகிவிடலாம் என்பது உட்கருத்து. தன் பண்டங்களை ஒன்றுக்குப் பத்தாக விற்று, பிறரின் அடிமைச் செல்வத்தைக்கொண்டு தான் சுகமாய் வாழலாமென்பது ஜப்பானின் நோக்கம்.

இந்த நோக்கம் சமீபத்தில் பலப்பட்டு நிற்கிறது. காட்டுத் தீக்கு வாயுபகவானும் உதவி யளிப்பதுபோல் ஜர்மனி-இத்தாலி—ஜப்பான் இந்த மூன்று நாடுகளும் சேர்ந்து ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு பரஸ்பரம் தங்கள் இஷ்டப்படி வேட்டையாட, சௌகரியங்களை ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த வாரத்தில் ஒப்பந்தம் கையெழுத்தாகிப் பூர்த்தியாகிவிட்டது. பழைய அச்சுக்கு புது எஃகு போட்டு நன்றாய்க் கடை திரட்டியாய் விட்டது.

இதன் மூலம் இந்தியாவின் கொல்லைப் புறக்கடைக்கு யுத்தத் தீ பரவி வந்துவிட்டது. இப்படிப் பட்ட நெருக்கடியில் கூட பிரிட்டிஷ் மந்திரி சபை, தான் பிடித்த முயலுக்கு இரண்டு கொம்பும், மூன்றே மூன்று காலும்தான் என்று பிடிவாதமாய்க் கண்ணை மூடிக்கொண்டு சொல்லிக் கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ஜனநாயக அரசியலில் இப்பொழுது தீர்க்க தரிசிகளைக் காணோம். ஸத்யம் விலகி நிற்கிறது. ஏற்ற மரத்தில் சாலை மாட்டாமல் பத்துக் கழியை வைத்துக்கொண்டே ஏற்றம் இறைத்து வருகிறார்கள். இந்த அசட்டுத்தனத்தை, போனால் போகிறதென்று மனமிளகிச் சிரமமெடுத்துக்கொண்டு சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அமெரி காதில் ஊதியும் பொழுது விடியவில்லை. பிரதம மந்திரி சர்ச்சில் தான் பிறந்த நாள் முதற்கொண்டு இந்தியாவின் மனோநிலையை அறிந்தவரல்ல. அவர் கொள்கை கஷ்டத்தைத் தீர்க்கும் கொள்கை அல்ல. மிக்க உழைப்பிற்குக் கஷ்ட பலன். இந்தியா மந்திரி அமெரியோ, புகழ்பெற்ற அட்வகேட்கள் கோர்ட்டில் சப்பையான கேஸைச் 'சப்புக்கட்டு' கட்டி, கண் கொட்டி, மாயாவிப் பேச்சுப் பேசுவது போலச் சாமர்த்தியமாய்ப் பேசுகிறார். இந்தச் சதுரங்கம் சட்டத்தில்கூட வெற்றியடைவதில்லை. அரசியலில் கேட்க வேண்டுமா! ஆகையால் நமது வைஸிராய் பலருக்குப் பல பேட்டிகள் கொடுத்தாலும் செயலற்று நிற்கிறார். முடிவில் இந்தியாவின் நாற்பது கோடி மனித சக்தி

யும், கணக்கில்லாத பொருளாதார உதவியும், ஜனநாயகத்தை நிலைநாட்டும் வழியில் உபயோகப்படவில்லை.

இந்த நெருக்கடியில் இப்பொழுது ஜின்னவும் மத்திய சர்க்காருடன் ஒத்துழைக்க மாட்டேனென்று கூறிவிட்டார். யுத்த விஷயமாகப் பேச்சுச் சுதந்திரம்கூட இயலாதென்று வைஸிராய் மகாத்மா காந்திக்குச் சொல்லித் தலையை அசக்கிவிட்டார். மேகங்கள் கீழ்வானத்தில் கருத்து, திரண்டு, உருண்டு நிற்கின்றன. இடியும், மின்னலும் வீட்டுக்குள் நுழைகின்றன.

கலிமுற்றி, சீர்கெட்டுவரும் இவ்வுலகத்தில்சிலத்தையும் அறிவையும், சாந்தத்தையும் ஊட்டவேண்டியதுதான் இந்தியாவின் ஸ்வதர்மம்—முக்கிய கடமை. இந்த உயர்தரத் தொண்டை வேறு எந்த நாட்டிலும் நடத்த முடியாது. பகைமுற்றி உலவும் மேல் நாட்டில் அடியோடு முடியாது. ஆகையால் நாம் இப்பொழுது செய்ய வேண்டியது என்ன? உடனே சாந்த வழியில் செயலுக்குத் திட்டம் போட்டு ஆரம்பிக்கவேண்டும். இந்த இருபது வருஷ காலமாய் மலை இடுக்குகளில் அகப்பட்ட வெள்ளம்போல் காந்திஜியின் அஹிம்ஸை வெள்ளம் செயலற்றுத் தேங்கிநிற்கிறது. அதை இப்பொழுது விடுதலை செய்து அந்த அஹிம்ஸை வெள்ளத்தைக் கரையிட்டு ஓட்டம் உண்டாக்கி, ராமேஸ்வரம் முதல் ரிஷிகேசம் வரையில் எல்லா கிராமங்களுக்கும் கொண்டுபோய்ப் பாய்ச்ச வேண்டும். இதுவரையில் அஹிம்ஸைக்குத் திட்டமும், செயலும் (Organisation) இல்லாததால் ஹிம்ஸையாகவே இருந்தது. நாக்கில்லாத மணிபோல் அது நமக்குப் பயன்படவில்லை. ஆகையால் நாடு முழுவதும் நாம் இப்பொழுது தேசத் தொண்டுக்காக, பத்துப் பதினைந்து கிராமங்களை ஒன்றாக்கிச் சேர்த்து அமைத்து, அந்த கிராம சொத்தைத் தீர்மானமாக ஒரு தொண்டர் கையில் நாம் ஒப்புவிக்க வேண்டும். இப்படி நாம் செயல் ரூபம் ஒவ்வொரு கிராமத்திலும் தொண்டு செய்தாலொழிய நாம் அழிந்து போவோம் என்பதற்கு ஐயமில்லை. ஐயாயிரம் வருஷமாக அழியாமல் வளர்ந்து வந்த ஓர் சாந்தமான நாகரிகத்தின் ஜீவதாது அழிந்துபோய் விடும்.

வெகுகாலமாக ஒரு பிரபல நாகரிக ஏகாதிபத்யத்தை (Cultural Empire) சிருஷ்டி செய்து ஆண்டு அனுபவித்து வந்தோம். ஆப்பிரிக்காவிலுள்ள ஜாம்பஸி நதி முதற்கொண்டு அமெரிக்காவின் 'மெக்ஸிகோ' 'பெரு' வரையில் இந்தியாவின் நாகரிகம் ஒரு காலத்தில் பரவி நின்றது. இதற்குத்தான் பெரிய இந்தியா (Greater India) என்றுபெயர். அறிவின் பெருமையை நாம் எப்பொழுதும் தேடிக் கொண்டாடினேமே ஒழிய, ஆட்சியின் கொடுமையை ஒருநாளும் தேடவில்லை. நாம் தேடி எடுத்த இந்த நாகரிகச் செல்வத்தை இந்த நெருக்கடியில் உலகம் முழுவதும் பரப்பி, மறுபடியும் தர்மத்தை நிலைநாட்டப் புத்துயிர் பெற்ற இந்தியா ஆவலுடன் விரும்புகிறது.

நாம் அமெரிக்கா, சைன ரஷ்யா இவர்களின் ஒத்தாசையை எப்படியாவது அடைந்து ஜனநாயக யுத்தத்தில் அஹிம்ஸா வழியிலேயே வெற்றிபெற்று, மறுபடியும் அழியாத சமாதானத்தைக் கொண்டுவர வேண்டும். அஹிம்ஸா வழியில் வெற்றி பெறுவதற்கு ஒரே ஒரு வழிதான். ஒவ்வொரு ஜில்லாக்களிலும், உதிர்ந்த மணிகள்போல் இப்பொழுது குப்பையில் நிற்கும் பத்து அல்லது பதினைந்து கிராமங்களை ஒன்றுசேர்த்து ஒரு மாலையாகக் கட்டி ஒரு தொண்டர் கழுத்தில் போட்டு அவரை முடிசூட்டுவதுதான்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் ஜீவதாது லண்டனிலிருந்து டில்லிக்கு வந்துவிட்டது. இதை நாம் உணர்ந்த நிமிஷமே நமக்குப் புத்துயிர் வந்துவிட்டது. ஸ்வராஜ்யம் கிட்டி விட்டது. ஹிந்து—முஸ்லீம் ஐக்யபாவம் ஏற்பட்டுவிட்டது. இந்த எண்ணத்தைச் செயல் ரூபமாய்ப் பூர்த்தி செய்ய வேண்டிய சட்டதிட்டங்களை உடனே மகாத்மாஜீயும், சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியும் ஏற்பாடு செய்வார்கள் என்று நம்புகிறேன். இனிமேல், செயலாலே ஸ்வராஜ்யமே ஒழிய, மொழியால் இல்லை.

அசலம் ஐயர் வைபவம்

"ரஸிகன்"

நாங்கள் சுவாமிநாதன் வீட்டிற்குக் குடித்தனம் வந்தபோது அவனுக்கு வெளி வரும்படி அதிகம். வீட்டில் மதிப்புக் குறைவுமான காலம். அவன் யாரோடும் அதிகமாய்ப் பேசுவதில்லை. அவன் சகோதரர்கள் அவனை உம்மணாமூஞ்சி யென் றிகழ்வார்கள். வீட்டில் தங்கும் வேளையில் அவன் அதிகமாகச் சல்லாபம் செய்வது, கொல்லைக் கட்டில் குடியிருந்த அசலாயதனமய்யரோடுதான். அவரும் இவனும் பலவிதத்தில் ஒருவரை யொருவர் ஒவ்வாதவர். இரு விதத்தில் முற்றிலும் ஒத்தவர். இருவருக்கும் செய்ப் பொடியில் அதிகப் பிரியம். சீட்டாடுவதில் அதைவிடப் பிரியம். ஆனல் இருவருக்கும் இந்த சுகங்களை யனுபவிக்க அதிகப்பொழுது தகப்படுவதில்லை. அப்படியிருந்தும் அவர்களுக்குள் தஸ்தவேஜில்லாத ஒப்பந்தம் ஒன்றிருந்தது. ஒரு ஞாயிற்றுக்கிழமை தவறுமல் காலையில் சிவபுரிப் புகையிலையைப் பதமாய் வாட்டி வெகுகாலம் பழக்கத்தால் வழவழவென்று தேய்ந்திருக்கும் கொட்டாங்கச்சியில் சுண்ணும்பும் செய்யும் சேர்த்தரைத்து, மாற்றி மாற்றி மாதிரி பார்த்து அரங்கேற்றி, குடுக்கையில் அடைத்துக் கொண்டு அவசரமாய், போஜனம் செய்து, ஈரக் கை காய்வதற்கு முன் முச்சிட்டில் இறங்கிவிட்டால் விளக்கேற்றும் வரையில் இருவருக்கும் இந்த உலகத்து ஸ்மரணையே இராது.

திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை முடிய அசலமய்யர் பேருக்கு விரோதமாய் முற்றிலும் மாறுபாடு அடைவார். அவர் பெயரை, நான் சுருக்கினேனென்று எண்ண வேண்டாம். 'அசல்' என்று அவரே கெஜட்டுக்குப் பணம் கட்டிப் பிரசுரம் பண்ணி மாற்றிக் கொண்டார். அதற்குக் காரணம் அவர் 'செட்டில்மெண்டு' குமாஸ்தாவாக சப்கலெக்டராபீசில் வேலை பார்க்கத் தொடங்கிய காலத்தில் அந்த ஆபீஸ் மேலதிகாரியான ஆங்கிலேயர்தான். இவருக்கு 'ராமஸ்வாமி', 'சுந்தரம்' என்ற சாமானியப் பெயர்களே தட்டித் தடுமாட்டமில்லாமல் வாசிக்க வராது. 'அசலாயதனமய்யர்' என்று அரை மைல் தூரமுள்ள நாமதேயம் அவர் வாயில் எப்படி நுழையும்? இது காரணம் பற்றி அவர் தன்னிடம் அதிருப்தி கொண்டு விடுவரோ என்று பயந்த நமது ஐயர் கெஜட்டில் புதிதாக சன்னது வாங்கும் வக்கீல்கள் பெயரைப் பிரசுரிப்பதைக் கவனித்திருந்த படியால் தானும் அவ்விதமே உறுதியாக மாற்றிக் கொண்டது மன்றி அவ்விஷயத்தை வணக்கமாகத் துரை சமூகத்துக்குச் சமயம் பார்த்துத் தெரிவித்தார். இதைக் கேட்ட துரை ஆகாசம் இடிந்து விழுந்ததுபோல் கால்மணி நேரம் வரையிலும் விடாமல் சிரித்ததைக் கண்டு தன்னிடத்தில் பூரண சந்தோஷமடைந்ததாகவே கருதினர். ஆகையால் கச்சேரியிலாகட்டும், வெளியிலாகட்டும் யாராவது விஷமமாக, 'அசல் ஆகிவிட்டது, நகல் எப்பொழுது ஆகும்' என்று கேட்டால் அதை அவர் லட்சியம் செய்வதில்லை. ஆனல் தமிழ் நடவடிக்கைகளில் மட்டும் தன் பிதா தேடிப்பார்த்து வைத்த திருநாமத்தைத்தான் வழங்கி வந்தார்.

அசலமையர் வேலையில் சூரர், மகா பரிசுத்தர். வீட்டில் அவரும் அவர் சம்சாரமும்தான். குழந்தைகள் கிடையாது. ஆயினும் ரூ 20 சம்பளத்தில் சிரமகால க்ஷேபம்தான் செய்யவேண்டி யிருந்தது. ஆனல் கடன் முதலியன வாங்கும் வழக்கம் கிடையாது. மாசம் முதல்தேதி சம்பளம் வாங்கி வரும்போதே கூடத்தில் ஊஞ்சலில் ஓயாமல் ஆடிக்கொண்டிருக்கும் வீட்டுக்காரக் கிழவரிடம் வாடகை ரூ 5-ம் கொடுத்து விட்டுத் தான் தன் விடுதிக்குச் செல்வார். அவர் சம்சாரம் ரொம்ப செட்டுங் கட்டும் மானமாய்க் குடித்தனம்

நடத்தி வந்தாள். வீட்டில் காப்பி கிடையாது. ஒரு வேளைதான் சுடுசோறு. தினந்தோறும் மாலையில் கோவிலுக்குச் சென்று சனிபகவானுக்கு நெய்விளக்கு மட்டும் போட்டு வருவாள். மக்கட்பேறு இல்லாத குறையால் கொஞ்சம் வாடினவள். ஐயர் இதெல்லாம் அசட்டுத்தனம் என்ற விவேகம் படைத்தவராயிருந்தாலும் ஒன்றும் சொல்லுவதில்லை. வாஸ்தவத்திலே அந்த பெண்மணியிடம் பேசக்கூட அவருக்குப் பொழுது இராது. காலையில் 10½ மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டால் ராத்திரி 8 மணி ஆகும், திரும்ப வீடுவந்துசேர. அப்பவும் ஒரு மூட்டை ஆபீஸ் பேபர்கள் கொண்டு வருவார். அவசரமாய் மாலைக் கடன்களை முடித்து மோர் சோற்றை நாலுவாயில் போட்டுக்கொண்டு குத்து விளக்கைத் திண்டிவிட்டு மேஜையண்டையில் உட்கார்ந்தால், சுமார் 11 மணிக்குத்தான் வேலை முடியும்.

பிறகாவது படுத்துக் கொள்ளுவாரோ? அதேதது. ஐயர் பீ. ஏ. யில் இயற்கைத் தத்வசாஸ்திரம் படித்துப் பதக்கம் பெற்று கியாதியுடன் தேறினவர். அந்தப் பரீக்ஷைக்குப் படித்து வெகுமதியாகப் பெற்ற சில புத்தகங்களைக் கண்ணுக்குக் கண்ணாய்க் காப்பாற்றிவந்தார். அவைகளில் Emerson's Essays ஸை வேதமாகவும்' Paines' Rights of Man ஐ உபவேதமாகவும், Gay's Fablesஸை புராண பூர்வமாகவும் கௌரவித்து வந்தார். கண்ணவிந்து போகும்படியான சிறிய எழுத்தில் அச்சிட்டிருந்த அந்தப்பழம்புத்தகங்களைத் தலைச்சன் குழந்தையைப் பரிபாலிப்பது போல் அட்டைபோட்டுக் கண்ணாடி அலமாரியில் வைத்திருந்தார். ஊர் முழுவதும் அடங்கின அத்தறுவாயில் இவைகளில் ஒன்றை எடுத்துப் பாயில் படுத்துக் கொண்டு தலைப்பக்கத்தில் ஒரு காலணா (அல்பாயுசு) விளக்கை விளக்குத் தண்டின்மேல் வைத்துக்கொண்டு அதன் புகை சூழ்ந்து ஓயாமல் ஆடும் வெளிச்சத்தில் நான்கு நாழிகையாவது படித்துவிட்டு உறங்கினால்தான் அன்றைய தினம் சுதினமாகும்.

இந்தப் புத்தகங்களை இவர் படிப்பது எல்லோருக்கும் தெரியாது. வேற்று மனிதர் யாராவது வந்து விட்டால் அவசரமாகக் கையிலிருக்கும் புத்தகத்தை மறைத்துக் கொள்ளுவார். இதை படிக்கடி கவனித்திருந்த எனக்கு அதன் காரணம் தெரியவில்லை. குழந்தையில்லாத அவர் தாய் தகப்பனைவிட்டுப் பிரிந்திருந்த சிறு பையனான என்னிடத்தில் கொஞ்சம் பிரியம் வைத்திருந்தார். பி. ஏ. பதக்கம் பெற்றுத் தேறினவர் என்று எனக்கும் அளவில்லா மதிப்பிருந்தது. இப்படிப் பரஸ்பரம் எங்கள் சிநேகம் விருத்தியாக ஆங்கிலத்தில் எளிய நடையில் எழுதிய சொற்ப விலையுள்ள சில புத்தகங்கள் அப்பொழுது எனக்குக் கொண்டுவந்து கொடுத்து வாசிக்கச் சொல்லிக் கடினமான பதங்களுக்கு அர்த்தம் சொல்லி, அந்தக் கதா நாயகர்களின் சரித்திரங்களையும் ஒழிந்தபோது விஸ்தாரமாய் எடுத்துரைப்பார். இவர்களனைவரும் குடியரசு நாடுகளில் மேன்மைவாய்ந்தவர்களே. குடியரசின் சிலாக்கியத்தையும், அரசர்கள் புரிந்த அக்ரமங்களையும் பற்றிச் சொல்ல ஆரம்பித்துவிட்டால் அவருக்கு ரொம்ப உற்சாகம் வந்துவிடும். அவ்வமயங்களில் Emersonனும், Painesம் சொல்லியிருக்கும் அரிய விஷயங்களை எடுத்துப் பாதி இங்கிலீஷிலும், பாதி தமிழ்ப்படுத்தியும் பிரசங்கிப்பார். கேட்கும் மகா ஜனங்களோ நானொருவனே. எனக்கும் அந்த வாய்மை வெள்ளத்தில் திணறல் உண்டாகுமே யொழிய, பொருள்படுவது மிகக் குறைவுதான். முற்றிலும் புரிந்தால் எவ்வளவு ஊக்கமிருக்குமோ அதைவிடப் பதின்மடங்கு ஊக்கம்மட்டும் ஏற்படும்.

எங்கள் சல்லாபத்தைக் கவனித்திருந்த என் மாமா, என்னை யடிக்கடி ஐயர் சொன்ன விஷயங்களைப்பற்றி விசாரிப்பார். என்னை அவ்வளவு தூரம் அவர் பொருட்படுத்துவதில் என் மாமாவுக்குப் பெருமையா யிருந்தது. ஏனெனில் பீ.ஏ. பரீக்ஷை தேறினதுமன்றிப் பதக்கம் பெற்றவரல்லவா? என் மூலமாய்த் தானும் அவரிடத்தில் பழக ஆரம்பித்தார். அவர் புத்தகங்களில் சிலவற்றை (திரிமூர்த்தி

கள் தவிர மற்றவை தான் அவர்கள் கர்ப்ப கிருகத்திலிருந்து வெளிப்படுவதில்லை) அடிக்கடி வாங்கி வாசிப்பார். என் மாமாவுக்குச் சரித்திரத்தில் மிகவும் சிரத்தை யுண்டு. அதில் எப்போதும் Full mark வாங்கினதாகச் சொல்லிக் கொள்வார். Hunter's Indian History Marden, Dela Fosse இவை எல்லாம் காதலப் பாடம். நெப்போலியன், அலெக்ஸாண்டர், வெலிங்க்டன், நெல்ஸன், ஜூலியஸ் சேர இவர்களின் பிரதாபங்களைச் சொல்வதில் இவரே முன் ஜன்மத்தில் அந்த மகா புருஷர்களாய் அவதாரம் எடுத்திருந்தாரோ என்று பிறர் நினைக்கும் படி அவர்களைப் போற்றுவார். க்ளைவின் ஆட்சியில் ஆங்கில போர்வீரர்களுக்கு சோற்றைக் கொடுத்துக் கஞ்சியையும் அருந்தி பாக்கியம் பெற்றதாக எண்ணின சிப்பாய்களின் ராஜபக்தியையும், சுராஜூட் டௌலா Black Hole இல் செய்த அகிருத்தியத்தையும், ஒமிச்சண்டை க்ளைவ் ஏமாற்றின சாதுரியத்தையும் விரித்துரைக்க ஆரம்பித்துவிட்டால் ஓய்வ தரிது. ஆனல் அசலம் ஐயரிடமிருந்து தான் வாங்கிப் படிக்கிற சரித்திரப் புத்தகங்களில் இதெல்லாம் மாறுபாடா யிருந்தது. இந்து தேச சரித்திரம் வெகுசாக நிஜக் கலப்பே யில்லாமல் ஆங்கில துரைத்தனத்தின் தூண்டு கோலால் எழுதப் பட்டதென்றும், குடியரசென்னும் நாகரிகத்தைக் கைக்கொள்ளாத தேசத்தவர்கள் அரசர்களுள் கடின மக்களாகித் தங்கள் உரிமைகள் தெரியாமல் வீண் போகிறார் கள் என்றும் என்னென்னமோ விபரீதமான கக்ஷிகள் வாதிக்கப்பட் டிருந்தன. இதனல் என் மாமாவுக்குப் பெரிய மனக் குழப்பம் ஏற்பட்டது. ஐயரிடத்தில் மரியாதையாய் இரண்டொருதரம் இது விஷயங்களைப் பற்றிப் பேச முயன்றார். அவர் அதற்கு இடம் கொடுக்கவில்லை. 'அதெல்லாம் நமக்கென்னத்துக்கு, கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்,' என்று சொல்லிப் பேச்சை மாற்றி விடுவார். சர்க்கார் உத்தியோகஸ்தரானதால் அப்படிச் சொல்லுகிறார் என்று என் மாமாவுக்குப் பட்டது.

இதுஇப்படியிருக்க ஒருநாள் காலேஜில் படிக்கும் வீட்டுக்காரப் பிள்ளையாண்டான், 'என்ன, ஐயர்வாள், நேற்று அஸல்லோடு ஏதோ பலமாக தர்க்கம் பண்ணிக்கொண் டிருந்தீர்களே,' என்று வம்புக்குக் கேட்டான். (அவனும், அவன் தம்பியும் அசலம் ஐயரைப்பற்றி கடும்ஸகலிங்கத்தில்தான் பிறரிடம் பேசுவது). என்மாமா பேசாமலிருக்கக் கூடாதா. அவர் சரித்திர ஆராய்ச்சிகளைப் பற்றியும் ஐயர் கொடுத்த புத்தகங்களால் ஏற்பட்ட சந்தேகங்களையும் விரித்துரைத்தார். ஓகோ அதற்குக் காரணம் தெரியாதா? அது ஆறு மாதமாச்சு 'தீவிரிபப்ளிகன்' ஆகி. விக்டோரியா மஹாராணி யிறந்த தினம் லீவுவிட்டார்களே, ஞாபகமிருக்கிறதா? அன்றைய தினம் துரை அவசரமாக வீட்டுக்குப் போகவேணுமென்று கைபெழுத்துப் போடவேண்டிய பேபர்களைக் கொண்டு வரச்சொன்னனும். அஸல் சேதிதான் உங்களுக்குத் தெரியுமே. கையைக் காலைக்கூடப் போனவிடத்தில் வைத்துவிட்டு மறந்து வந்துவிடுகிற வழக்கமாச்சே. இதென்ன பண்ணிற்று. துரையினிடத்தில் பேபர்களைக் கொண்டு சேர்க்கவேண்டிய துறையில், பேபர்களைத் தன் மேஜை மேலேயே வைத்து விட்டு 'டைக்லட்' ரெஜிஸ்டரைக்கொண்டு அவன் முன் நீட்டினன். அப்பொழுது கூட்டில் புலி நடைபழகுவது போல் இங்குமங்கும் பாய்ந்துகொண் டிருந்த அவன், பேபர்களைக் காணமல் 'டைக்லிட்' ரெஜிஸ்டரைக் காணவே ஒன்றும் புரியாமல் அவரை விழித்துப் பார்த்தான். அப் பொழுதாவது கண்டுகொண்டாரு, இல்லை. அவன் விழிப்பதைப் பார்த்தபோது கால் கை வெலவெலத்து என்னமோ சம்பந்த மில்லாமல் பேசினன் (அப்போது) அவனுக்கிருந்த ஆத்திரத்தில் ரெஜிஸ்டரை வெடுக்கென்று பிடுங்கி, மாடியிலிருந்து ஆபீஸ் கேட்டுவரையில் அந்த ரெஜிஸ்டராலேயே முதுகில் புடைத்துத் தாத்தினனும். இதெல்லாம் எங்க சின்னண்ணு பார்த்துண் டிருந்தான். அஸல் அந்த ராக்ஷஸனிடம் மறுபடி போகப் பயந்து அன்னிக்கே ராஜிநாமா எழுதி

விட எத்தனித்தது. எங்க சின்னண்ணு தான் "என்னங்காணும் அசட்டுத்தனம் பண்ணுரீர். மாதம் முதல் தேதி சொளே யாக ரூ. 20 யார் எண்ணி வைக்கி ருர்கள்? வேணுமானுச் சொல்லும், மேலதிகாரிகளுக்கு ஒரு பிராது எழுதிப் போட்டு அந்தப்பயலே நாளைக்கே மாத்தி விடரதுக்கேற்பாடு பண்ணி விடுவோம்." என்று சொல்லி அதைத் தேற்றினுன்; மேலும் ஐயரை இரண்டு நாள் லீவு போடச் சொல்லி, அந்தக் கடிதத்தைத் தானே யெடுத்துச் சென்று துரையிடம் கொடுத்து, துரைசெய்த அமக்களத்தில் ஐயருக்கு ஜுரம் வந்துவிட்டதாகத் தெரி வித்ததும், அதற்கவன் வருந்தி, 'நான் கோபத்தில் செய்து விட்டேன். ரொம்ப மன்னிப்புக் கேட்டுக் கொண்டதாக அவ ரிடம் தெரிவியும்' என்று சொன்னதாக வந்து சொல்லிக் கொண்டான்.

அன்னியிலிருந்துதான் வெள்ளைக்காரன் பேச்சை யெடுத்தால் வெட்டணும் எங்கி றது. இவ்வளவு விவரமாகச் சொன்ன கதை யவ்வளவும் கட்டுக் கதை. விக்டோ ரியா மகாராணியார் காலமான தினத்தில் ஊர் முழுதும் அரை நாள் லீவுவிட்டது வாஸ்தவம். அன்றைக்கு ஐயர் ராத்திரி 10 மணிக்கு வீட்டுக்கு வந்தது வாஸ்த வம். மறுநாள் காலேயில் ஜுரம் கண்டு இரண்டு நாள் கச்சேரிக்குப் போகாமலி ருந்ததும் வாஸ்தவம். மற்றதெல்லாம் பிள்ளையாண்டான் கைச்சரக்கு. மகாராணி மாணத்துக்கு முன்பு இருந்தே குடி யரசின் மேன்மையைப் பற்றியும் ராஜாக் கள் அநீதியைப் பற்றியும் எவ்வளவு தரம் எனக்குப் போதித்திருக்கிருர். அப் படி யிருந்தும் அந்தப் போக்கிரியின் வம்புப் பேச்சை என் மாமா முற்றிலும் நம்பிவிட்டார். அதிலிருந்து ஐயரிடத் தில் சற்று அலட்சியம் ஏற்பட அவர் சகபாடிகளோடு உல்லாசமாய்ப் பேசும் காலங்களில் ஐயர் அடிபட்டதை உட னிருந்து பார்த்தவர்போல் மூக்குக் காது வைத்துக் காலக்ஷேபம் செய்வார்.

இவைகளெல்லாம் ஐயருக்குத் தெரி யாது. சுபாவமாகவே வம்பளக்கிற வழக்கமில்லே. ஆபீஸில் 10 மணி உழைப்பதோ டில்லாமல் பத்து வருஷத் துக் கொருதரம் எடுக்கும் ஜனன மரணக் கணக்கு அந்த வருஷம் எடுக்கவேண்டி யிருந்ததால், உத்தியோகஸ்தர்கள் அனே வருக்கும் அது ஒரு அதிவேலேயாக ஏற் பட்டது. ஐயரைத் துலுக்கர்களும் பட்டுநூல் ஜாதியாரும் நெருங்கி யிருந்த பேட்டையில் கணக்கெடுக்க நியமித் தார்கள். பேட்டைக்கு அரை மைலி லுக்கு இப்புறம் போகும்பொழுதே பழங்கஞ்சி வாடையும் கருவாட்டு நாற்ற மும் வாயிலெடுக்கவரும். துலுக்கர்களேப் போய் உங்கள் வீட்டில் எவ்வளவு குழந் தைகள் என்று கேட்டால், "அல்லா கொடுத்திருக்கிருர். உனக்கென்ன, பாப் பான், நீ சோறு போடரையா?" என்று பாய்வார்கள். அப்படி யிருக்க பெண்டு கள் எவ்வளவு என்று கேட்டு ஆள் பிழைப்பதெப்படி? நல்ல வேளேயாக அவர்கள் கோஷாக்களானதால் நேரில் பார்த்து எழுதவேண்டிய அவசிய மில்லே. ஐயர் கெட்டிக்காரர். சராசரி ஒரு குடித்தனக்காரரும் இரண்டு சம் சாரம் வீதம் போட்டுக் கணக்கைச் சரிக் கட்டி விட்டார். பட்டுநூலார் வீட்டில் தொல்லே இன்னும் அதிகம். சாயத்தில் ஊறி நல்ல ரத்தம்போன அந்த ஜனங் களேப் பார்த்தால் ஒருவனுக் கொருவன் வித்தியாசம் கண்டு பிடிப்பது சிரமம். முனிசிபல் கவுன்சிலில் தங்களுக்கு பிரத் தியேக பிரதிநிதி (Representative) வேணுமென்று வெகு காலமாய் அவர்கள் இராஜாங்கத்திற்கு மனுச்செய்து கொண் டிருந்ததால் இந்தக் கணக்கெடுக்கும் சம யத்தில் தங்கள் ஜாதியார் மொத்தத் தொகையை இரட்டிப்பாய் காட்டிவிட வேணுமென்று தீர்மானித்து ஒவ்வொரு வனும் இரண்டு தரமாவது ஐயரிடம் ஆஜராகித் தன்னேப் பதியவைத்துக் கொண்டான். அப்படியே நடக்கிற தென்று அவருக்கு சற்றுச் சந்தேகம் ஏற்பட்டாலும் அதைப் பாராட்டவில்லே. நமக்கென்ன, நஷ்டம் என்று காலரா விளையாடும் அந்தப் பேட்டையில் வேலே யைச் சிக்கிரம் முடிப்பதிலேயே கண்ணு யிருந்தார்.

குஞ்சு

"குகப்ரியை"

குஞ்சுவுக்கு வயது பதினேழு முடிந்திருந்தது. நல்ல அழகி. உயரமும் பருமனும் ஒத்தாற்போலத் தங்கச் சிலைபோலிருந்தாள். சுருண்டு அடர்ந்த கூந்தலை அவிழ்த்தால் முழங்காலை முட்டும். துருதுரு வென்று அலையும் கண்கள் அவள் குழந்தைத் தனத்தைக் காட்டும். எம்பொழுதும் சிரித்த முகம். பரம சாது. கபடமேதெரியாது. யாராவது திடீரென்று பரிகாசத்திற்குப் பொய் சொன்னால் கூட "அப்படியா?" என்று திகைத்து விடுவாள்.

அவளுக்கு 'அப்பா செல்வி' என்பது வீட்டில் தம்பி தங்கைகளால் சூட்டப் பெற்ற பெயர். ஆனால் சாஸ்திரியார் அவள் மேல் அபாரமான பிரீதி வைத்திருந்ததென்னவோ உண்மை. ஆபீஸிலிருந்து வீட்டிற்கு வந்து நுழையும் போதே "குஞ்சப்பா! என்ன சங்கதி?!! என்னும் குரல் சர்வ சாதாரணமாய்க் கேட்கும். பாட்டி எப்பொழுதாவது "என்ன! குஞ்சுதான் ஆளப்பொறந்தவளாக்கும். என்று கேட்டுவிட்டால் அவர் முகம் சுண்டிவிடும். "இல்லேன்னா அவ அதிர்ஷ்டக் குட்டி. அவள் பொறந்த பிறகுதான் நல்ல காலம்" என்று சொல்லுவார்.

குஞ்சுவுக்கு இவைகளை யெல்லாம் பற்றிக் கவலையே இல்லை. தன் பள்ளிக்கூட வேலைகளுண்டு தான் உண்டு. தப்பினால் விகடன் பாரதி பாடல்கள் இவைகள்தான் அவளுக்குத் தெயும். கலியாணத்திற்கு முன் பாரதி பாடல்கள் கூடத் தெரியாது. சீனு தலைதீபாவளிக்கு வந்த பொழுது, "பாரதி" புஸ்தகங்கள் வாங்கி வந்தான்.

சீனு தங்கமான பையன். வேலை யில்லாத கஷ்டத்திற்கு அவன்தான் என்ன செய்வான். எம். ஏ. பாஸ் செய்து வருஷம் இரண்டாயிற்று. பிரயோஜனம் என்ன? சுமாராகக் கிடைத்தாலும் போகச் சித்தமாயிருந்தான். கிடைத்தால்தானே.

ஆயிற்று ஒரு வருஷம். சீனுவிடமிருந்து கடிதம் கூட வருவதில்லை. தகப்பனாரைக் கேட்க வாயெடுத்தால் "வாக்கிலே கெட்ட கழுதையைப் போக்கிலே விட்டுத் திருப்பு" எங்கே போய் விடுகிறான்? எல்லாம் தானே ஊரைச் சுற்றிவிட்டு வந்து நிற்பான்" என்பார்.

"ஆமாம். அந்த அசட்டுப்பட்டுக் கிடப்பானை நெனைச்சு நெனைச்சு என்ன வேண்டிக் கிடக்கு. அவன்தானாச்சு ஏண்டீ பாவீ என்று ஒரு காலணா காகிதமாவது போடுகிறானா?" என்று கண்களைத் துடைத்துக் கொள்வாள் பாட்டி. குஞ்சுவுக்கு ஒன்றுமே புரியவில்லை. பள்ளிக்கூடம் போய்க் கொண்டிருந்தபோது கொஞ்சம் ஒரு மாதிரியாயிருந்தாள். படிப்பும் நின்றவுடனே அவள் மனம் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சலிக்க ஆரம்பித்தது. கோபு பிறந்த பிறகு பின்னும் அதிகமாய்த் துன்புறலானாள். பெரும்பாலும் அழுதகண்தான்.

'குஞ்சா, குஞ்சப்பா' என்று உரத்த குரலில் கூப்பிட்டார் ராஜு சாஸ்திரிகள். கண்களைத் துடைத்துக் கொண்டு "இதோ வந்துட்டேன்" என்று எழுந்தோடினாள் குஞ்சு.

"கல்கத்தாவிலிருந்து ஒரு கவர், சீனுவின் கையெழுத்துத்தான் போலிருக்கு" என்று 'சூள்' கொட்டிவிட்டு ஒரு கடிதத்தை அவள் கையில் கொடுத்தார். குஞ்சுவின் முகம் மலர்ந்தது. ஆனந்த மிகுதியினால் இதயம் தடதடவென்று அடிக்கலாயிற்று. கால்களும் கைகளும் வெடவெடவென உதற அடிமேல் அடி வைத்துத் தன் அறைக்குள் நுழைந்தாள் குஞ்சு.

* * *

இரவு முழுவதும் அவளால் தூங்கவே முடியவில்லை. குழந்தைக்குப் பால் புகட்டக்கூட அவளால் எழுந்திருக்கவும்

முடியவில்லை. கலியாண மானதிலிருந்து நடந்த ஒவ்வொரு சிறு சம்பவமும் ஒவ்வொன்றாய் அவள் மனக் கண்களின் முன்பு தோன்றித் தோன்றி மறைந்துகொண்டிருந்தன. கல்கத்தாவுக்குப் புறப்படும் முன் தனக்கு எழுதியிருந்த கடிதமும், மோதிரத்தை விற்றுவிட்டுக் கல்கத்தா போனதும் — அது எப்படியோ சாஸ்திரிகள் காதுகளுக் கெட்டி அவர் செய்த அமளி குமளியும் ஒவ்வொன்றாய் நினைவுக்கு வரக் கண்களில் கண்ணீர் ததும்பலாயிற்று. வருங்கால வாழ்க்கையைப் பற்றி ஸந்தோஷ மிகுதியினால் அவள் நெஞ்சு பூரித்தது. குழந்தை கோபுவைத் தோளிற் சாற்றித் தன்னைக் கைலாகு கொடுத்து அழைத்து சீனு வண்டியிலேற்றுவது போலவும், உன்னதமான வீட்டில் தன்னை மிருந்த உயர் நிலையில் வைத்திருப்பதுபோலவும் கற்பனை செய்து பார்த்து ஆனந்தப் பட்டுக்கொண்டிருந்தாள் குஞ்சு.

குழந்தை கோபாலன் விளக்கொளியைப் பார்ப்பதிலேயே ஈடுபட்டவனாய்க் கைகளையும் கால்களையும் உதைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தான்.

* * *

குஞ்சுவின் ஒன்றுவிட்ட அத்தை சேசி, கல்கத்தாவில் பவானிபூரில் குடியிருந்தாள். அவளுக்கு ஒரே பிள்ளை. அவனுக்கு அங்கேயே ஏதோ ஒரு கம்பெனியில் வேலை. சீனு, குஞ்சுவுக்குத் துணையா யிருக்குமென்று அவர்களுடன் கூடவே குடியிருக்க ஏற்பாடு செய்திருந்தான்.

சீனுவை ஸ்டேஷனில் கண்டதும் 'ஓ' வென்று அழுது விட்டாள் குஞ்சு. மூன்று நாள் பிரயாணம், பட்டினி, பசி அலுப்பு எல்லாம் சேர்த்து அப்படியே துவண்டு வாடிக்கிடந்தாள். குழந்தை கோபு சீனுவிடம் போக மறுத்து விட்டான். எப்படிப் போவான்? முன் பின் பார்த்திருந்தால் தானே.

அத்தை ஆசார உபசாரம் செய்தாள். அத்தானைப் பற்றியோ கேட்கவேண்டிய தில்லை. குஞ்சு தன்னிடம் வந்து சேர்ந்ததில் அசாத்தியப் பெருமை.

கல்கத்தாவிற்கு வந்து ஐந்தாறு மாதங்கள் தான் ஆகியிருக்கும். குஞ்சுவுக்கு வந்தபொழுதிருந்த உற்சாகமும் ஆர்வமும் குறைந்து விட்டது. காலை எட்டடிக்கு முன் சீனு வெளியே போவான், பகல் 12 மணிக்குச் சாப்பிட வருவான். இரண்டு வாய் அவசர அவசரமாக அள்ளிப் போட்டுக்கொண்டு ஓடி விடுவான். பிறகு திரும்பிவர இரவு 10 மணிதான்.

சிறு பெண். குழந்தைவேறு. ஒன்பதடிக்கு முன்னேயே இன்னும் வரவில்லையே என்ற ஏக்க முண்டாய்விடும். சாவகாசமாய்ப் பேசும்பொழுது, "என்னதான் வேலையோ அவ்வளவு நேரம் வரையில்" என்று கேட்க வாயெடுப்பாள். ஆனால் கேட்கக் கூசுவாள்.

சாப்பாடானதும் ஒரு கற்றைக் கடிதங்களை வைத்துக்கொண்டு எழுதி எழுதிக் குவிக்க ஆரம்பித்து விடுவான். விடுமுறை நாட்களிலோ ஒரே நண்பர்கள் கூட்டம். அரட்டைக் கச்சேரி, சில சமயம் நண்பர்களையாவது எழுதுவதையாவது கண்டால் அவளுக்கு அசாத்ய கோபம் வந்துவிடும். அவர்களைத் தன் உரிமையை அபகரிக்கும் எதிராளிபோல் பகைப்பாள். அவள் நெஞ்சு குமுறும்.

குஞ்சுவுக்கு சுபாவத்திலேயே கொஞ்சம் பேச்சு பிடிக்கும். அதிலும் தன் புருஷனுடன்கூட ஆர அமரப் பேசுவதற்கில்லையே என்று அவள் மனம் துடிக்கும். பிறகு கோபமாய் மாறி அழுகையில் வந்து முடியும். சீனு அவளுக்கு ஒருவிதமான குறையும் வைக்கவில்லை. ஆனால் அவள் நெஞ்சு மட்டும் குறைப்பட்ட வண்ணம் புலம்பிக்கொண்டே இருக்கும்.

அத்தான் ராமு நல்லவன்தான், ஆனால் தானே மேதாவி மற்றவர்கள் மட்டம் என்றெண்ணும் சுபாவமுள்ளவன். ஏற்றாற்போல் கொஞ்சம் சுலபமானவேலை. காலை பத்து மணிக்குப் போய் மாலை ஆறு மணிக்கு வந்துவிடுவான். அத்தையைப் பற்றிக் கேட்கவேண்டியதில்லை. ஓயாமல் பெருமை யடித்துக்கொள்ள ஆரம்பித்து விடுவாள்.

இரவு பத்து மணி. ஊர் ஓசை அடங்கி விட்டது. குஞ்சு கட்டிலிற் படுத்துப் பொய்த்தூக்கம் தூங்கிக் கொண்டிருந் தாள். சீனு விளக்கடியில் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தான். அவன் முகத் தில் ஸந்தோஷம் தாண்டவமாடிக் கொண் டிருந்தது. வெற்றியை எதிர்பார்த்து உறுதியுடன் செல்லும் வீரனேபோல் அவன் பேனு கிறு கிறு வென்று எழுதிக் குவித்துக் கொண்டிருந்தது.

குழந்தை தொட்டிலிலிருந்து முண கினன். குஞ்சு வேண்டுமென்றே பேசா மல் படுத்திருந்தாள். பேனவை வைத்து விட்டுக் கைகளை நீட்டிச் சோம்பல் முறி த்தவண்ணம் எழுந்தான் சீனு. குழந்தை யை எடுத்து படுக்கையிற் கிடத்தித் தட் டித் தூங்கவைத்தான். அவளுக்கு ஏதா வது உடம்பு அசௌக்கியமோ என்று சந்தேகித்தவனுய் அவள் நெற்றியில் புறங்கையை வைத்துப் பார்த்தான். குஞ்சுவின் உடல் புளகித்தது. பிறகு போர்வையை எடுத்து அவளுக்கு நன்று ய்ப் போர்த்திவிட்டு மறுபடியும் மேஜையி னருகில் உட்கார்ந்தான்.

நடிகாரத்தின் 'டக் டக்' ஓசையைத் தவிர வேறெருசத்தமுமில்லை. அவன்காகி தங்களைப் புரட்டும்போது எழும் சத்தம் கூட குஞ்சுவுக்குப் புயல் அடிப்பதுபோல் கேட்டது. அவள் மனம் முழுவதும் தான் பகலில் கேள்விப்பட்ட விஷயங்களி லேயே ஈடுபட்டிருந்தது. எம். ஏ. பாஸ் செய்த தன் புருஷன் கேவலம் டாக்ஸி ஓட்டுகிரு னென்று நினைக்க நினைக்க அவள் நெஞ்சு தடதடவென்று அடிக்கத் தொடங்கிற்று. தொழில் செய்து ஜீவிக்க வேண்டியதுதான். ஆனல் கௌரவம் வேண்டாமா? என்ற கேள்வி எழும். இல்லாவிட்டால் அப்பா மாப்பிள்ளைக்குப் பெரிய உத்தியோகம் வாங்கி வைத்து விட்டாராக்கும், என்ற பதிலும் தானே எழும். அதைப் பற்றியாவது ஒழி யட்டும். "ஆமாம், இரவு 10 மணி மட்டும் என்ன பிரமாத வேலே? எங்கேயாவது சித்பூர் ரோடில் பழி கிடப்பான். ஏதடா சிறுசாயிற்றே வீட் டிலே தனியே விட்டுவிட்டுப் போகி றேமே என்று இருந்தால்தானே. செங் கரும்பை வெட்டிச் சிறையிலடைத்ததைப் போல் இங்கே கொணர்ந்து அடைத்து விட்டான். இந்த மட்டும் நீயும் நானு மாவது இருக்கிறேமே பேச்சுத்துணைக்கு! இல்லாவிட்டால் பாஷை தெரியாத ஊரில் சின்னஞ்சிறுசு என்ன செய்யும் தேமேன்னு பாவம்!" இந்த வார்த்தைகள் திரும்பவும் திரும்பவும் அவள் மனதில் தோன்றின.

ஆனல் சீனு முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் "சீ, சீ, அந்த மாதிரி ஒரு நாளும் இராது. கிழங்களே சும்மா மனம் போனபடி பிதற்றும்" என்று எண்ணு வாள். மறு விளுடி "இராது, அத்தான் ஏதாவது கேள்விப்பட்டிருக்கலாம், அதை ரகஸ்யமாகத் தாயாரிடம் தெரிவித்திருக்க லாம்" என்று தோன்றும். கடைசியில் சீனுவையே கேட்டு விடலாமென்று துணி ந்து படுக்கையினின்றெழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

புன் முறுவலுடன் அவள் அருகில் வந்து, "என்ன குஞ்சு? உடம்பு சரியில்லே யா?" என்று கொஞ்சம் குரலில் கேட்ட வனுய் அவள் குனிந்த தலையை முகவாய் பற்றித் திருத்தினன் சீனு. அவள் கண் களில் கண்ணீர் ததும்பியது.

"ஏன்? என்ன?" என்று மிகுந்த பதை பதைப்புடன் கேட்டான்.

"ஒன்று மில்லே" என்று குஞ்சுவின் வாய் சொல்லிற்று. அவள் கேட்க எண் ணியவைகள் தொண்டையை விட்டு வெளியேவர மறுத்தன. "என்ன சங்கதி? சொல்லேன்" என்று மறுபடியும் அன்பு கலந்த குரலில் கேட்டான் சீனு.

அவனது சொற்களைக் கேட்க, முன் னிருந்த சந்தேகங்களெல்லாம் ஒரு நொடி யிற் பறந்து விட்டன. சே, சே இப்படிப் பட்டவரை அசட்டுப் பிசட்டென்று கேட்டு மனநோகச் செய்யலாமா? என்று தோன்றிவிட்டது. அதற்கு முற்றுப் புள்ளி வைப்பதேபோல் தத்தை பித்தை, தத்தாவென்று உளறியவனுய் விழித் தெழுந்தான் கோபு.

குஞ்சுவுக்கு பெங்காலியும் ஹிந்தியும் கற்றுக் கொடுப்பதற்காகப் பாடப் புத்தகங்கள் வாங்கியிருந்தான் சீனு. என்றைக் காவது சற்று ஓய்வு இருந்தால் சொல்லு வான். ஓயாமல் வெளியே போவதும், வருவதும், சாப்பிடுவதும், தூங்குவதும், அவன் வேலே இந்தமாதிரி வாழ்க்கை குஞ் சுவுக்கு அலுத்துப்போயிற்று.

தவிர, அத்தை "நாளேக்கு என் நாட் டுப் பெண் வந்தால் எப்படிக் கண்ணிலே வைத்து இனிமையாய் மூடிக்கொண்டிருப் பேன் தெரியுமா? துளியாவது அருமை பெருமை தெரிந்தால்தானே. எதிராத்து சாஸ்திரியையும் அவனகமுடையாளேயும் பாரு. தலேநிறைய கட்டுப்பூவும் காலில் செருப்பும் தனியாய் எப்படி 'வாக்கிங்' போறு பாரு" என்று தொடங்கி விடு வாள்.

குடம் பாலுக்குத் துளி பிரைதானே. நாள் செல்லச் செல்ல சீனு தன்னே நிரம் பவும் கேவலமாய் நடத்துவதாகத் தோன் றலாயிற்று. அவன் சகஜமாய்ச் சொல் லும் சிறு வார்த்தைகளேக்கூடக் கபடம் என்று எண்ணலானுள் குஞ்சு. அத்தான் பெரிய மேதாவி, சீனு ஏதோ அவன்கால் தூளிக்குச்சமானம் என்றுகூட சிலசமயம் அவளுக்குத் தோன்றிவிட்டது. காளா னுக்கும் புல்லுருவிக்கும் கிளேகூட வெட்ட வேண்டுமா என்ன? குஞ்சு வேறு புதிய குஞ்சுவாகி விட்டாள். 'சொல்லக் கொதிக்குதடி நெஞ்சம்' வெறும் பேச்சுக்கோ வந்ததிப் பஞ்சம், என்ற அடிகள் சீனுவைப் பார்க்கும் பொழுதெல் லாம் அவள் மனத்துள் எழும்.

விடுமுறை நாட்களில் சீனுவின் வரு கையால் மலரும் அவள் முகம், அத்தான் வருகையால், மலரத்தொடங்கியது. சுபா வத்திலேயே அவன் தமாஷாகப் பேசக் கூடியவன். அதுவும் குஞ்சுவின் ஸந்நி தானத்தில் கேட்க வேண்டுமா? தன் பேச்சுத்திறமை முழுவதையும் அப் படியே அவள் பாதங்களில் கொட்டி விடு வான். குட்டிவிகடங்கள், பாரதி பாடல் கள் எல்லாம் அவன் பேசும்பொழுது சர்வ சாதாரணமாய் வரும். குஞ்சு வாய் திறந்தபடி மலர்ந்த கண்களுடன், ஆனந்த மாய் அவன் பேச்சைச் சுவைத்துக்கொண் டிருப்பாள். கோபு அத்தையிடம் உட் கார்ந்து "கிருஷ்ணு, ராமா, கோவிந்தா" கொட்டிக்கொண் டிருப்பான். அத்தைக் குக் கொஞ்சம் விஷயம் தெரியும். "ராமுவை பாரிஸ்டர் பரீட்சைக்கு அனுப்பியிருந்தால் நாட்டன் தொரை கெட்டான். அவனுக்கு மேலே வந்திருப் பான். என் தோசி அதிட்டம். கண்ணுன குழந்தை. கடுகத்தனே குழந்தை. கம் பெனி வேலேக்குக் கர்தவழி வந்திருக்கு" என்று பெருமூச்செறிவாள்.

3

அன்று சாப்பிடும் பொழுது சீனுவுக் குக் கொஞ்சம் சாவகாசம். குஞ்சு குழா யடியில் கையலம்பிக் கொண்டிருந்தாள். கோபு அப்பளத்தைக் கையில் ஏந்தியவ னய்த் தத்தித்தத்தி நடந்துகொண்டிருந் தான். தான் அடைந்திருக்கும் உயர் பத வியைப் பற்றிக் குஞ்சுவிடம் சொல்லச் சீனுவின் நெஞ்சு துடிதுடித்தது. குஞ்சு அதிர்ஷ்டக்காரி என்று தானே சொல்லிக் கொண்டான்; அவள் வந்து சாப்பிட உட்காரும் வரையில் காத்திருந்தான். ஆடிப்பாடி, மெள்ள வந்து தன் இலேயில் பறிமாறிக் கொண்டாள் குஞ்சு.

"குஞ்சா" குஞ்சு திடுக்கிட்டாள். எப்பொழுதாவது ஆனந்த மீறிப்பேசும் போதுதான் குஞ்சா என்று கூப்பிடுவது வழக்கம்.

"நாமெல்லோரும் அடுத்த மாதம் டில் லிக்குப் போனுலும் போவோம்." அவன் பேச்சில் ஒரே ஆனந்தம் ஒலித்தது. குஞ்சு நிமிர்ந்து பார்த்தாள். அவள் முகத்தில் ஒரு விதமான மாறுதலுமில்லே. "டில்லிக்கா? எதுக்கு?" என்று சாவதான மாய்க் கேட்டாள்,

சீனு அதைக்கூட கவனிக்கவில்லே. "டில்லி எப்படிப்பட்ட ஊர் தெரியுமோ?"

"தெரியாமலென்ன, திவ்வியமாய்த் தெரியும்." என்று சொல்லிவிட்டு, சொல்லி விட்டோமே என்று எண்ணுபவள்போல் வாயை மூடிக்கொண்டாள்.

"இன்னும் கூடிய சீக்கிரத்தில் புறப்பட வேண்டியிருக்கும். பதில் வந்ததும் தெரியும்" என்றான் சீனு. குஞ்சு பதிலே பேசவில்லை.

டில்லி இன்னும் தொலை தூரமாயிற்றே என்று கவலைப்படுகிறாளோ என்று எண்ணியவனாய் "உனக்குப் பிடிக்காவிட்டால் சொல்லிவிடம்மா! பணம் போனால் போகிறது. வந்தது போதும். இங்கேயே இருந்து விடுவோம்" என்றான்.

அதற்கும் பதிலில்லை. "என்ன குஞ்சு, உன்னை உத்தேசித்துத்தான் ஏற்பாடு செய்தேன். வேண்டுமென்றால் சொல்லிவிடு."

"ஆமாம் ரொம்பக்கரிசனம். என்னை உத்தேசித்துத்தானாக்கும்" என்றொரு குரல் மனத்துள் எழுந்தது. சமாளித்துக் கொண்டு "உங்களிஷ்டம் எப்படியோ அப்படி! எனக்கென்று தனி இஷ்டம் வேறு."

சீனுவுக்குக் கொஞ்சம் கலக்கம். ஏன் இவளுக்கென்ன. பிறந்தகத்தை நினைத்துக் கொண்டாளா? ஐயோ பாவம்! அவளை முழுவதும் தெரிந்து கொள்ள முடியவில்லை. என்னமோ பொழுதிற்கும் வேலை சரியாய் விடுகிறது. எல்லாம் இன்னும் ஒரு வாரம், அப்புறம் அவளே பிரமித்துவிடுவாள்" என்று தானே சொல்லிக்கொண்டான்.

* * *

"உள்ள நிறைவிலோர் கள்ளம் புகுந்திடில் உள்ள நிறைவாமோ?" என்று பாடிக்கொண்டே உள்ளே நுழைந்தான் அத்தான். குஞ்சுவுக்குச் சுறுக்கென்றது. அந்தப் பாடல் தன்னையே குறிக்கிறதென்று தோன்றிற்று. அன்று காலை தகூஷிணேஸ்வரம் போய் வந்த அலுப்பு. அத்தை அபூர்வ ராகங்களில் குறட்டைவிட்டவளாய் நித்ராதேவியை உபாசித்துக் கொண்டிருந்தாள்.

"குஞ்சு! நீ என்ன தயார்தானா? அப்புறம் ஆலே தோலே என்ன மாட்டாயே? என்ன? மனத்திலிருப்பவைகளைச் சொல்ல இந்த வீட்டிலிடமில்லை. அம்மாவும் உன் புருஷனும் மாறிமாறிக் காவலாய் விடுகிறார்கள். இதற்காகவேதான் அவளை இன்று காடுமேடெல்லாம் சுற்றியடித்துக் கூட்டிப்போனேன். வந்த பிறகு ஒன்றும் சஞ்சலப்படமாட்டாயே? நான் உன்னை எப்படி நடத்துவேன் என்பதைப்பற்றி நீ ப்ரத்யக்ஷமாய்ப் பார்க்கப் போகிறாய். கழுதைக்குத் தெரியுமோ கற்பூர வாசனை? அவனுக்கு உன் உயர்வை அறியவோ அனுபவிக்கவோ யோக்கியதை ஏது? புறப்படு. நகைகளை வேணுமானால் கொண்டுவா. இல்லாவிட்டால் இங்கேயே இருக்கட்டும்.

"புறப்படு, புறப்படு. டாக்ஸி தெருக்கோடியில் நிற்கிறது. சால்வையை எடுத்துப் போர்த்துக் கொள்" என்று துரிதப் படுத்தினான் ராமு. குஞ்சுவின் கால்கள் வெட வெட வென்று உதறலாயின. "எனக்கு என்னமோ செய்கிறது. வயிற்றைப் பெறட்டுகிறது. தலை சுற்றுகிறது" என்றாள். "சீ, சீ அது ஒன்றுமில்லை வெறும் பயம். இவ்வளவு தூரம் சொல்லி டிக்கெட் முதற்கொண்டு வாங்கி, வீடு பார்த்து எல்லாம் செய்து விட்டு இப்பொழுது பின் வாங்குகிறாயே? பெண்களுக்கே ஸ்திர புத்தி கிடையாது" என்றுமுகத்தைச் சுளித்தான் ராமு.

"இல்லை இல்லை! இதோ புறப்பட்டு விடுகிறேன். ஏதோ சில முக்கியமானவைகளை எடுத்துக்கொண் டிருக்கிறேன். ஒட்டியாணம் அவர் பெட்டியி லிருக்கிறது."

"நகையைப்பற்றி யார் கேட்டார்கள். புறப்படு சீக்கிரம்."

"இதோ கோபுவை எடுத்துக்கொண்டு வருகிறேன்."

"அட கண்ட்ராவியே! அது எதற்கு? அதையும் எடுத்துக் கொண்டா வரப்போகிறாய்? ராமேஸ்வரம் போயும் சனீஸ்வரன் விடவில்லை என்று?" என்றான் பரிகாசச் சிரிப்புடன்.

அதே சமயத்தில் "அம்மா!" என்ற கோபுவின் குரல் அவள் காதுகளில் விழுந்தது. குஞ்சுவின் கண்கள் திறந்தன. குழந்தையைத் துச்சமாய் நினைத்த அவன் உண்மை உரு, ஒரு நொடியில் விளங்கி விட்டது. தாயின் அன்பே வென்றது. அம்மா! அம்மா வென்று வாய்க்குள்

தானும் சொல்லிக் கொண்டாள். அம்மா வென்ற அந்தச் சர்வ சாதாரணமான உட் கருத்து அப்பொழுதுதே அவளுக்குப் புலனாயிற்று.

"வாடா கண்ணு!" என்று ஆர்வமிருந்த குரலிற் கூவியவளாய் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து குழந்தையை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள் குஞ்சு. அவள் கண்களி னின்றும் கண்ணீர் தாரை தாரையாய் பெருகத் தொடங்கிற்று.

("ஊம், ஊஹூம்" என்று உறுமிய வண்ணம் தன் அறைக்குட் சென்று தொப்பென்று கட்டிலில் விழுந்தான் ராமு.)

விம்மி விம்மி அழுதவளாய்க் கட்டிலில் உட்கார்ந்திருந்தாள் குஞ்சு. மழை பாட் டம் பாட்டமாய்ப் பெய்வதைப் போல் சற்று உரத்து அழுவதும், மறுபடி அடங் குவதும், மறுபடி அழுவதுமா யிருந்தாள் குஞ்சு. உடல் முழுவதும் பயத்தினல் தெப்பமாய் வியர்த்திருந்தது. கை கால் கள் வெட வெட வென்று உதறின. சம் மட்டி கொண்டு அடிப்பதே போல் அவள் நெஞ்சு படீர் படீர் என்று அடிக்கத் தொடங்கிற்று. தாங்க முடியாத வேத னையினல், கோபுவை இறுகத் தழுவிக் கொண்டாள்.

இரண்டு நிமிஷந்தான் ஆகியிருக்கும். வாசலில் பம், பம், பம் என்று மோட்டா ரின் ஹாரன் கேட்டது. சீனுவின் கார் தான். வழக்கத்தைவிட முன்னதாகவே வந்து விட்டான். குஞ்சு எழுந்து பார்த் தாள். எழுந்திருக்க முடிந்தால் தானே.

"குஞ்சாளு!" என்று மிகுந்த ஆனந் தத்துடன் கூவியவனாய் இடது கையின் மேல் கிடந்த ஒரு பெரிய ரோஜா மாலையும் கொண்டு உள்ளே நுழைந்தான் சீனு.

குஞ்சு திடுக்கிட்டாள். அவளுக்கு உலகமே சுற்றுவது போல் தோன்றிற்று. மாலையை நாற்காலியின் கைப்பிடியில் போட்டுவிட்டு அவளருகே குனிந்து, "குஞ்சு, டில்லியில் 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' ஸில் ரூ 300 சம்பளம். ஒரு நாளைக்கு 3 மணி நேரம்தான் வேலை. நம் இஷ்டப்படி ஊர் முழுவதும் சுற்றலாம். சிம்லாவுக்குப் போகலாம். உனக்கு எங்கே வேண்டுமானலும் போகலாம். அப்பாடா. இத்தனை நாளாகப்பட்ட சிரமத்திற்குச் சரி யான பலன் கிடைத்து விட்டது" என்று மளமள வென்று அடுக்கிக் கொண்டே போனன். ஆனந்த மிகுதியினல் வாயி லிருந்து வார்த்தைகள் ஒன்றை ஒன்று மோதி இடித்துக் கொண்டு வெளியே வந் தன.

"அப்படியா!" என்று எழுந்திருக்க முயன்ருள்.

"திடீரென்று சொல்லி உன்னைத் திகைச் செய்ய வேண்டு மென்றுதான் முன்னடி சொல்லவில்லை. என்ன? உனக்கென்ன உடம்பு?" என்று சொல்லியவனாய் அவ ளருகி லுட்கார்ந்து இரு கரங்களாலும் பற்றித் தூக்கினன் சீனு.

கரங்களில் முகத்தைப் புதைத்தவளாய் ஓவென்று கதறிவிட்டாள் குஞ்சு.

உனக்குத் தெரியுமா?

நமது வருஷாந்தர ஏற்றுமதி

ஜெர்மெனிக்கு—எட்டரைக்கோடி ரூபாய்.

ப்ரான்ஸுக்கு—ரூபாய் ஆறே கால் கோடி.

ஆனல் ஜெர்மெனி நாலரைக்கோடி ரூபாய் மதிப்புள்ள சாமான்களை நமக்கு விற்கிறது. இதனல் நம் தேசத்துக்கு லாபமே கிடையாது.

1938-39ல் ரூபா முப்பது கோடி பெறுமானமுள்ள சாமான்கள் ஐரோப்பா வுக்கு ஏற்றுமதியா யிருக்கின்றன. ஏழ ரைக் கோடி ரூபா பெறுமானமுள்ள சணல், பருத்தி ஐந்தரைக்கோடி ரூபா, எண்ணெய் வித்துக்கள் ஆறரைக்கோடி ரூபா. பதனிடப்படாத தோல்கள், எண்ணெய்ப் பிண்ணக்குகள் எழுபத்தி ரண்டு லக்ஷம். யுத்த நெருக்கடியினல் மார்க்கெட் சரியான நிலையிலில்லை.

அதனல் வியாபாரம் பாதிக்கப்படா திருக்கவேண்டி இந்தியா கவர்ன்மெண்ட் அமெரிக்காவின் மூலம் மார்க்கெட் நெருக் கடியைத் தீர்க்கத் தீர்மானம் செய்து வருகிறது.

பகவான்

(ஸ்ரீ ஐயாவையர், மணிக்குடி)

இந்த ஜகத்தைச் சிருஷ்டி செய்து அதன் மூலமாக அநேக லீலா விநோதங்களைச் செய்து உலகத்தைக் காக்கும் கடவுளுடைய கருத்து என்ன? நம்மைக் கெடுக்க வேண்டு மென்பதா? அல்லது நல்ல வழிக்குக் கொண்டுவந்து பரிபாலிக்கவேண்டு மென்பதா?

பகவான் நம்மை ரக்ஷிப்பதென்பது ஒரு மனிதன் கோலெடுத்து மாடுகளை ரக்ஷிப்பது போல வல்ல. சாஸ்திரங்களை ஏற்படுத்தி அவைகளில் நல்ல வழிகளைக் கற்பித்து ஒரு குருவின் மூலமாக நாம் அவைகளை யுணர்ந்து கொள்ளும்படியாகக் கடவுள் நமக்கு வழிகளை ஏற்படுத்தி யிருக்கிறார்; அதற்கநுகூலமாக நமக்குப் பஞ்சேந்திரியங்களையும் கொடுத்திருக்கிறார்.

நாம், சாஸ்திரங்களை அறிந்து கொள்ளாமல் இந்திரியங்கள் போகும் வழியில் நாமும் சென்று சாஸ்திர விரோதமான பாப காரியங்களைச் செய்து பகவானுக்கு விரோதியாகிறோம்.

கூலிவேலை செய்யும் ஒருவனுக்கு அவன் வேலை செய்தவுடனேயே கூலி கொடுப்பது முண்டு; கொஞ்ச நாட்கள் சென்றபிறகு கொடுப்பது முண்டு. அதுபோலவே பகவான், இந்த தேகம் போய் வேறு தேகம் வந்தவுடன் முன்பிறப்பில் செய்த கெட்ட காரியங்களுக்குப் பலனைக் கொடுக்கிறார். நாம் பூர்வ கர்மானுசாரமாகத் துன்ப மனுபவிக்கும் பொழுது பகவானைப் பழிக்கிறோம்.

பகவான் தானாகவே ஒரு செயலைச் செய்வதுமில்லை; அதன் பலனை அனுபவிப்பதுமில்லை. கடவுள் எங்கும் நிறைந்த ஆநந்த ரூபமாக விளங்குகிறார். உலகில் அவரைத்தவிர வேறொரு வஸ்துவும் கிடையாது.

பகவானிடத்தில் ஸ்ருஷ்டி—அதாவது உலகத்தை உண்டாக்குதல் முதலான செய்கைகள் கிடையா. ஆனால் இச் செய்கைகள் அவன் சக்தியான மாயையினாலேயே செய்யப்படுகின்றன.

ஒருவன், ஒரு திருடன் தன்னைப் பிடித்துத் தூணில் கட்டித் தன் சரீரத்தில் ஊசி யேற்றுவது போல் கனவு காண்கிறான். தன் பந்துக்களாவது நண்பர்களாவது தன்னைத் திருடனிடமிருந்து காப்பாற்றக் கூடாதா என்று நினைக்கிறான்.

கனவிலிருந்து விழித்தவுடன் கனவில் திருடனிடம் அகப்பட்டுக் கொண்டது யார் என்று யோசிக்க வேண்டும். அவன்தான் நாம்—அதாவது ஆத்மா.

நாம் செய்த கர்மப்படி இன்பமும் துன்பமும் நமக்கு உண்டாகின்றன. நாம் இது தெரியாமல் "ஐயோ, தெய்வமே! எனக்கு ஏன் இவ்வளவு துன்பம்? இது அடுக்குமா உனக்கு?" என்று கடவுளை நிந்திக்கிறோம்.

இப்படிப்பட்ட மயக்கந் தெளிந்து உண்மையை அறியமுடியாமல் ஸம்ஸாரம் என்னும் கடலில் உழன்று தடுமாறிக் கதறுகிறோம். ஜீவன் முக்தர்களாகிய வஸிஷ்டர், வாமதேவர் முதலிய ரிஷிகளைத் தவிர மற்ற யாவரும் பசுக்கள்தாம்.

மூன்று தேவியர்

[வே. நாராயணன், எம். ஏ., எம். எல்.]

ஒவ்வொரு மானிடனும் மூன்று கடன்களோடு பிறக்கிறான் என்பது இந்து மதத்தின் அடிப்படையானதோர் கொள்கை. மந்திர தரிசிகளான நம் முன்னோர்களுக்கு நாம் கடமைப் பட்டிருக்கிறோம். அவர்கள் கண்டருளிய மந்திர சாதனைகளாலும் அவை போன்ற சுய முயற்சியாலும் ஞானம் பெறுவதே இக் கடமையைச் செலுத்தும் வழியாகும். வேதாத்தியயனம் முதலியன செய்து ஆத்ம ஞானம் பெற முயன்றால் நமது முன்னோர்களான ரிஷிகளை நாம் திருப்தி செய்தவர்கள் ஆவோம். அதுபோலவே இந்து மதம் நசித்துப் போகாதவாறு நாம் சாஸ்திர விதிகளின்படி விவாக முதலிய ஸம்ஸ்காரங்களைச் செய்து கொண்டு பிரஜோத்பத்தி செய்தோமானால் நம்மைப் பெற்ற பிதிர்க்கள் திருப்தி யடைகிறார்கள். நம்மை சிருஷ்டித்த கடவுள் நம்முடைய கையை எதிர்பார்த்து வாழும் சிலரையும் சிருஷ்டித்துள்ளார். இவர்கள்தாம் தேவர் எனப்படுவார். இவர்களிடம் அநேக சக்திகளைக் கடவுள் அளித்திருக்கிறார். இவர்கள் தங்களை யாகாதி ஸத்கருமங்களால் வழிபடுவோர்க்கு இந்தச் சக்திகளை அளிக்கிறார்கள். இவ்வாறு நாம் இவர்களை வழிபடுவதால் அரிய வரங்களையும், நாம் வழிபடுவதால் இவர்கள் யாகத்தின் அளிக்கப்படும் அவிகளையும் பெற்று விளங்குவதால் ஒரு நிரந்தரமான பண்டமாற்று நடந்து வருகிறது. இதுவே நமது மூன்றாவது கடமை.

நமது நாட்டிலே மழைக் காலம் தொடங்கியதும் இலௌகிக வேலைகள் பலவும் தடைப்படுகின்றன. வயல்களை உழுது பக்குவப்படுத்தி மழைகாலம் தொடங்குவதற்குள் விதைத்து விடுகிறோம். பயிர்த் தொழில் வேலைக்காரர்களுக்கும் சாவகாசம் உண்டு. வியாபாரிகள் பண்டங்களைக் கொள்முதல் விற்றுமுதல் செய்வதற்கு மழை முற்காலத்தில் பெருந்தடையாக இருந்தது. ஆகையால் அவர்கள் மழைக் காலத் தொடக்கத்திலேயே தங்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பி விடுவார்கள். போர்வீரர்களும் யுத்த யாத்திரையாகச் செல்ல முடியாது. எனவே, மழைக் காலத்தை எல்லோரும் தங்கள் பிறவிக் கடன்களைத் தீர்ப்பதற்கு ஏற்ற காலமாகக் கொண்டனர். துவிஜர்கள் அத்தியயன ஆரம்பம் செய்தனர். இதுவே, இப்பொழுது ஆவணியவிட்டச் சடங்காக நடத்தப் பெறுவது. பிதிர்க்களின் கடனை நினைத்து மாளய பக்ஷத்தில் அவர்களைத் தர்ப்பணாதிகளால் திருப்தி செய்வித்தனர். பிறகு நவராத்திரியிலே தேவதைகளை ஆராதிப்பது வழக்கமாயிற்று.

நவராத்திரி பூஜை ஆதியில் வசந்த காலத்திலே நடந்து வந்தது என்று கற்ப நூல்களால் அறிகிறோம். ஆயினும் மேற்சொன்ன பொருத்தத்தை நினைத்தே போலும் இவ்விழா மாளய அமாவாசைக்குப்பின் ஆசரிக்கப்பட்டு வருகிறது.

நவராத்திரி விழாவிலேயே மேற்சொன்ன மூவகைக் கடன்களுக்கும் நிவாரணம் அமைந்துள்ளது. தேவாராதனத்தால் பெறும் சக்திகளையெல்லாம் மஹாசக்தி வடிவமான துர்க்கையின் வழிபாட்டினால் பெறலாம் என்றும் சந்ததியையும் சகல ஐஹிக ஐசுவர்யங்களையும் லக்ஷ்மியின் வழிபாட்டினால் பெறலாம் என்றும் ஆத்ம ஞானத்தையும் அதற்கு அடிப்படையான கல்வி ஞானத்தையும் ஸரஸ்வதி தேவியின் வழிபாட்டினால் பெறலாம் என்றும் தேவ ரிஷி பிதிரர்களுக்குரிய கடன்களைச் செலுத்துவதற்கு ஒரு சுலபமான வழியாக நவராத்திரி விழாவைக் கற்பித்தார்கள் போலும்.

துர்க்கா லக்ஷ்மி ஸரஸ்வதி ஆகிய மூவரையும் வழிபடுதல் அவசியம். ஒப்புயர்வற்ற இந்து பரம்பரை நித்தியத்துவம் பெற்றுச் சகல ஐசுவரியங்களோடும் வாழ வேண்டும். இந்துக்கள் பரம சக்தர்களாக

விளங்க வேண்டும். இலௌகிக ஞானத்திலும் பரமார்த்த ஞானத்திலும் தலை சிறந்தவர்களாக வேண்டும். ஆனால் நமது தமிழ் நாட்டிலே இந்த நவராத்திரி உற்சவத்தை ஸரஸ்வதி பூஜை என்றும் ஆயுத பூஜை யென்றும் சுருக்கி விட்டோம். பூஜையின் உட்கருத்தையும் மறந்தோம். புஸ்தகங்களை அடுக்கி அலங்கரித்து நமஸ்கரிப்பது அன்று ஸரஸ்வதிக் குரிய பூஜை. ஆயுதங்களை விளக்கி அலங்கரிப்பது அன்று ஆயுத பூஜை. இலக்கியக் கலையையும் சிற்ப முதலிய கலைகளையும் சிறக்கச் செய்வதே கலைமகளுக் குரிய வழிபாடாகும், ஸரஸ்வதி பூஜைக் குரிய வழிகளில் ஒன்று புதிய இலக்கியங்களையும் பதிப்பிக்கப் பெறாத பழைய இலக்கியங்களையும் பதிப்பித்தல். மற்றொன்று பழைய சிற்பங்களை பழுதுறா வண்ணம் பாதுகாத்துப் புதிய சிற்பங்களை இயற்றுதலாம். பழைய இசைப் பாடல்களைப் பாடுதல், இசை வளத்தைப் புதிய முறைகளிலே புதிய கானங்களிலேயும் புதிய ஸாஹித்யங்களிலேயும் பெருகுமாறு உதவுதல், புதிய சித்திரங்கள் தீட்டுதல், நாட்டியக் கலையை வளர்த்தல், ஆகியன எல்லாம் ஸரஸ்வதி தேவிக் குரிய பூஜை வகைகளாம். கலைமகளை வழிபடுவது மட்டும் போதாது. தமிழ் மக்கள் திருமகளையும் மலைமகளையும் வழிபடுதலும் அவசியம். இதனை உணராததாலே தான் தமிழ் மக்களாகிய நாம் செல்வம் குன்றியவர்களாயும் சக்தி யற்றவர்களாயும் இருக்கிறோம். மகா சக்தி வழிபாட்டினால் வங்காளிகள் பெற்றுள்ள நலன்களை நாம் கண்கூடாகக் கண்டிருந்தும் இவ்வாறு இன்னும் இருப்பது தகுமோ? பம்பாய் மாகாணத்தினர் செல்வம் படைத்தவர்களாக விளங்குவதி னின்றுமே அவர்கள் திருமகளைப் போற்றி வருகிறார்கள் என்பதை ஊகிக்கலாமே. முயற்சி திருவினை ஆக்கும் ஆதலின் விடா முயற்சியே திருமகளுக்குச் செய்தற் குரிய பூஜையாம். மராட்டிய நாட்டாரின் விடா முயற்சியை மெச்சாதவர் உண்டோ? அவர்களைப் போல நாமும் செல்வ சாதனங்களான பல துறைகளிலும் முயன்று முன்னேறுவோமாக. வங்காளிகளைப் போல சக்தியைப் பிரதானமாகக் கொண்டு பரம சக்தர்களாவோமாக. இவ் வுண்மைகளை நமது தமிழ்க் கவி பாரதியார் தமது பாடல்களிற் பலவற்றிலும், விசேஷித்து "மூன்று காதல்" என்ற பாடலிலும் எடுத்துக் கூறியுள்ளார். அவர் உபதேசத்தை மேற்கொண்டு மகா சக்தியை வேண்டிச் சகல சக்திகளையும் பெற்று, நாட்டின் செல்வத்தையும் நமது செல்வங்களையும் பல முறைகளிலும் இடைவிடாது முயன்று பெற்று அவற்றின் மூலம் இலௌகிக பரமார்த்த ஞானங்களையும் விருத்தி செய்துகொண்டு உடல் பொருள் ஆவி ஆகிய மூன்றிலும் உரம் பெற்று விளங்குவோமாக. நவராத்திரி தினங்களிலே துர்க்கா லக்ஷ்மி ஸரஸ்வதி தேவியரை மும்மூன்று நாள் முறையே பூஜித்து ஆண்டு முழுவதும் இம் மூன்று துறைகளிலும் இடைவிடாது முயல்வதென்று சங்கற்பித்து அந்தச் சங்கற்பத்தை நிறைவேற்றுவதற்குப் பரமனைப் பிரார்த்திப்போமாக.

நோட்டீஸ்

ஈரோடு டி. முன்சீப் கோர்ட்டு

O. S. No. 265/40
I. A. No. 1024/40

சுப்பராய செட்டியார்—வாதி

கருப்ப கவுண்டன் 1.
சென்னிமலைக் கவுண்டன் 2. } பிரதிவாதிகள்
அப்பாச்சிக் கவுண்டன் 3.

ஷை வாதி என்பவர் ஷை பிரதிவாதிகள் பேரில் வெண்கடன் பத்திரப்படி ரூ. 351-6-6 கிடைக்கவேணுமாய் ஷை கோர்ட்டில் தாவா செய்து ஷை தாவா 8-10-40 தேதியில் வாய்தா போடப்பட்டிருக்கிறது. பிரதிவாதிகளுக்கு ஏதாவது ஆக்ஷேபனை யிருந்தால் ஷை தேதியில் கோர்ட்டில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். தவறினால் Exparte ஆக தீர்ப்பு செய்யப்படும் என்பதை அறிவிக்கப்படுகிறது.

(Sd.) R. வெங்கட்ராமய்யர்,
26-9-40 வாதி வக்கீல்.

ச்ருதிமண்டலத்தின் சௌடால் கச்சேரிகள்

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ., பி.எல்.]

ஸ்ரீ அரியக்குடி ராமானுஜ ஐயங்கார்

ஜீர்ண ச்ருதி :—என்ன ஐயர்வாள்! அன்னிக்கு சொல்லுகிறதாக ஆரம்பித்த விஷயம் நின்று போய் விட்டதே. அதை உங்கள் முகமாய் கேட்க வேண்டும் என்று எனக்கு மிக்க ஆவல். என்ன ஞாபகமில்லையா—ராமானுஜ ஐயங்கார் கச்சேரியைப் பற்றி.

ஸர்வ ச்ருதி :—இதெல்லாம் சூட்டோடு சூடாய் கேட்கணும். இப்போது ஆறிப் போன பிறகு கேட்டால் என்னதை சொல்லுகிறது. "காணம் கதம் சுஷ்யதி கர்ண ஏவ, ஸங்கீதகப் ஸைகதவாரி ரீத்யா—" காதில் பட்ட ஸங்கீதம் மணலில் வார்த்த ஜலம் போல் அங்கேயே சோரிப்போய் விடுகிறதல்லவா தா?

ஸுச்ருதி :—அதிருக்கட்டும். எந்த ராமானுஜ ஐய்யங்கார் கச்சேரி?

ஜீர்ண :—இதென்ன ஐயா உம் கேள்வி அதிசயமா யிருக்கிறது—"அரியக்குடி"தான்.

ஸர்வ :—ஸுச்ருதி அண்ணு அதைச் சொல்லவில்லை. இதற்குள் ராமானுஜ ஐயங்கார் கச்சேரியே திருச்சியிலும் சென்னையிலும் பலமுறை நடந்து விட்டதே!

ஸுச்ருதி :—(சிரித்துக்கொண்டு) ஓய் கிழவனுரே! இத்தனை நாள் எங்கே போயிருந்தீர்? எந்த ராமானுஜ ஐயங்கார் கச்சேரியைப்பற்றி பேசுகிறதுங்கணும்? அல்லது, பேசாமலிருந்து விடுவது ஸர்வோத்தமம்.

ஜீர்ண :—(நயந்து) இல்லை தாங்கள் அப்படி சொல்லப் படாது. இந்த ஜீர்ண ச்ருதியை வேறு யார் லக்ஷ்யம் பண்ணி சொல்லப் போகிறுர்கள். இன்றைக்குத் தங்கள் பிரஸங்கத்தைக் கேட்காமல் திண்ணையை விட்டு இறங்க மாட்டேன். பொதுவாய் ஐயங்கார் அவர்களின் குணுதிசயங்களை எடுத்து வர்ணிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

ஸுச்ருதி :—என்னையா பிரஸங்கம். அதிகப் பிரசங்கம்—பாடுகிறவன் பாடி விட்டுப் போகிறுன்—ஏதோ உல்லாஸமாய் சற்று கேட்கிறோம். விஷயம் தெரிந்தவன் ஸுக்ஷ்மமாய் கவனித்துக் கேட்கிறுன். ஜம்பத்துக்கு கேட்கிறவன் மற்றவர் தலையாட்டும் இடம் பார்த்துத் தானும் தலையை அசைத்துப் புன்சிரிப்பு சிரித்து சேஷ்டைகள் செய்கிறுன். ஏதோ கேட்டாகி விட்டால் நம்ப பாடுதான் பெரும் பாடு. வெத்திலைப் பெட்டியை எடுத்துக் கொண்டு "ட்யூஷ"னுக்கு அலைகிறோம். என்ன பிரஸங்கம் வேண்டி யிருக்கு.

ஜீர்ண :—அதெல்லாம் இருக்கட்டும். தற்காலம் ரொம்ப பெரிய பாட்டுன்னு சொல்ராளே — ஏன், வாஸ்தவமாகவே இப்ப யார் இருக்கான் என்கிறீர்.

ஸுச்ருதி :—ஏன் நீரில்லையா, நான் இல்லையா.

ஜீர்ண :—தங்களைப்பற்றித்தான் கேட்கவேண்டிய தில்லையே—அதிருக்கட்டும். அந்த சாரீர ஸம்பத்தும்—

ஸுச்ருதி:—என்ன சாரீர ஸம்பத்து—ஒரு கட்டை ச்ருதியா? அந்த ச்ருதியை வைத்துக் கொண்டு பக்கவாத்தியக்காரர்கள் திணறுகிறது தொழிலாளிக் குன்ரு தெரியும், உமக் கென்ன தெரியும்? மிருதங்கத்தைத் தண்ணியில் நனைத்துவிட்டு வாசிக்கிறது போல் இருக்கிறது. பிடில் வாழை நார் தந்தி போட்டாப்லே ஆகி விடுகிறது—என்னத்தையா வாசிக்கிறது? அவரே பாட வேண்டியதுதான்.

சர்வ :—அப்படியில்லை அண்ணு. அதற்கும் நிறக்கும்படி வாசிக்கப் பக்கவாத்தியக் காரர்கள் இல்லையா என்ன? சௌடய்யா பிடிலை சேர்த்துப் போட்டால் இவர் சாரீரத்திற்கும் அந்த பிடில் நாதத்திற்கும் பொருத்தமாயிருக்கும்.

ஜீர்ண:—இப்ப உங்கள் அபிப்பிராய மென்ன தக்குச்ருதியில் பாடுகிறதினால் பக்க வாத்யக்காரனுக்கு இடைஞ்சலா, அல்லது பரவாயில்லையா?

ஸூச்ருதி:—இடைஞ்சல் தான், அதற்கென்ன ஸந்தேகம்—இருபது முப்பது வருஷம் முன் நாலு கட்டைக்கு குறைந்து கச்சேரி சாரீரமே கிடையாது. இப்போது எல்லாம் இறங்கினதுபோல் சாரீரமும் இறங்கிவிட்டது. இது நாதத்தின் விசேஷம் தான். இந்த ராமானுஜ அய்யங்காரே இருபது வருஷத்திற்கு முன் 4, 4½க்கு பாடிக்கொண்டிருந்தார். அப்போதெல்லாம் பூச்சி ஐயங்கார்வாள் சாரீரம் மாதிரியே இருக்கும். அப்படி மெல்லியதாயும் வெள்ளித் தாளத்தை தட்டினால் எழும் ஒலிபோல் இனிமையான த்வனியுடன் கூடிய சாரீரம் இப்போது கனத்த பாறை போல் தோய்ந்துவிட்டது. அது தான் ஆச்சரியம், பதினைந்து பதினாறு வயதிற்குச் சாரீரம் உடைந்து விரிந்து கொடுக்குமென்று சொல்லுவார்கள். இவருக்கு மத்யம வயதில் சாரீர குணம் மாறியது ஒரு புதுமை.

ஸர்வ:—இது புதுமையானாலும் அவர் விஷயத்தில் குணமாகவே முடிந்தது. மத்யம ச்ருதி சாரீரமாக இருந்தபோது மேல் ஸ்தாயியில் அவருக்குப் பாடுவது இடைஞ்சலாகவிருந்தது. சில சமயம் கீச்சு மூச்சென்று சாரீரம் பிச்சுக்கொள்ளும். தக்கு ச்ருதியான பிறகு மேல் ஸ்தாயி பேச்சுகள் வெகு அழகாக அமைந்திருக்கின்றன. மேலும் சாரீரம் கனம் கொடுத்து விட்டபடியால் மந்த்ர மத்ய தாரஸ்தாயிகளில் எந்த இடத்தில் பாடினாலும் இனிமையாயும் சபை நிறைந்த பாட்டாகவும் இருக்கிறது. சாரீரம் உடைந்ததால் ச்ராவ்யத் தன்மை குறையவில்லை. ரவை ஜாதிகளின் தொடர்களும், ஒதுக்க செதுக்கங்களும், கம்பீரமான நடையில் அமைந்திருக்கின்றன. ஸூச்ருதி அண்ணா சொன்னதுபோல் ஐயங்கார் சாரீரம் கற்பாறையின் இயல்பை உடையது தான். அது தெறித்தால் சிதள் சிதளாய்ப் பறக்கும். தேய்த்தால் மழமழப்பாயிருக்கும். மேலும் கல்லைக்கொண்டு தான் கோபுரமும் கோவில்களின் விசித்திரமான சில்ப வேலைகளும் செய்யப்படுகின்றன. ராமாநுஜய்யங்கார் பாட்டானது நமது தேசத்து பழைய கால "ஆர்கி டெக்சர்" அதாவது கல் தெச்சு கலையைப் போன்றது.

ஒரு கல் தூணை நீங்கள் ஒன்பது நாள் நின்று பரிசோதித்துப் பார்க்கலாம். அப்படியும் உங்கள் அவா அடங்காது. கல்லை வெண்ணெய்போல் உருட்டித் திரட்டி, மடக்கி வளைத்து, துளைத்து, வரிகள் வரைந்து, உருவங்கள் செதுக்கி, உயர நிறுத்தி, பிரும்மாண்டமான மண்டபங்களைத் தாங்கச் செய்திருக்கும் பிராசீன சிலா சிற்பத்தின் விந்தைகளை ராமானுஜய்யங்கார் பாட்டில் காணலாம். அடியில் தேவ கின்னர அப்ஸரஸ்களின் உருவங்களிருக்க அதன்மேல் தாமரை இலை கொடி வேலைப் பாடுகள் தோன்ற மேலே யாளியும் அதன்மேல் யானை படுத்திருக்கும் உருவமும், நீட்டிய யானையின் துதிக்கை மண்டபத்தின் மத்தியில் சென்று அங்கு கீழ் நோக்கி வளைந்து நுனியில் மாங்கனி போல் கரைந்து தோன்ற அக்கனியைக் கடிக்க தலைகீழாய்க் கவிந்து ஒரு கிளி நீட்டிய காத்தில் தொத்தியிருக்கும் நுட்பமும் — பார்த்தவர்கள் மனம் கனிந்து வியப்புற்று நின்று விடுவார்கள். இவ்விதமே ராமானுஜய்யங்கார் ஸங்கீதமும், ஸங்கீத நட்பு உடையோர்க்குத் திகட்டா இன்பமளிக்கும். சில விடங்களில் கல்லை புஷ்ப ஹாரம்போல் வேலை செய்து தொங்கவிட் டிருப்பதுமுண்டு. மேலும் மீனாக்ஷி கோவிலில் இருபத்திரண்டு ச்ருதிகளைக் கொடுக்கும் 22 கல் தூண்கள் ஓரிடத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. கல்லில் "கிண்" என்ற நாத எழுச்சி உண்டு. கற்பொடியைக் கொண்டு சோறு போட்டு மிருதங்கத்தில் ஸூநாதம் பெருவதில்லையா? ஆகையால் அத்தகைய சாரீரத்தில் பெருமை வாய்ந்த பல குணங்கள் இருக்கின்றன. எவ்வித நுட்பமான சித்திர வேலைக்கும் அது ஈடு கொடுக்கிறது.

மேலும் பாடுகிறவர் எந்த கட்டை ச்ருதியில் பாடினால் என்ன? காது நிரம்பியதும், மனோஹரமானதும், செயல்களுக்குப் பயன் படக் கூடியதுமான

சாரீரமாயிருந்தால், கட்டை கணக்கில் என்ன புருஷார்த்தம்? நாலு கட்டை சுருதியில் பாடுகிறவன் கிணற்றில் இருந்து பாடுவதுபோல் இருப்பதில்லையா? இந்த கட்டைக் கணக்கு எப்போ வந்தது? முன் காலத்தில் கட்டையாவது முட்டையாவது? யார் கண்டார்கள்.? ஏதோ பாடுகிறது தான். இப்போதுதான் எங்கே போனாலும் ஸங்கீதத்தைக் கட்டை போட்டு அளக்க ஆரம்பித்து விட்டார்கள்.

ஜீர்ண :—பலே! ஸர்வச்ருதி! பலே! மெச்சினேன். நீ சொல்வதே சரி.

ஸர்வ :—மேலும் ராமானுஜய்யங்காரிடம் அவருடைய குருவிடம் இருந்த ஒரு உயர்ந்த குணம் அமைந்திருப்பது போற்றத் தக்கது. உண்மையான வித்வான் எப்போதும் நிரந்தரமான வித்யார்த்தி என்பது ஞாபகமிருக்கட்டும், இதில் சந்தேகமில்லை. அப்படிப் பார்த்தால் ராமானுஜய்யங்காரைப்போல் உண்மையான வித்வான் கிடையாதென்று சொல்லலாம். அவர் ஒரு ஸங்கீதக் களஞ்சியம். "ரத்னகரம்" என்று அவருக்கு பட்டமளித்தவர் என்ன அர்த்தத்தை நினைத்துக் கொண்டு அளித்தார்களோ எனக்குத் தெரியாது—ஆனாலும் பொதுவாக ஸங்கீத வித்வான்கள் லௌகீக ப்ரமுகர்களைப் போல் பட்டத்தை வாங்கி சாத்திக்கொள்வது வெட்கக்கேடு என்று என்னுடைய அபிப்பிராயம்.

ஜீர்ண :—ஏனையா அப்படி?

ஸர்வ :—அதிருக்கட்டும். பின்னால் ஒரு சமயம் அதைப்பற்றி விஸ்தரிப்போம். ராமானுஜய்யங்கார் ஒரு உருப்படி களஞ்சியம் ஒரு ஸங்கீத "லைப்ரரி". அவருக்குப் பாடமில்லாத கீர்த்தனங்களோ, தமிழ் பாட்டுக்களோ, மற்ற துக்கடாக்களோ அதிகம் சஞ்சாரத்தில் இருக்காது. அப்படியிருக்கிறதாக தெரிந்தால் அவர் அதையும் உடனே பாடம் செய்து விடுவார். இந்தப் பெரும் பசி அவருக்கு பெருமையை யளிக்கிறது. அவர் இனிப் புதுப்பாடம் பண்ணி ஆகவேண்டியதில்லை. ஆனாலும் ஸங்கீதத்திற்கு அர்ப்பணம் செய்த ஆயுளை அவர் கணமும் வீண்போக்குகிறதில்லை. ஆரம்பத்தில் அவர் பாடினசுருதிகளையே பாடுகிறார் என்று குற்றம் சொல்வதுண்டு. அது குற்றமல்ல. ஏனென்றால், ஆரம்பத்தில் க்யாதிபெற வேண்டுமென்ற கவலையினால் ஜனங்களுக்கு "பேடண்டு" க்ருதிகளை பாடி உற்சாகப்படுத்த நினைப்பதும், தனக்கே ஸர்வஸ்வாதீனமான க்ருதிகளைத்தான் பாடவேண்டும் என்ற கொள்கையுடனிருப்பதும், சகஜந்தான். க்யாதி நிலைத்த பிறகு கட்டுத்தறிகளை உதறி விட்டுஇஷ்டம்போல் தைரியமாய் சஞ்சரிப்பதும் சகஜம். இவரிடம் "எவரிமாட" கேட்டு எவ்வளவு நாளாகிறது. "அக்ஷய லிங்க விபோ" வைக்கூட இப்போது காணும் விதம்விதமான புதுக்ருதிகளையே அவர் இப்போது பாடுகிறார்.

அன்று ராஜமாணிக்கம் பிடில்—அதாவது 31—8—39-ல் வருஷம் ஒன்றுக்கு மேல் ஆகிவிட்டது. இருந்தாலும் நல்ல ஸங்கீதம் மறக்க முடியாதல்லவா! பிடில் வாசிப்பதில் இரண்டுவகையுண்டு. சிலர் தன்பங்கைப் பூர்த்தி செய்துகொள்வார்கள். அநுசரிக்கத்தெரியாது. சிலர் இரண்டு சாமர்த்தியமும் உள்ளவர். ராஜமாணிக்கம் பிள்ளையின்பெருமை இவ்விரண்டு சாமர்த்தியங்களையும் அளவில்லா நிலையில் உடையதேயாகும். தான் பக்கவாத்தியகாரன் என்பதை மறக்காமல் எந்தப் பாடகனையும் கவர்ந்து கொண்டு வாசித்து நிறக்கச் செய்வது ராஜமாணிக்கத்தின் இயல்பு. தனி ஆவர்த்தத்திலும் கிடைத்த சாவகாசத்தில் ஒரு கணமேனும் வியர்த்தமாகாமல் நல்ல "எஸ்ஸன்ஸ்" ஸங்கீதமாய் வாரி அள்ளி விடும் திறமை.

இன்னும் ஒரு விஷயம். பாடகன் முதல் நம்பர் பாடகனாயிருந்தால், ராஜமாணிக்கம் பிள்ளை அனுபவித்த மிச்சம்தான் "ச்ரோதா"க்களுக்கு. இவர் பக்கவாத்தியத்திற்கு வந்தாரா அல்லது சங்கீதம் கேட்க வந்தாரா என்றுகூட சிலசமயம் சந்தேகிக்கலாம். சபா செக்ரடரி புத்திசாலியாய் இருந்தால் ராஜமாணிக்கம் பிள்ளையிடத்தில் "ரிஸர்வட்" டிக்கட்டு வசூல் செய்வான்.

நாம் வேண்டுவது என்ன?

(கி. சந்திரசேகரன், எம். ஏ., பி. எல், மயிலாப்பூர்)

இலக்கியத்தை அநுபவிக்க எல்லோராலும் முடிவதில்லை. அதற்காக அவர்கள் பேரில் நாம் கோபிக்கலாமா? அதைக் கவனியாதது அவர்கள் புத்திக்குறைவினாலல்ல. அதிக புத்தியின் வேகத்தினாலுங் கூடப் பிறரையும், வேறு ஞாபகங்களையும் அவர்கள் அறவே மறப்பதுதான் அதற்குக் காரணம். எதைப் பார்த்தாலும் அவர்கள் தங்களையே பார்க்கின்றார்கள். எது எவ்விதமானாலும் தாங்கள் ஒருவித மாறுதலையும் அடையாமலிருப்பதிலேயே அவர்களுக்குக் கவலை.

இலக்கிய மென்ன பொழுது போக்கா என்றால், இல்லை; இலக்கியமேதான் நம்மை நம்மிடமிருந்து ஒருவாறு காப்பாற்றும் சஞ்சீவி. இல்லாவிட்டால், பாடுபட்டுப் பணம் தேடுவதிலும், அதை எந்தவிதத்தில் செலவு செய்து நம்மைப் பிறரைவிட உயர்ந்தவர்களாகக் காண்பித்துக் கொள்வதென்பதிலும் காலத்தைக் கழிப்பது தான் சிறந்த தருமமாகக் கொண்டாடுவோம். அதிலும் சிலர் இரண்டாவதான காரியத்தைச் செய்வதில்லை; எதற்காகத் தேடின பொருளை வீணாகச் செலவழிக்க வேண்டுமென்பதாக நினைப்பார்கள்; தாங்களழிவில்லா வரம்பெற்றவர்களாகவே மனப்பால் குடிப்பார்கள்.

ஒரு பிச்சைக்காரன் இரும்புவளையமொன்றைத் தன் இடுப்பில் அணிந்துகொண்டு, அவ்விரும்பைத் தங்கமாக மாற்றிவிடச் சக்திவாய்ந்த கூழாங்கல் ஒன்று இருப்பதாகவும், அதைத் தேடிக் கண்டுபிடித்தால் இரும்பை அது தங்கமாகச் செய்துவிடுமென்றும் அறிந்து, ஆத்றோரமாகக் கூழாங்கல்லைத் தேடித்திரிந்தான். அகப்பட்ட ஒவ்வொரு கூழாங்கல்லையும் எடுப்பதும் தன்னுடைய இரும்பு வளையத்தில் அதைத் தேய்த்துக் கீழே எறிவதுமாக அவன் சென்றுகொண்டிருந்தான். இவ்விதமே எத்தனையோ கற்களை அவன் பொறுக்கியும், கீழே எறிந்துகொண்டும், போய்க் கொண்டிருந்தான். ஒருநாள் எதிரே வந்த இடைப்பையனொருவன் 'என்ன ஐயா தேடுறீங்க' என்று அவனைக் கேட்டான். அதற்கவன் "இரும்பைத் தொட்டாலும் தங்கமாகக்கூடிய கூழாங்கல்லைத் தேடுகிறேன். அது தங்கமாகச் செய்கிறதா என்று பார்ப்பதற்குத்தான் என்னிடுப்பில் அணிந்திருக்கும் வளையத்தைக் கூழாங்கல்லால் தொடுகிறேன். அக்கல் எனக்கு இன்னும் கிடைக்கவில்லை" என்றான். உடனே இடைப்பையன் 'உங்க இடுப்பிலிருப்பது தங்கமாயிருக்குதே, நீங்க பாக்கலீங்களா' என்று கேட்டான். ஆச்சரியத்துடன் பிச்சைக்காரனும் தன்னிடுப்பைக் குனிந்து பார்த்தான். திகைத்துப்போய் அவன் 'ஆ! அங்கேயே அக்கல்லை எறிந்துவிட்டேனே. மறுபடியும் அதைக் கண்டுபிடிக்கவேண்டுமே' என்று வெறிபிடித்தவன்போல் ஓடினான்.

இக்கதை ரவீந்திரநாத் டாகூர் அழகாகப் பல தொனிகளுடன் கற்பனை செய்தது. வாழ்க்கையில் ஸந்தோஷம் நமக்குக் கிட்டினாலும் அதை அறியாமல் எதையோ தேடி அலையும் மானிட இயல்பைத் தான் பரிஹஸிப்பதாகத் தோன்றுகிறது. கவனித்துப் பார்த்தால் வாஸ்தவமென்று தான் புலப்படும். இலக்கிய இன்பம் அம்மாதிரி கிடைக்கூடியதாயிருந்தும், அதை விட்டுவிட்டு வேறு எதையெல்லாமோ நாம் தேடுகின்றோம். கதையில் வரும் பிச்சைக்காரன் கதி தான் நமக்கும். நம்மிடமகப்பட்ட இன்பத்தைக் கவனியாமல், புதிய ஸந்தோஷத்தை நாடும் நம்மனது தான், என்ன பேராசையினால் பெருநஷ்டமடைகின்றது!

இலக்கியம் நாமநுபவித்தால் மாத்திரம் போதுமாவென்றால், போதாதென்று தான் பதில் சொல்லவேண்டும். அதன் சுவையை அறிஞர்கள் பலர் சேர்ந்து பகிர்ந்துகொள்வது தான் இலக்கியத்தை மேம்படுத்தும். ஸமஸ்கிருதத்தில் இதை விளக்க அழகிய

ஸ்லோக மொன்றிருக்கிறது. அதன் பொருள் பின்வருமாறு: " சந்திரகிரணங்களினால் இரவும், தாமரை மலர்களினால் ஓடையும், கொத்துக் கொத்தாய்ப் பூக்களினால் கொடியும், அன்னங்களினால் சரத்காலத்தின் அழகும், ரஸிகர்களின் பேச்சினால் காவ்ய ரஸமும் விருத்தியாகும்" மேற் சொல்லிய ஸ்லோகம் போதும் நாம் சேர்ந்தனுபவிப்பது எவ்வளவு முக்கியம் இலக்கியப் பெருக்கிற்கு என்பதை எடுத்துக் காட்ட.

நல்ல இலக்கியமென்று காணப்பட்டதை ஆவலுடன் அநுபவிப்பது, தன்னலத்தையே நாடாத இயற்கையுள்ளவர்களின் பழக்கம். அதிலும் அதைப்பற்றிய விமர்சனங்களினாலும், வியாக்யானங்களாலும் அதைப் போஷிப்பது இன்னும்மேல். ஆனால் அதற்காக வேண்டாத தற்பெருமையும், பொறாமையும், அதன்மூலம் உலகிற்கு ஊட்டும் சிலரைப் போலில்லாமல், இதயத்தைப் பரிசுத்தப்படுத்தும் ருசுவான நோக்கத்துடன், பிறரையும் தான் அநுபவித்த விதமே அநுபவிக்கச் செய்யும், தகுந்த ஆற்றலைப் பெறுவது தான், நாம் இலக்கியத்திற்குச் செய்யும் உண்மையான தொண்டு. அதிலிருந்து ஏற்படும் நன்மைகள் பல. ரஸிகர்களின் சேர்க்கை மேன்மேலும் அதிகப்படுவதுடன், புதிய எழுத்தாளர்களுக்குத் தங்களைக் கவனிக்க, தங்களினத்தைச் சேர்ந்தவர்களிருப்பது ஒரு பெரும் பலமாய்விடும்.

நம்மிடமிருக்கும் சிறிய குணத்தைக் குறைத்து, தன்னுடையதாகவே பிறருடைய நற்செயல்களைக் கண்டு ஆநந்திக்கும் சுபாவம் சிலரிடமே அதிகம் காணப்படுகிறது. இலக்கியப் பயிற்சியைச் செய்கிறவர்கள் ஒன்று சேர்ந்து நாட்டுக்கு நன்மையைச் செய்யப் புகுவது எப்பொழுதென்றால், தாமறிந்த புலவரையும் அறிஞர்களையும் என்றும் பாதுகாக்க வேண்டிய அளவில், அவர்களிடமிருந்து பெற்ற ரஸ அநுபவத்தை வாயால் உலகிற்கு அறிவிப்பதும், எழுத்தால் புத்தகங்களில் பதிய வைப்பதும்தான். சாதாரணமாய்ப் பார்க்கலாம்! நம் தேசத்திலே தோன்றிய கவி ரவீந்திரநாதரைப் போன்றவர்களை வாசிக்கவும், அநுபவிக்கவும், பிறரையும் நம்முடன் ஆநந்திக்கச் செய்யவும் நாம் அவ்வளவாகப் பாடுபடுவதில்லை. அதனால் யாருக்கு நஷ்டம்? நமக்குத்தான் என்று சொல்லவும் வேண்டுமா! அதைச் செய்ய நம் எழுத்தாளர்கள் முன்வாராததால்தான், அநேகர் ரவீந்திரநாதருடைய தாடியை மாத்திரம் கவனிப்பதுடன் நிறுத்தி விடுகிறார்கள். அவருடைய இலக்கியச் சுவையைக் கவி இதயம் படைத்தவனே நன்கனுபவிப்பான் என்பதில் என்ன சந்தேகம்! மேல் நாடுகளில் இந்த விதம் தொண்டு செய்பவர்களில், தாங்களே அதிகம் எழுதியவர்கள்கூட இருப்பார்கள். (Tolstoy) டால்ஸ்டாயி என்னும் ருஷியா தேசத்து உயர்தர எழுத்தாளரை மதிப்பது, அநேக புஸ்தகங்களும், நாடகங்களும் இயற்றிய காலோவொர்த்தி (Galoworthy) என்னும் இங்கிலாந்து தேசத்து அறிஞர். இதனாலே, நாம் பார்த்துக் கொள்ளலாம் எவ்வளவு ஒரு எழுத்தாளர் மற்றவரை வாசிப்பது மாத்திரமில்லாமல் மனமாரப் புகழ்வதையும் ஞாயமாக கருதியிருக்கிறார்களென்னும் விஷயத்தை.

கவி ரவீந்திரநாதருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும் எழுத்தாளர்கள் நம் மத்தியில் அநேகரிருந்தும், ஏன் அவர்களிலொருவராவது நம்முடைய உயர்தர நூலாசிரியர்களை நன்கு நமக்குக் காண்பிப்பதில்லை என்றால், நாம் வேண்டுவதும் இலக்கிய நேர்மையின் மனோபாவம் உள்ளவர்கள் சேர்வதுந்தான் என்று குறிக்க வேண்டியதவசியமில்லை.

தாசில் சுப்பராயர்

[வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதி]

நல்ல சமயத்தில் உதவி செய்தவனை, நல்ல சமயத்தில் தீங்கு செய்பவனிடம் அகப்பட்டுக்கொள்ளும்போது நினைக்காமல் இருக்க முடியவில்லை. குளிர்ந்த நிழலைத் தந்த மரத்தை அது வற்றன் மரமான காலத்தில் நினைக்காமலிருக்க முடிவதில்லை. அன்னை காட்டிய அன்பை அவளுக்குப்பின் அயலாரிடம் வளருகையில் நினைக்காமலிருக்க முடிவதில்லை. இதுபோல் நம் நாட்டில் இப்போதுள்ள அரசியல் நிலையில் நம்மில் அநேகர்க்கு விக்டோரியா மகாராணியவர்களின் அரசியலைப் பற்றிய நினைவு அடிக்கடி உண்டாகிறது. அந்த நினைவுண்டாகும்போதெல்லாம் அவ்வம்மையாரின் அரசியல் வன்மையையும் முறையையும், காருண்யத்தையும் அவ்வம்மையாரால் நம் நாட்டுக் கேற்பட்ட நன்மைகளையும் எடுத்துக் கூறிப் பாராட்டுகிறார்கள்.

இத்தகைய அவசரம் நம்மையும் பாதித்தபடியால் விக்டோரியா மஹாராணியவர்களின் அரசியல் அதிசயங்கள் பல நம் நினைவுக்கு வந்தன. அந்த அதிசயங்களில் சம்பந்தமடைந்தவரில்—நம் நினைவுக் கிலக்கானவரில்-தாசில் சுப்பராயர் ஒருவர்.

இவர் சரித்திரம் நாம் விஸ்தரிக்கத் தக்கபடி அவ்வளவு சிறப்புடையதா என்கிற கேள்வி பிறக்கலாம். ஆம் அது உண்மை. ஆயினும் தாசில் சுப்பராயர் 1886-1898ம் வருஷம் வரையில், தம் தாசில் அதிகாரத்தைத் தமிழ் வளதந்தும்பும் சோழவள நாட்டில் திருச்சி, பிரம்பலூர், உடையார் பாளையம், லால்குடி, குழித்தண்டலை முதலிய இடங்களில்-இவர் நீதியென்கிற தெய்வத்தின் ஸந்நிதான விபூதி ப்ரஸாத மகிமை வாய்ந்த மாசில் சுப்பராயர் என்று மதியூகிகள் மதித்து மகிழக்கூடிய உயரிய நிலையில் விளங்க வைத்தவராகையினால் இவரைப்பற்றிப் பேச மனந்துணிவு கொண்டது.

இக்காலத்தில் இந்தியாவில்விக்டோரியா மஹாராணியவர்களின் இராஜ்ய பரிபாலனம் எல்லோரும் போற்றத்தக்க நிலையில் அமைந்திலகுகின்றது. இருட்டேயில்லாத நிலவுகாலத்தைப்போல் மகிழ்ச்சிக்கிடமாயிருந்தபடியால், இந்தக் காலத்தில் தாசில் சுப்பராயர் போன்ற நீதிமான்களான உத்யோகஸ்தர்கள் வசந்தகால அந்யோந்ய தாம்பத்தியத்தின் நேச விலாசந் தாங்கிய மனோபாவத்தில் தங்கள் அதிகாரங்களை அழகுபெறச் செலுத்திக் கடமைகளை நிறைவேற்றியவராய்க் கண்ணியமுற்றிருந்தனர். ஆகையினால் இக்காலத்தில் இவரைப்பற்றி, இவர் உத்யோகம் செய்த ஊர்களில்-தெருக்களிலும் வீடுகளிலும் சதுக்கங்களிலும் பாடசாலைகளிலும் மாதர்கூட்டத்திலும் ஆடவர், பெண்டிர், சிறுவர் எல்லோரும் புகழ்ந்து பேசுவாராயினர்.

இந்த வைபவங் கண்டு மகிழ்ந்தார் பலர். அவர்களில் இப்போது முதிர்ந்த வயதினராயிருப்பவர் சிலரை நம் நாட்டில் அங்குமிங்கும் காண்கிறோம். அவர்கள் சில சமயம் அப்போதைய நினைவுக்குள்ளாவதுண்டு இப்போதும். அச்சமயம், "தப்பா அதிகாரம் செலுத்தியவர் தாசில் சுப்பராயர். ஒப்பாருமில்லையென உலகம் புகழ உடம் பெடுத்தவர் தாசில் சுப்பராயர்!" என்று போற்றுவது நம் உள்ளங்குளிர, உடல் புளகமுறச் செவியில் விழுகிறதுண்டு.

உலகில் ஒருவனுடைய நல்ல குணங்களை விடப் பொல்லாத குணங்களே மிகவும் பிரசித்தமாகிறது. லக்ஷணங்களை விட அவலக்ஷணமே பிரசித்தமாகிறது. கற்புடைய ஸ்திரீகளைவிடக் கற்பழிந்தவர்களின் பிரஸ்தாபமே பிரபலமாகிறது. ஸினிமாக்கலை என்கிறோமே இந்த விநோதக்கலை தாண்டவமிடும் இந்தச் சந்தர்ப்பத்தில் இதனை யாவரும் எளிதிலுணர்கிறார்கள்.

என்ன சொல்வது ?-தாசில் சுப்பராயர் மாசில் சுப்பராயராக விளங்கினுரெனினும் அவசர சுப்பராயர்—குடுகுடு சுப்பராயர் என்கிற பேர் ஊராரிடமும் உறவினரிடமும் பரவியிருந்ததுமல்லாமல் கச்சேரியிலும் பரவியிருந்தது. என்ன செய்யலாம். உலக சுபாவமிது !

அவசர சுப்பராயர் என்கிற பெயர் இவருக்கு உண்டானதற்குக் காரணம் பிரமாதமானதல்ல. இவர் எந்த வேலையிலும் எந்த இடத்திலும் அவசரப்படுவார். இதுதான் காரணம். ஆனுல் இவர் தொடங்கும் காரியம் எதுவும் அவசரக் கோலமாகாது. இது இவரிடம் மதியூகிகள் கண்டு போற்றத்தக்க மாசில் குணமாயிருந்தது.

இவருக்குச் சரவணபவ தாஸர் என்று ஒரு பெயருண்டு. இது ஆஸ்திக உலகத்தில் இவர்க்கேற்பட்ட அழகிய பெயர். இவர் சிவசுப்ரமண்ய த்யானுநுகூல ஸம்பந்நராய் விளங்கியதே இவர்க்கு இப்பெயர் ஏற்பட்டதற்குக் காரணம். இவர் நாடோறும் குடலைகுடலையாய்ப் புஷ்பம் கொணரும்படி செய்து வீட்டில்—“ அடியாரிடந் தேடி அவரிடமே குடியாக வாழும் குகன்” என்றும் “முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்” என்றும் “கலியுகவரதன் கந்தன்”என்றும் உலகம்போற்ற விளங்கும் முருகப்பெருமானுடைய ஆராதனையைச் செய்தபிறகே வீட்டைவிட்டு வெளிப்படுவார். இவர் ஆராதனை செய்கையில் இவரைப்பார்த்தவர்—இவரை—சிவ பூஜையில் பீமசேனன்—என்று கூறுவதுண்டு. இவர் நல்ல சைவாபிமானியாகையினுல் இவர் தம் மக்களில் இருவர்க்கு—‘ மாணிக்கவாசகன்—சம்பந்தன் ’ என்கிற பேரிட்டு இக்கால அப்பூதியடிகள் என்கிற பெயரையும் ஏற்றனர்.

இவர்க்குத் தமிழில் நல்ல ஞானமுண்டு; ஸங்கீத ஞானமு முண்டு. ஆதலால் இவர் ஆண்டவன்மேல் செய்யுட்கள் பல இயற்றியதுமன்றிக் கீர்த்தனமும் பாடி மகிழ்ந்தனர். இவர் இயற்றிய பாடல்களடங்கிய நூலொன்று சிவசுப்ரமண்யர் பஜனை கீர்த்தனை என்கிற பேரில் அச்சிடப்பட்டிருக்கிறது. அதிலுள்ள கவிகளைக் கவனிப்பவர் கவிநயமும் தமிழ் நயமுங் கண்டவராயிருப்பின் இவரை வரகவி எனப் புகழாமலிரார்.

அவர் இயற்றிய கவிகளில்,

“ இன்னுமொரு குறப்பெண்
எய்துமென்ருே வேலாநீ
மன்னுவரை குன்ருேடி
வாடுகின்ருய்—சொன்னேன்
மலையாவுமோ மூன்று
வையகத்துங் கிட்டாள்
அலையா தென்னுள்ளத்தமர்”—

என்று விளங்கும் செய்யுள் ஒன்று. இதிலுள்ள சொன்னயமும் பொருள் நயமும் கண்டு தெளிக அவர்தம் திறமை.

இவர் செலுத்திய தாசில் அதிகாரத்தில் எடுத்துப் பேசத்தக்க விஷயங்கள் பலவுண்டு எனினும்—நாம் நம் இளம் பிராயத்தில் காதாரக்கேட்டு மகிழ்ந்த சம்பவம் ஒன்றுண்டு. அதுகண்டு ஏனைய இவர் தம் திறமையும் காணலாமாதலின் அதனைக் குறிப்பிடுகிருேம். ஒரு பானை சோற்றுக்கு ஒரு பருக்கை போதுமன்ருே பதம் பார்க்க!

ஒருநாள் தாசில் சுப்பராயர் தம்முடைய சேவகன் முன்னே செல்லத், தம் வண்டியைவிட்டு இறங்கி ஒரு கொடி வழியே பிரம்பலூரிலுள்ள ஒரு கிராமத்துக்குச் சென்ருர். இவர் அவசர சுப்பராயர் என்ற தம் பெயருக்கேற்றபடி அவசரமாக மட்டக் குதிரையைப்போல் நடப்பார். அவர் முகம் விசாலமுடையதாய் விபூதி உத்தூளன அலங்காரத்துடன் விளங்கும். விழிகளிரண்டும் இவர் தம்சுறுசுறுப்பையும் உள்ளக் கிளர்ச்சியையும் மதியூகத்தையும் அதிகார தோரணையையும் கண்டவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனியென எடுத்துக் காட்டத்தக்க உயரிய பல லக்ஷணங்கள் அமைந்து விசாலமாயிருக்கும். கையிலொரு குண்டாந்தடி பிடித்துக்கொண்டு காலில் செருப்பு—சடக் சடக் என்று ஓசைப்பட இவர் நடப்பார்.

இவ்வாறு நடந்து செல்லும் இவர் ஒரு சோலையைக் கடந்து செல்ல நேரிட்டது. அச் சோலையில் ஓர் அழகிய குளமுண்டு. அது அழகான படிக்கட்டுடன் கூடியது; நிழல்தரும் மரங்களைக் கரையில் அழகு

ஸன்லைட்

உங்கள் குடும்பத்திற்கு சந்தோஷ மளிக்கட்டும்!

பிரதி தினமும், ஸன்லைட் சோப் உபயோகித்து வந்தால் நீங்கள் உழைக்கும் நேரம் குறையும். உங்களுக்கும், உங்கள் குடும்பத்திற்கும் ஆரோக்கியம், ஆனந்தம் அளிக்கும். இன்று முதலே ஸன்லைட்டால் சலவை செய்ய ஆரம்பியுங்கள்.



உண்மையான ஸன்லைட் இம்மாதிரி பெட்டிகளில்தான் பாக் செய்யப்பட்டுள்ளது.

S. 20-50 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

பெறக் கொண்டது. இவ்வளவு அழகுடன் கூட விளங்கும் இந்தக் குளம்—"ஊருணி நீர்நிறைந்தற்றே—உலகவாம் பேரறிவாளன் திரு"—என்பதற்கேற்ப—சுத்தமான தீர்த்தமுடையதா யிருந்தது. இந்த நீரே அந்த ஊர்வாசிகளுக்குக் குடி ஜலம். ஆதலால் இங்கே இக் குளத்தில் நீரை ஜனங்கள் அசுத்தம் செய்யாமல் பார்த்துக் கொள்ள ஒரு காவற்காரன் நியமிக்கப்பட்டிருந்தான். அவன் இச்சமயம்—குளத்தங் கரையில் ஒரு மரத்து நிழலில் உட்கார்ந்திருந்தான். "இந்தக் குளத்தில் இறங்கி யாரும் அசுத்தம் செய்வது கூடாது" என்ற விளம்பரப் பலகை வேறுஒரு மரத்தில் இங்கே மாட்டி யிருந்தது.

இவ்வள விருந்தும் ஒரு துஷ்டன் அங்கே இச் சமயம் வந்து அக் குளத்தில் இறங்கிக்குளித்துத் துணி கசக்க யத்தனம் செய்தான். காவற்காரன் அவனைத் தடுத்தான். அவன், அவன் பேச்சைக் கேளாமல் அவனோடு வாதாடியபடி இருந்தான்.

இச் சமயமே நம்முடைய தாசில்தார் அப் பக்கமாய்ப் போனது. அவரைக் கொஞ்ச தூரத்தில் வரக்கண்டட்.காவற்காரன்—"அடே வம்பு செய்யாதே! அதோ பார் தாசில்தார் வருகிறார். அவரிடம் சொல்வேன்" என்றான்.

துஷ்டன்—(தாசில்தாரைத் திரும்பிப் பார்த்துவிட்டு—) "தாசில்தார் வந்தால் என்னை என்ன செய்ய முடியும்? அவருடைய அதிகாரம் கச்சேரியிலே—இங்கென்ன செய்யும்?" என்றான்.

இந்தப் பேச்சு தாசில்தார் காதில் நன்றாய் விழுந்தது. அவர் உடனே தம் சேவகனை நோக்கி, 'ஓடி அந்தத் துஷ்டனைப் பிடித்து இங்கே இழுத்துவா இந்த மரத்தடிக்கு" என்று கூறி அவனை அனுப்பி விட்டுத் தாம் அங்கொரு மரத்தடியில் தம் கைக் குண்டாந் தடியையே நாற்காலியாகக் கொண்டு உட்கார்ந்தார்.

அவ்வளவுதான்! அவசர சுப்பராயர் அதிகாரம் பிரகாசிக்கத் தொடங்கியது. கொஞ்ச நேரத்தில்—துஷ்டன் காவற்காரனுடன் அவர் சமுகம் கொண்டுவரப்பட்டான். அடுத்த நிமிஷமே அந்த மரத்தடிக்கு நாற்காலி—மேஜை முதலிய எல்லாம் கச்சேரிக்கு வேண்டிய வசதிகளுடன் வந்து சேர்ந்தன. ஊரார் பலருடன் கிராம முனிசிப்—கணக்குப்பிள்ளை முதலியவர்களும் வந்து சேர்ந்தனர்.

தாசில் சுப்பராயர் இன்று அவசர சுப்பராயராய் விளங்கிய காட்சி மறக்கமுடியாததாயிற்று. விசாரணை பரபரவென்று-சுருக்கெழுத்தாளரும் பதிவு செய்துகொள்ள முடியாதபடி நடந்தது. கேட்ட கேள்விகளுக்கெல்லாம் துஷ்டன் ஏதேதோ பதிலளித்தானாயினும்—தாசில்தார்—"நீ காவலாளி தடுத்தும் கேளாமல் முரட்டுத்தனமாய்க் குளத்தில் இறங்க முயன்றாய்! இதை நான் கண்ணாலே கண்டேன். நீ தாசில்தார்அதிகாரம் இங்கேன்ன செய்யும்? கச்சேரியில்தானே?' என்று கூறி அவனை மிரட்டி ஸர்க்காரை அலக்ஷியம் செய்தாய்! இதைக் காதாலே கேட்டேன்! இவ்விரண்டு குற்றங்களுக்கும் என் கண்களும், செவிகளுமே சாக்ஷிகள். ஆதலினால்.—விக்டோரியா மஹாராணி யவர்களின் இராஜ்யத்தில்—தாசில்தார் அதிகாரம் இந்தச் சோலையிலல்ல; வேறு எந்த மூலையிலும் செல்லும்! முடுக்கிலும் செல்லும்! உன்னிடமும் செல்லும்! உன்பாட்டனாரிடமும் செல்லும்! ஆதலால்—உனக்குப் பத்து ரூபா அபராதம் விதித்திருக்கிறேன். கட்டத் தவறினால்—மூன்று நாள் சிறைவாச மிருக்க வேண்டும்" என்று—இடி மின்னல்களுடன் கூடிய மழையென முழக்கியபடி நீதி செலுத்திக் கச்சேரியை விட்டெழுந்தார்.

இவர் யார்?

ஸ்மார்த்த பிராமணரில் அஷ்டஸஹஸ்ர வகுப்பைச்சேர்ந்தவர். சமீபத்தில் 1930-ல் காலஞ்சென்ற சிவாநந்த சாகரயோகீசுவரர் என்னும் என் குருநாதரின் ஜேஷ்ட பிராதா. இவர் ஸ்ரீவேத்ஸ கோத்திரத்தில் அண்ணாவையர் செய்த அருந்தவப் புதல்வராய் உதித்தார். இவரை எனக்குப் பெரிய மாமனார் என்று சொல்லி உறவு கொண்டாடும்படி ஒரு சம்பந்தத்தை எனக் களித்த ஆண்டவன் திருவடி மலர் முடிசூடி இந்த வியாசத்தை முடிக்கிறேன்.

எல்லாம் நன்மைக்கே

[டி. எஸ். சுந்தரேச சர்மா, தஞ்சை]

ஸ்ரீ ஸ்வயம்பிரகாசம் இன்ஜினீர் உத்யோகம் பார்த்துப் பென்ஷன் வாங்கிக்கொண்டவர். நல்ல மேல் வரும்படி கிடைத்து ஏராளமான பணம் சேர்த்திருந்தபடியால் மாம்பலத்தில் ஒரு விஸ்தாரமான மனைக்கட்டு வாங்கிப் பெரிய பங்களாவும் கட்டிக்கொண்டு சுகமாய் வாழ்ந்துவந்தார். நல்ல சைவ பரம்பரையில் தோன்றியவரானாலும் உத்யோகம் பார்த்த நாட்களில் தெய்வத்தைப் பற்றியோ மதத்தைப்பற்றியோ நினைத்தவரே அல்ல. பணத்தாசை பிடித்த பிறகு ஈசனைப் பற்றி நினைக்கத்தான் காலமேது?

பென்ஷன் வாங்கிக்கொண்ட பிறகு பொழுது போகாததால், தினசரி, வார, மாதப் பத்திரிகைகளை வாங்கி வாசிப்பதோடு Miss Mayo எழுதிய கீதா ரஹஸ்யம் என்னும் பகவத்கீதை மொழிபெயர்ப்பையும் வாங்கி வைத்துக்கொண்டு ஹிந்து மதத்தின் உண்மைத் தத்துவங்களை அலசிக் கொண்டிருந்தார். மத விஷயமாய் அநேக ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் பிரசித்தமான பத்திரிகைகளுக்கு எழுதி வைத்திருந்தார்.

காலை ஒன்பதுமணி. சாய்வுநாற்காலியில் படுத்துக்கொண்டு இரண்டு கால்களையும் பக்கப் பலகைகளில் போட்டுக்கொண்டு அன்றுவந்த வாரப் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தவர், திடீரென மூக்குக் கண்ணுடியைக் கழற்றி எறிந்துவிட்டுப் பக்கத்து மேஜையில் இருந்த புஸ்தகத்தைச் சுக்கு நூருகக் கிழித்தெறிந்தார். உடம்பு வியர்த்தது. கண் சிவந்தது. ஹிருதயம் துடித்தது. மேஜையைக் காலால் உதைத்துத் தள்ளினர்.

மேஜை விழுந்த சத்தம் கேட்டுக் குழந்தை ஸரஸா ஓடிவந்தாள். தந்தையின் முகத்தைக் கண்டு நடுங்கி உள்ளே ஓடினாள். "கஷ்டகாலம் வருகிறதென்று நேத்து ஜோஸியர் நம்மிடம் சொன்னரே அது சரியாயிருக்கே! ஐயோ! அப்பாவுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதே" என்று அலறினாள்.

பாவம். விஜயா பூஜைக்கு உட்கார்ந்தவள் அவசர அவசரமாக ஓடிவந்தாள். தன் நாதனின் முகத்தைக் கண்டு திடுக்கிட்டாள். "ஐயோ. பைத்தியமாய் விட்டாரே" என்று கத்தினாள். இந்தச் சத்தத்தைக் கேட்டதும் தான் ஸ்வயம்பிரகாசத்திற்கு சுய ஞாபகம் வந்தது. "கத்தாதேடி!" என்று அவரும் கத்தினார்.

"ஐயோ பைத்தியம் பிடித்துவிட்டதே இனி என்ன செய்வேன்"

"என்ன—எனக்கா — பைத்தியமா?"

"என்ன அப்பா, பைத்தியம் பிடிக்கவில்லையா? ஏன் இந்த மேஜையை உதைத்துத் தள்ளிப் புது கீதாரஹஸ்யம் புஸ்தகத்தையும் கிழித்தாய்?" என்றாள் ஸரஸா.

ஸ்வயம்பிரகாசம் நான்கு புறமும் பார்த்து விட்டுச் சற்று நிதானத்துடன் "அந்தக் கிழிந்த துண்டுகளைப் பொறுக்கி முதலில் நெருப்பில் போட்டுக் கொளுத்துங்கள். பிறகு தான் என் பைத்தியம் தெளியும்" என்றார்.

முகவிகாரம் சற்றுக் குறைந்திருப்பதைக் கண்டு சற்று தைரியமடைந்து விஜயா "எதற்காக இந்தப் புஸ்தகத் துாள்களைக் கொளுத்தவேண்டும்?" என்றாள்.

"எதற்கா? ஹிந்துமத உயர்ந்த கொள்கைகளுக்காக" என்றார்.

விஜயாளுக்கு ஒன்றும் புரியவில்லை. "சற்று விபரமாய்ச் சொல்லுங்கள்" என்றாள்.

'இதோ பார். இது "இஸ்லாம் ஊழியன்" என்னும் வாரப் பத்திரிகை. இதில் ஹிந்துமத தத்துவங்களின் ஊழல்களைப் பற்றி நாலு பத்தி எழுதப்பட்டிருக்கிறது. அப்பப்பா ஹிந்துவென்று சொல்லிக்கொண்டு வாசலில் போகவும் கூசுகிறது.'

"இப்போது என்ன ஹிந்துமதம் புதிதாய்ப் பிறந்து இருக்கிறதா? அதைப் பற்றி ஏன் இவர்கள் எழுதவேண்டும்?"

"ஏனு? நமது மதத்திற்கு ஸ்மிருதிகள் தானே ஆதார கிரந்தங்களாம். அதில் சொல்லியபடி தானே யாவரும் செய்ய வேண்டும்?"

"ஆம். அதனுலென்ன. அதன்படி நடப்பது அவமானமா?"

"பைத்தியமே. அதில் என்ன எழுதியிருக்கிறது கேள், Miss Paly என்பவள் சிமையில் பெரிய பட்டதாரி—ஸம்ஸ்கிருத பாஷையையும் ரொம்பபடித்து அதற்காக அநேக பட்டங்களும் பெற்றிருக்கிருள். அவள் நமது ஸ்மிருதிகளை அப்படியே பதம்பதமாய் ஆங்கிலத்தில்மொழிபெயர்த்திருக்கிருள். அதில் ஒரு சுலோகத்தில் "பெற்றதாயோடு சேரலாம் பர ஸ்திரீகளிடம்தான் சேரக்கூடாது" என்று எழுதியிருக்கிறதாம். அப் புஸ்தகத்தை வைத்துக்கொண்டு "இஸ்லாம் ஊழியன்" பத்திரிகையில் நாலுபத்தி கிண்டல்செய்து எழுதி யிருக்கிருர்கள். பெற்றதாயிடம் சேரச்சொல்லும் மதம் மதமா? மானங்கெட்ட மதம்."

"அப்படி ஸ்மிருதியில் சொல்லியிருந்தால் இதுவரை ஏன் ஒருவரும் அவ்விதம் செய்பவில்லையாம்?"

"அதற்கும் அப்பத்திரிகையே காரணம் சொல்லியிருக்கிறது—முன்பு அவ்விதம் தான் செய்துகொண்டிருந்தார்களாம். பதினெண் புராணங்களையும் இயற்றியவரும் விஷ்ணு அவதாரமென்று சொல்லப்படுபவருமான வியாஸரே அப்படித்தான் செய்துவந்தாராம்! பின்பு முஸ்லீம்களையும் இதர மதத்தினரையும் பார்த்து இத்தீச் செயலை விட்டிருக்கிருர்களாம் ஹிந்துக்கள்."

"அடநாராயணு! அப்படிச் சொல்லியிருப்பதாய் ஒருவர்கூட சொல்ல நான் இதுவரை கேட்டதில்லையே."

"உன்னிடத்தில் வந்து யார் சொல்லுவார்கள் இந்த அழகான விஷயத்தைப் பதப்படி மொழிபெயர்த்திருக்கும்போது சந்தேகம் என்ன?

"போதும். நீங்கள் என்ன ஹிந்துவென்பதற்காக ஜபதபம் செய்து பாழாய்ப் போறது? திவசங்கூட என் பிடுங்கலுக்காகக் கால்மணியில் செய்து துலைக்கிறீர்கள்."

"சரி இனி திவசமும் வேண்டாம் மண்ணுங்கட்டியும் வேண்டாம். நான் முஸ்லீமாகவோ கிருஸ்தவனுகவோ சேரப் போகிறேன்."

"போதும் போதும். நிறுத்துங்கள். ஊரார் சிரிக்கப்போகிருர்கள்."

* * *

அடுத்தவார "இஸ்லாம் ஊழியன்" பத்திரிகையின் விஷயம் பின் வருமாறு.

"உலகத்தில் கண்ணியமுள்ளவர்களும் ஆலோசித்து முடிவு செய்யும் புத்திமான்களும் இல்லாமல் போகவில்லை. எவ்வளவு பட்டவர்த்தனமாய்ச் சொன்னுலும் குறுக்குப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருப்பவர்களே அதிகம். ஒரு சிலருக்கு மூக்குக்கு மேல்கோபமும் வந்துவிடுகிறது. இல்லாததை எல்லாம் சொல்லி பதிலுக்குப் பதில் தாக்குகிருர்கள்.

"ஒரு பெரிய உத்யோகம் பார்த்தவர் நல்ல படிப்பாளி நல்ல பென்ஷனும்வாங்குபவர். அவரைத் தெரியாதவர் என்றோ அனுபவம் இல்லாதவரென்றோ சொல்லிவிட முடியாது. நமது சென்ற வார விஷயத்தைப் பார்த்துவிட்டு ஆழ்ந்து ஆலோசித்து, இனித்தான் வெட்கங்கெட்ட ஹிந்து மதத்தில் இருக்க விரும்பவில்லை என்றும், குடும்பத்தோடு முஸ்லீம் மதத்திலோ, கிருஸ்தவ மதத்திலோ சேர்ந்துவிடப் போவதாயும் நமக்கு எழுதி யிருக்கிருர்.

"அவர் புத்திசாலி என்பதில் சந்தேகமில்லை. புத்திசாலிகளுக்கு ஏற்ற மதம் முஸ்லீம் மதம்தான் என்பதை நாம் வற்புறுத்திச் சொல்லவேண்டியதில்லை. சமத்துவம் சகோதரத்வம் முதலியவைகளே முஸ்லீம் மதத்தின் அடிப்படையான தத்துவங்கள். நமது பக்கீர்களும் இந்தத் தலைவர்களும் யாதொரு நிபந்தனையுமின்றி இரு கைகளாலும் வருந்தி அழைக்கக் காத்திருக்கிருர்கள் என்பதை நாம் தெரிவிக்க விரும்புகிறோம்.

"அவரது புத்திசாலித்தனத்தைக் காட்ட ஏற்பட்ட நல்ல சமயத்தை அவர் நழுவவிடமாட்டாரென்றே நம்புகிறோம்."

மறுநாள் "சுவிசேஷம்" என்ற தினசரியின் விஷயம் பின்வருமாறு :—

"ஹிந்து மதம் உபயோகமற்றதென்பதும், மானக்கேடானதென்பதும் நம் சத்வார்த்தமகான் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டியதால் அந்த மதத்தை உதறித் தள்ளி லக்ஷக்கணக்கானவர் நம் கிருஸ்தவ மதத்தில் சேர்ந்து வருகிறதினுலேயே தெரிந்ததுதான். ஆனல், ஒருவர் இதர மதத்தைத் தழுவுமுன் யோசிக்க வேண்டிய விஷயங்கள் பல உண்டு. சமத்துவமும் சகோதர தத்துவமும் மட்டும் ஒரு மதத்தில் சேரப் போதுமானவையல்ல. அதோடு பாப மன்னிப்பே முக்கியமானது. அதுவும் சர்க்கார் உத்யோகம் செய்து பென்ஷன் பெற்ற ஒருவருக்கு எவ்வளவு இன்றியமையாதது என்று நாம் சொல்லத் தேவையில்லை. கிருஸ்தவ மதம் கடல்போலப் பரந்து யாருக்கும் திறந்து கிடக்கிறதென்பது அனுபவத்தில் எல்லாருக்கும் தெரிந்ததுதான். விவேகிகளுக்கு ஒரு வார்த்தையே போதுமென்று இத்துடன் நிறுத்திக் கொண்டோம்."

மறுநாள் "தேசபக்தன்" பத்திரிகையில் கீழ்க்கண்ட குறிப்பு காணப்பட்டது.

"சில தினங்களாய் ஹிந்து மதத்தில் உள்ள குறைபாடுகளை எழுதி அதில் உள்ளவர்களைத் தங்கள் தங்கள் மதங்களில் சேரும்படி செய்யும் இழிவான பிரசாரத்தைக் கண்டு வருந்துகிறோம். எந்த மதத்திலும் கெட்டவைகள் இல்லாமலில்லை. அப்படியே சில நல்லவைகளும் இருக்கின்றன.

"அதற்காக பிறருக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் இந்நாளில் மதப் பூசல்களைக் கிளப்பிவிட்டு வேடிக்கை பார்ப்பது நியாயமில்லை. நம்மைக் கேட்டால் மதம் என்பதே ஒரு சாபக் கேடு என்றும், அதைக் குழி தோண்டிப் புதைத்து விடும்படியும் சொல்வோம். அதற்கான முயற்சிகளைச் செய்வது தேசபக்தர்களுடைய முக்கியமான கடமை யாகும்.

மறுநாள் குடி ஆட்சி பத்திரிகையில் வெளிவந்த விஷயம் :

"சிலநாளாக ஹிந்துமதம் என்று சொல்லப்பட்ட மதத்தைப் பற்றியும் அதன் அழகான கொள்கைகளைப் பற்றியும் விஸ்தாரமாய் வரையப்படுகின்றன. அதன் இழிவான கொள்கைகளை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்துக் காட்டிய நண்பர்களுக்கு நம் வந்தனம் உரித்தாகுக. ஹிந்து மதம் என்று சொல்லப்படுவது முன்காலத்தில் பிராமண புரோகிதர்களாலும் அவர்களின் அடிமைகளாயிருந்த முன்னேர்களாலும் சுயநலத்திற்காகச் செய்து கொள்ளப்பட்டதென்பதை நாம் பல தடவை எடுத்துக் காட்டியிருக்கிறோம். எப்போதும் நாம் அதை ஒப்புக்கொண்டதே இல்லை. தமிழர்களுக்கு மதம் எதற்காக ? அவசியமானல், மதம் தேவையானபோது புதிதாக ஏற்படுத்திக் கொள்ளவோ சமத்துவமுள்ள மதத்தில் சேர்ந்து கொள்ளவோ தெரியும்."

ஒருநாள் ஸ்வயம்பிரகாசம் சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டு எதையோ மடியில் வைத்துக்கொண்டு மென்று தின்றுகொண் டிருந்தார். விஜயா அவசரமாய் ஓடிவந்து ஒரு பத்திரிகையை நீட்டி, இதைச் சற்றுப் படியுங்கள் என்றாள்."

ஸ்வயம்பிரகாசம் வாங்கினர். அது அன்று வந்த "ஜயபூமி" பத்திரிகை. அதில் பின்வருமாறு ஒரு விஷயம் வரையப்பட்டிருந்தது.

"சென்ற ஒரு வார காலமாகப் பல பத்திரிகைகளின் முழு கவனமும் ஹிந்துமத தத்துவங்களை ஆராய்வதில் சென்றிருக்கின்றன. நமக்கு அதில் சந்தோஷமே. ஏனென்றால் மதம் என்று ஒன்று இருக்கிறது என்று எல்லோருக்கும் தெரிகிறதல்லவா ? திடீரெனப் பிற மத பத்திரிகைகளுக்கு நம் மதத்தை திட்டுவதில் இவ்வளவு உற்சாகம் பிறந்த காரணத்தை ஊன்றிக் கவனித்ததில்(Miss Paly) என்ற ஆங்கில மாது இப்போது வெளியிட்டிருக்கும் ஸ்மிருதிகளின் மொழி பெயர்ப்பே என்று தெரியவருகிறது. அந்த அம்மாளின் சரித்திரத்தைப் பற்றியோ அவருடைய மொழிபெயர்ப்பைப் பற்றியோ நாம் இப்போது ஒன்றும் சொல்ல விரும்பவில்லை.

'ஒரு பாஷையிலுள்ளதை வேறுபாஷையில் மொழிபெயர்ப்பதால் ஏற்படும்அனர்த்தங்கள் இப்போது நன்றாய் வெளியா

இன்றன. நம் ஹிந்து மதத்தில் பெற்ற தாயிடம் சேரும்படி சொல்லப்படவேயில்லை. தாயைத் தெய்வமாக பாவிக்கும்படி எங்கும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. முனிவர் வியாசர் அப்படிச் செய்யவுமில்லை. இத்தனை இடஞ்சல்களுக்கும் காரணமான சுலோகம் வருமாறு.

अपिवा मातरं गच्छेत् नगच्छेत्परहारिकाः

இதற்கு அந்த அம்மாள் செய்திருக்கும் மொழி பெயர்ப்பு.

You can enjoy your mother. But not other ladies.

“இந்தச் சுலோகத்தை ஊன்றிக் கவனிப்போருக்கு “பரஸ்திரீகளை அடைவது தாயிடம் சேருவதிலும்பாவமானது” என்பது அதன் கருத்து என்பது விளங்காமல் போகாது. பரஸ்திரீகளிடம் சேராமலிருக்கச் செய்வதே இந்த சுலோகத்தின் கருத்து என்பது வெள்ளிடைமலை.

“அந்த அம்மாள் இதன் கருத்துத் தெரியாமலோ தெரிந்து வேண்டுமென்று ஹிந்து மதத்தை அவமானப்படுத்தவோ இப்படி மொழி பெயர்த்திருக்க வேண்டும். பிற மதத்தினர் நம்மத கிரந்தங்களைப் பற்றி எழுதுவதைப் படிப்பதினாலேயே நம் சிறுவர்களும் பெரியோர்களும் மதபக்தி, தெய்வபக்தி, இல்லாமல் போய்விடுகிறார்கள். இதர பாஷைகளில் படிப்பதினால், உண்மையான அர்த்தங்களும் தத்துவங்களும் தெரியாமல் போகின்றன. இதன் மூலமாகக் கலாசாலைகளில் அந்தந்தபாஷைகளின் மூலமே மதப் படிப்பைப் படிக்க வைக்க வேண்டுமென்பது மிகத் தெளிவாகி விட்டது.

ஸ்வயம்பிரகாசம் அப்பாடாவென்று நாற்காலியில் சாய்ந்தார். “இந்தப் பத்திரிகைக்காரர் மூல சுலோகத்தையும் போட்டு அதன் மொழிபெயர்ப்பையும் எழுதியிருக்கிறார். எந்த மூடனுக்கும் இதன் அர்த்தம் தெளிவாய் விளங்கக்கூடியதே. அப்பப்பா இந்த வெள்ளையர்களும் பிற மதத்தினரும் ஹிந்து மதத்தைப் பழிக்க என்ன சூழ்ச்சி செய்கிறார்கள். தினம் கிருஸ்தவப் பாதிரிகளிடமிருந்தும் முஸ்லீம் மத ஸ்தாபனங்களிடமிருந்தும் எத்தனை அழைப்புக் கடிதங்கள்? எத்தனை உபசார மொழிகள்?

நாளை முதல் ஒரு ஸமஸ்கிருத பண்டிதரை வைத்துக்கொண்டு நம் மத உண்மைகளை முதலில்தெரிந்துகொள்ளவேண்டும்.”

விஜயா (புன்சிரிப்புடன்) எல்லாம் நன்மைக்கே என்றாள்.

நோட்டீஸ்

மன்னார்குடி டி. மு. கோர்ட்டு

1940 ௵ O. S. No. 121

மன்னார்குடி தாலூகா பண்டிதக்குடியிலிருக்கும்

ஸ்ரீ உமாபதீசுவர சுவாமி—1
ஸ்ரீ வரதராஜ பெருமாள்—2
ஸ்ரீ ஸித்திமதி விநாயகர்—3

ஷை கோவில்கள் டிரஸ்டி

S. வெங்கிட்டராமய்யர்—வாதி

1. மைனர் வைத்திநாதன்
2. N. கிருஷ்ணமூர்த்தி அய்யர்
} பிரதிவாதிகள்

ஷை வாதி வக்கீல் தெரிவித்துக் கொள்ளுகிறதாவது;

ஷை வாதி தேவஸ்தானங்களுக்குச் சொந்தமான மனைகள் விஷயமாய் முன் பிரதிவாதியின் தகப்பனார் பெறந்த கிருஷ்ணஸாமி அய்யர் 24-9-28உயில் யெழுதிக்கொடுத்திருக்கிறதாகச் சொல்லும் சாசுவத பகுதி பத்திரம் சட்டப்படி Void யென்றும் ஷை தேவஸ்தானங்களை கட்டுப்படுத்தக் கூடியதல்லவென்றும் கண்டுபிடித்து ஷை மனையிலிருக்கும் கட்டிடங்களை பிரித்து ஷை மனைக்கு சுவாதீனமாகவேணுமென்று பிரதிவாதிகள்பேரில் தாவாசெய்து ஷை தாவா விஷயமாய் 2-ம் பிரதிவாதிக்கு பலதரம் சம்மன்கள் போயும் ஸார்வாகாததினால் ஷை 2-ம் பிரதிவாதிக்கு பிறக்கும் சம்மன்களை ஷையார் குடியிருந்துவரும் இடமாகிய சென்னபட்டணம் சேர்ந்த மாம்பலம் தியாகராஜநகர் வெங்கிட்ட நாராயண தெருவிலுள்ள 38-நெ. விட்டுவாசல் கதவிலும் மன்னார்குடி டி. முன்சீப் கோர்ட்டு வாசலிலும் ஒட்டி ஸார்வு செய்யும்படி உத்திரவாகி ஷை தாவா வருகிற 14-10-40 வாயிதா குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபனையிருந்தால் ஷைதேதியில் ஷை கோர்ட்டில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

(Sd) S. Gopalaiyer,
Plaintiff's Pleader.

சமாதானமும் சமூக நியாயமும்

[ஏ. ஜி. வேங்கடாசாரி]

கால் நூற்றாண்டுக்குள் இரண்டு மகா யுத்தங்கள்! இந்த இரண்டு மாபெரும் போராட்டங்களிடையே, எத்தனைச் சின்னஞ் சிறு சண்டைகள்? ஆயிரக்கணக்கிலும் லக்ஷக்கணக்கிலும் எத்தனை பேர் மாண்டனர்? பஞ்சம், வறுமை, பசி, பிணி, துன்பம், வேலையில்லாத் திண்டாட்டம் சீவனற்ற வாழ்க்கை—இவைதான் இந்த இருபத்தைந்து வருஷங்களில் உலக மாந்தரில் பெரும்பான்மையோருக்குக் கிடைத்த சம்பத்துக்கள். இடைவிடாமல் நடந்து வந்துள்ள யுத்த முஸ்தீபுகள், சாதாரண மனிதனின் வாழ்க்கையை மேலும் மேலும் சாரமற்றதாகச் செய்து விட்டன. ஒரு நாடு மற்றொன்றின் மீது ஆதிக்கம் செலுத்த விரும்புவதும், தன் நோக்கம் வெற்றி பெறுவதற்காக, கக்ஷி சேர்ப்பதும், எதிரியின் கக்ஷி பலத்தைச் சிதைப்பதும், இம் முயற்சிகள் தோற்றால் யுத்த யந்திரத்தை ஏவிவிட்டும், முனைந்து வருவதைக் கண்டிருக்கிறோம். யுத்தத்தின் கொடுமைகளையும் அதனால் மனித சமூகத்திற்கு ஏற்படும் நீடித்த கஷ்ட நஷ்டங்களையும் நன்குணர்ந்த ராஜ தந்திரிகளும், பேரறிஞர்களும், யுத்தத்தையே ஒழித்துவிட்டு, மக்கள் சமாதானமாய் வாழ்வதற்குப் பல ஆயிரம் வருஷங்களாகவே முயன்று வந்திருக்கின்றனர்.

நியாயத்தையும் தர்மத்தையும் நிலை நாட்டுவதற்காகப் போர் செய்வது கடமை என்று பகவத்கீதை உபதேசித்தது. இன்று கூட யுத்தத்தை ஆரம்பிக்கிறவர்கள் அல்லது விஸ்தரிப்பவர்கள் அல்லது அதன் மூலம் கொள்ளை இலாபமடைகிறவர்கள்—எல்லோருமே, இந்தப் பாடத்தையே படிக்கிறார்கள். தாங்கள் சுயநலப் பற்றுடன் நடக்கவில்லையென்றும், அழியாத அடிப்படையான தர்மத்தையும் நியாயத்தையும் நிலை நிறுவதற்காகவே இந்தத் தியாகத்திலிறங்கி யிருப்பதாகவும் அவர்கள் கூறுவதைக் காண்கிறோம். தன் வாளின் வலிமையைக் கொண்டு இந்தியா முழுவதையும் வசப்படுத்திக் கொண்ட அசோக சக்ரவர்த்தி, களிங்கத்தில் கடும்போர் புரிந்து வெற்றி மாலை சூடினார். ஆனால் களிங்கர்களின் எதிர்ப்பை அடக்க, வீரர்களின் உதிரம் உண்மையிலேயே ஆறாகப் பெருக்கெடுத்தோட வேண்டியதாயிற்று.

மக்களிடையே தோன்றும் தகராறுகளைப் போர்செய்து தீர்ப்பது கூடாதென்றும் அவர் துணிந்தார். தன் கருத்தை ஸ்தூபிகளில் பொறித்து அன்றைய உலகமெங்கும் பறை சாற்றினார்.

"யுத்த பரிஹாரணம்" என்ற இந்தக் கோட்பாடு அதுமுதல் இன்றுவரை தத்துவார்த்த முறையில் உயிருடன் இருந்து வந்திருக்கிறது. ஆனால், காரியாம்சத்தில் படை பலத்தின் மூலமே தகராறுகள் தீர்க்கப்பட்டு வந்திருக்கின்றன. மதத்தைப் பரப்புவது, ஒரு நபர் அல்லது மரபின் ஆதிக்கத்தை நிலை நிறுத்துவது, ஸத்யம், தர்மம் அல்லது நியாயம்—இவற்றிற்காக வென்று நடைபெற்ற போராட்டங்கள் சரித்திரத்தில் மலிந்து கிடக்கின்றன. ஐரோப்பிய வர்த்தகர்கள் தம் நாட்டைவிட்டு வெளியேறி, பிறமக்களைத் தங்கள் ஆளுகையின் கீழ் உட்படுத்தி, அதன் மூலம் பெரிய சமுதாயங்களையே தங்கள் வாடிக்கைக்காரர்களாகப் பெற ஆயுத பலத்துடன் முற்பட்டது, யுத்தங்களுக்கு ஒரு புது அடிப்படையைச் சிருஷ்டித்து விட்டது.

வர்த்தக அபிவிருத்திக்காக நடைபெற்ற போராட்டங்கள் ஏராளம். பிறகு, இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, தொழில் முறைப் புரட்சி ஏற்பட்டது. அதனால் வந்த ஏற்றத் தாழ்வான நிலைமையும், கழுத்தறுக்கும் போட்டியும், உலக மார்க்கெட்டுகளுக்காக நடைபெறும் போராட்டங்களாக மாறின. சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும், இந் நூற்றாண்டிலும்,

நடைபெற்ற, நடந்துவரும் யுத்தங்களெல்லாம் ஒன்று அல்லது பல வல்லரசுகளின் ஆதிக்க ஆசையையே காரணமாகக் கொண்டிருப்பதைக் காணலாம். இதற்கிடையே, அடிமை வாழ்வுக்கு உட்பட்ட நாடுகள் விடுதலையை நாடித் தொழில்களை நடத்தத் தலைப்பட்டன. இத்தாலி, ஜப்பான் போன்ற நாடுகள் தொழில் வன்மையில் முன்னேறிவிட்டன. தாமதித்துத் தோன்றிய தங்கள் போட்டி ஜெயமடைவதற்காக, சரித்திர பூர்வமான பல குறைகளைப் படைத்துள்ள ஜெர்மானியருடன் சேர்ந்து, உலகத்தை, இன்று இதுவரை கண்டிராத மூர்க்கமான யுத்தத்தில் ஈடுபடுத்தி யிருப்பதைக் காண்கிறோம். இம்மாதிரி நிலைமை ஏற்பட்டால் அவ்வப்பொழுது தடை செய்வதற்கு எண்ணற்ற முயற்சிகள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள், முதலியவைகளின் மூலம் கூடியவரை சமாதானத்துக்குப் பங்கம் வராமல் காப்பாற்ற அவர்கள் முயன்று வந்திருக்கிறார்கள். ஒவ்வொரு தேசத்தில் அல்லது சமுதாயத்தில் இருக்கும் பெரிய மனுஷ்யர்கள்-அதாவது கனவான்கள்-செய்த முயற்சிகள் விரும்பிய பயனை அளிக்கவில்லை. உடன்படிக்கைகளும் ஒப்பந்தங்களும் சமாதானத்தையும் நல்லெண்ணத்தையும் வளர்ப்பதற்கு வேண்டிய சந்தர்ப்பங்களைத் தருபவை என்ற நிலைமை மாறி, புதிய போராட்டங்களுக்கு முஸ்தீபுகளைச் செய்வதற்கு வேண்டிய அவகாசமளிக்கும் சாதனங்களாகவே கருதப்படுவது இன்றைய உலக நிலைமையில் இயற்கையாய் விட்டது. அதாவது-வாக்குத்தத்தம் புனிதமானது, விசுவாசப்பூர்வமாய் நிறைவேற்றப்பட வேண்டியது என்ற தொன்றுதொட்டு மந்தநெறிமுறைமாறிவிடுகிறது. வாக்குப் பரிபாலனத்தின் மேன்மை நிராகரிக்கப் பட்டுவிட்டது. மனதிலுள்ள எண்ணம் கைகூடுவதற்கு வேண்டிய ஒரு மாய சஞ்சீவியாகவே, வாக்குறுதிகள் கருதப்படுகின்றன. ஷரையடித்து உலையில் போடும் தர்மம் மேலோங்கி விட்டிருக்கிறது. புனிதமான வாக்கை மீறுவது மிகவும் இழிவானதென்று இருந்துவந்த கருத்தையுங்கூட ஹிட்லரும், முஸோலினியும் சிதைத்துவிடத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

* * *

மிருக பலத்துக்கு முதலிடம் கொடுத்து மனிதனின் நாகரிக நிலையை இழிவு படுத்துவது நாஜி அஸ்திவாரம். அதற்காகத் தொன்று தொட்டு உலகெங்கும் போற்றப்பட்டு வந்த நியாய புத்தி, சகிப்புத் தன்மை, ஜனநாயக சம்பிரதாயங்கள், மனித உணர்ச்சி முதலிய பொன்னான குணங்களை, அழிவின் அறிகுறிகள் என்று ஹிட்லர் தன் சுய சரிதையில்கூறியிருக்கிறார். உரிமைகளில் சமத்துவம் மனிதனின் ஜீவாதார உரிமைகள் முதலியவை நரம்பற்றவர்களின் பிதற்றல்கள் என்பது அவருடைய கருத்து. துணிந்து புளுகுவதற்கு அஞ்சக்கூடாது என்பது நாஜி ஸித்தாந்தத்தின் ஆணி வேர்.

இவற்றிலிருந்து உலகத்தின் தார்மிக பாவம் எவ்வளவு கேவலமான நிலைமைக்கு வந்து விட்டது என்பது புலனாகும்.

ஹிட்லர் பகிரங்கமாகச் சொன்னதை வெவ்வேறு அளவுகளில் பல தேசங்களின் ராஜ தந்திரிகள் தம் மனத்தில் நினைத்து, செயலில் காட்டி வந்தனர் என்று சரித்திரம் குறிப்பிடத்தான் செய்யும். அதாவது, பொதுவாக, ஒப்பந்தங்களைச் செய்து கொள்வோர் கனவான்களாயிருந்த போதிலும், நடைமுறையில் அவை உதவாக் கரைகளாகி விட்டன. எனவே, புனிதமான ஒப்பந்தங்களும் வாக்குறுதிகளும், கேவலமான சமரசங்களுக்கும் உடந்தைச் செயல்களுக்கும் இடமளிப்பதைக் காண்கிறோம். இப்போதைய யுத்தத்தின் மூலம் வாக்கின் புனிதத்தை நிலைநாட்டி விடுகிறோம் என்று சொன்னால் மக்கள் நம்பிவிடமாட்டார்கள். ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவோர் கனவான்களா யிருக்கலாம்; உன்னத லட்சியங்களுடன் நடந்துகொள்ள விரும்பலாம். ஆனால், பிறகு நிலைமை அவர்களுடைய செல்வாக்கை மீறிவிடுகிறது. ஸர்வதேச சங்கத்தைத் தோற்றுவித்த வில்ஸனின் நிலைமை என்னவாயிற்று? அல்லது ஸர்வாதிகாரிகளைத் திருப்தி செய்விப்பதில் முனைந்திருந்த சேம்பர்லேனின் மூனிக்

கொள்கை என்னவாயிற்று! அசோகரைப்போல் புதிய 'யுத்த பரிஹாரணத்தை' ஏற்படுத்த முயன்ற கெல்லாக்-பிரயாண்ட் உடன்படிக்கை என்னவாயிற்று?

* * *

எனவே, ஒரு உண்மை இவற்றிலிருந்தெல்லாம் திடப்படுகிறது. உலக ஆதிக்கத்தில் நாட்டமுள்ள நாஜி, பாஸிஸ்ட், ஜப்பானிய ஆக்கிரமிப்பு சக்திகள் வேராறுக்கப் பட்டாலன்றி உலகிற்குக் கதி மோட்சமில்லை என்பதைப்பற்றி இரண்டு விதமான அபிப்பிராயமிருக்க முடியாது. ஆனால், அத்தகைய வெற்றி மட்டுமே உலகில் சாந்தியையும், சமநிலையையும் ஏற்படுத்தி விடுமென்று துணிந்து கூறுபவன் வெறும் முட்டாளாக இருக்கவேண்டும். சமுதாய அமைப்பில், சமூக நியாயம் அடிப்படையா யிருந்தாலன்றி உண்மையான சமாதானம் நிலவ முடியாது. வெர்ஸைல்ஸ் உடன்படிக்கை இதை ஒப்புக்கொண்டு உலகினுள்ள பெரும் பான்மையான பாட்டாளி மக்களின் நலனை வற்புறுத்த ஸர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தை (International Labour orgnisation) ஏற்படுத்தியது. அது வெற்றியுடன் வேலை செய்யாததால், உண்மை பொய்யாகி விடவில்லை. தேசத்திற்குத் தேசம் மட்டுமின்றி மனிதனுக்கு மனிதன்கூட நியாயம் வழங்கும்படியான சமுதாய அமைப்பு ஏற்படுவதற்காக இந்த யுத்தத்துக்குப் பின் உலகமெங்குமுள்ள முற்போக்குச் சக்திகளெல்லாம் பாடுபட்டாலொழிய உண்மையான சமாதானம் ஏற்பட முடியாது. சமூக நியாயம் சரிநிகர்சமான முள்ள மனிதவாழ்வு—இவற்றிற்கு அடிகோலினலொழிய, மீண்டும் மீண்டும் போருக்குச் சந்தர்ப்பங்கள் விஷமச் சக்கரம்போல் வரத்தான் செய்யும். 'சமாதானம் இங்கு, யுத்தம் அங்கு' என்று உலகில் ஆங்காங்கு பிரித்துவைக்க முடியாது. 'சமாதானம் பின்னப்படுத்தக் கூடாதது' என்பது அறிஞர்களெல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. சில வாரங்களுக்கு முன் எதிர்கால சமூக அமைப்பைப்பற்றி லண்டன் "டைம்ஸ்" எழுதிய ஒரு தலையங்கத்தில், அதன் அடிப்படையைப்பற்றி செய்த பிரஸ்தாபம் குறிப்பிடத்தக்கது. "ஒவ்வொரு நபருக்கும் அவனுடைய தேவைக்கேற்ற ஊதியம்" என்ற சமூக நியாயக் கொள்கையை அது வற்புறுத்தியது. அதை நிறைவேற்றி வைப்பதற்கு, தேசங்களுக்கு இடையேயுள்ள பூகோள எல்லைகள் இடையூறுகளாயிருக்கக் கூடாதென்றும் அது விரும்பியது. அந்த 'கன்ஸர்வேடிவ்' பத்திரிகையின் கருத்தில் ஏற்பட்டுள்ள இந்தப் புரட்சியை எல்லோரும் கவனிக்க வேண்டும். ஆங்காங்கு அதிகாரம் வகிப்போரின் மனப்பான்மையில் இத்தகைய புரட்சி ஏற்படும்படி செய்தாலொழிய, எத்தகைய உடன் படிக்கையின் மூலமும் சமாதானத்தை நீண்டகாலத்துக்குப் பங்கமின்றிக் காப்பாற்ற இயலாது.

('கனவான்களின் ஒப்பந்தம்' என்ற தலைப்புடன் செப்டம்பர் 30உ சென்னை அகில இந்திய ரேடியோவிலிருந்து செய்த பிரசங்கம். அநுமதியுடன் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.)

வலங்கிமான் டி. மு. கோர்ட்டு

விருத்தாஜலம் டி. மு. O. S. 673/28

தாண்டவராய பிள்ளை—வாதி

விசாலாக்ஷி அம்மாள்—பிரதிவாதி

ஷை நெம்பர் வாதி வக்கில் K. சீனிவாஸ அய்யங்கார் தெரிவிக்கிறதாவது:

ஷை நெம்பரில் பிரதிவாதியின் கோட்டீசுகளை ஒட்டி சர்வுசெய்ய வேணுமென்று மனுக் கொடுக்கப்பட்டு கோட்டீசுக்குத்திரவாகி 16-10-40ல் ஈரக்கி போடப்பட்டிருக்கிறது ஆக்ஷேபனை இருந்தால் ஷை 16-10-40 தேதியில் கோர்ட்டில் தெரிவித்துக் கொள்ளலாம்.

K. Srinivasa Aiyangar,
Vakil.

Town Extension
Kumbakonam.

மன்னிப்பு

[ஏ. முகம்மது ரஷீத், தஞ்சை.]

மிகவும் இன்பமான மாலைவேளை. சூரியன் தன் வேலை முடிந்ததினால் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொள்ள நினைத்தவன் போலச் சுருண்டு சுருண்டு ஓடும் மேற்கடலின் அலைகளின் கீழே போய் மறைந்து கொண்டிருந்தான். மந்தமாருதம் ஜில்லென்று வீசிக் கொண்டிருந்தது. உலகமே மந்திர ஜாலத்தால் ஏற்பட்டது போல ஒரே தங்க மயமாக ஜ்வலித்துக் கொண்டிருந்தது.

என்னுடைய ஐந்து வயதுக் குழந்தை பிரேமா மிகவும் ஒய்யாரமாக ஹாலில் நின்றுகொண் டிருந்தாள். அவள் தன் நாய் 'டாமி'யுடன் விளையாடும் மும்முரத்தில் நான் வந்ததைக்கூட கவனிக்கவில்லை. தன் பையிலிருந்து ஒவ்வொரு 'பிஸ்கெட்'டாக எடுத்து நாயிற்கு விளையாட்டுக் காட்டிக்கொண் டிருந்தாள். டாமி அந்த வெகுமதியைப் பெறுவதற்கு மூன்று தடவை குதித்து முயற்சி செய்ய வேண்டும். நாலாந் தடவை கொடுத்துவிடுவாள். இவ்விதமாகவே டாமி இரண்டு மூன்று துண்டுகளைப் பெற்றிருந்தது.

இந்தத் தடவை டாமி மூன்று தரம் குதித்து விட்டது. நாலாந் தடவை குதிக்கவேண்டும். ஆம், அப்பொழுது அந்த பிஸ்கெட் கிடைத்து விடுவது என்னமோ நிச்சயம் என்றுதான் டாமி எண்ணி இருந்தது. ஆனால் எதிர்பாரா விதமாக ஒன்று நேர்ந்துவிட்டது. பக்கத்து வீட்டுப் பூனை 'பஸ்ஸி' எங்கிருந்தோ திடீரென்று ஓடிவந்து அந்த பிஸ்கெட்டைக் கௌவிக் கொண்டு ஓடிவிட்டது. எதற்காக டாமி இவ்வளவு நேரம் கஷ்டப்பட்டதோ அதை அந்தக் கேவலமான பஸ்ஸி அபகரித்துக் கொண்டது. இதைக் காண டாமிக்கு ஏற்பட்ட அவன் ஆத்திரம் எல்லையையும் மீறி விட்டது. ஒரு பயங்கரமான உறுமலுடன் திடீரென்று பஸ்ஸியைப் பின் தொடர்ந்து பாய்ந்தோடியது. ஆனால், நான் திடீரென்று டாமியின் கழுத்திலிருந்த பட்டையைப் பிடித்துக்கொண்டேன். என்னை ஒருவிதமாகப் பார்த்தது என்றாலும் டாமியின் முகத்தில்பொறிந்தகோபம் கொஞ்சமேனும் குறையவில்லை.

அன்று இரவு அவ்வளவு இன்பமாக இல்லாவிட்டாலும் தண்மைச் சுருளைகள் இரகசியமாக நிமிர்ந்தன. வான வெளியில் மங்கலான வெளிச்சத்துடன் குளிர்ச்சியையும் வீசும் சந்திரன் உதயமானன். நான் ஏதோ யோசனை செய்தவாறு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தேன்.

வெளியில் ஏதோ துரத்திக்கொண்டு ஓடுவதுபோல ஓசை கேட்டது. டாமியின் கோரமான உறுமலும், பஸ்ஸியின் பரிதாபமான குரலும் கேட்டன. "டாமி ...டாமி! விட்டுவிடு......" என்றவாறே வெளியே ஓடினேன். ஆனல் பிரயோஜனமில்லை. காயம் படுகாயம்தான். பஸ்ஸியின் கழுத்திலிருந்து இரத்தம் மிகவும் அதிகமாக வெளிப்பட ஆரம்பித்தது. அதன் கண்களிலிருந்த பிரகாசம் மிகவும் வேகமாக குறைந்து கொண்டே வரலாயிற்று. கடைசியில் திடீரென்று அதன் கண்களும் மூடின. அதன் எளிய ஆவி அதன் உடம்பைவிட்டு விலகிவிட்டது. ஆனல் ஒருவிதமான சாந்தமும், குளிர்ச்சித் தன்மையும் அதன் முகத்தில் எனக்குத் தெரிந்தன......பாவம்! அதன் அற்ப ஆயுசு அவ்வளவுதான்!

இந்த மரண வேதனையை டாமி ஏதோ ஒரு தத்துவ சாஸ்திரிபோலப் பார்த்துக் கொண்டிருந்தது. வழிந்து ஓடிய இரத்தத்தைக்கண்டும் டாமியின் முகத்தில் சிறிதேனும் இரக்கமே தோன்றவில்லை டாமி என்னையும் அடிக்கடி பார்த்த பார்வை, "இங்கே உனக்கென்ன வேலை?" என்பதுபோ லிருந்தது. என்ன இருந்த போதிலும் கேவலம் ஒரு பிஸ்கெட் துண்

டிற்காகவா இந்தக் கொலையைச் செய்து பழிக்குப் பழி வாங்க வேண்டும்? நான் டாமியை ஆங்காரத்துடன் நோக்கினேன். அந்தப் பார்வையில் கலந்திருந்த கோபத்தின் அளவை டாமி மிகவும் தெளிவாகத் தெரிந்துகொண்டது. டாமியை நான் மன்னிக்க மாட்டேன் என்றும் டாமி அறிந்து கொண்டது. ஒரு பகிரங்கக் கொலை-அதுவும் டாமியின் எஜமானனுக்கே முன்பே, கட்டளையையும் மீறி—இதற்கு மன்னிப்பேது? ஆனால் டாமியின் மனதில் ஓடிக் கொண்டிருந்த பழிக்குப் பழி வாங்கிய திருப்தியும் மிகவும் பெருமையுடன் டாமியின் கண்களிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

அடுத்தநிமிடம் நான் டாமியை நெருங்கி வரும்படி கட்டளை யிட்டேன். என் பக்கத்தில் கிடந்த மெல்லிய பிரம்பை நான் கையால் எடுத்துக் கொண்டதை டாமி கண்ணாரக் கண்டது. என் கண்கள் வீசிய கோபக் கனலும் டாமியின்மீது தாக்கியது. ஏதோ யோசனை செய்துகொண்டே டாமி மெதுவாக என்னிடம் நகர்ந்து வர ஆரம்பித்தது. ஆனால் திடீரென்று தலையை நிமிர்த்திக்கொண்டு என்னை ஒரு முறைப்பு முறைத்தது. என்ன எஜமானனிடமே டாமி கலகம் செய்ய நினைக்கின்றதா? என் ஆத்திரம் என்னை மீறி விட்டது. டாமியிடம் ஓடிவந்து பளீர் பளீரென்று என் மனதார வழு, எட்டு அடிகளை விட்டேன்......ஆனால் நான் நினைத்தது தப்பு. டாமி தன் தண்டனையை ஏற்றுக் கொள்ளவே அப்படி பணிவுடன் நின்றது என்று பிறகுதான் தெரிந்தது.

"வெளியே ஓடிவிடு அற்ப நாயே!" என்று நான் கத்தினேன். அது பரிதாபமாக என்னைப் பார்த்தவாறே நின்று கொண்டிருந்தது. என் கோபத்தில் டாமியின் பரிதாபமான பாவம் ஒன்றும் தெரியவில்லை. மறுபடியும் பளீரென்று அடித்தேன். என் பலம் முழுவதையும் அந்த அடியில் நான் உபயோகித்தபடியினால், டாமியின் தோல் கொஞ்சம் உரிபட இரத்தமும் கசிந்தது. நான் மிகவும் அருமையாக வளர்த்த என் டாமியின் நிலைமையைக் காண, என் மனமும் கொஞ்சம் இளகத்தான் செய்தது.

"ஆனால் அந்த அற்ப நாய் ஒரு ரொட்டிக்காக ஒரு உயிரைப் பலிவாங்கிவிட்டதே!" — இதை நினைத்ததும் என் மனம் மறுபடியும் கல்லாகியது. "போ வெளியே!" என்று சொல்லிக்கொண்டே டாமியைப் பலமாக உதைத்தேன். டாமி சுருண்டுகொண்டு வாயிற்படியினிடம் போய் விழுந்தது. டாமி மனம் மிகவும் தழதழத்ததாக எனக்குத் தோன்றியது. மிகவும் இரக்கமாக என்னை ஒரு தடவை பார்த்தது. அந்தப் பார்வையில் கலந்துவந்து என் இருதயத்தைத் தாக்கிய பரிதாபத்தை நான் அதுவரையில் அனுபவித்ததே இல்லை. என்றாலும் குறைந்துகொண்டே வந்த என் ஆத்திரம் "போ!" என்று என்னிதயத்தையும் மீறிச் சொல்லியது. என் குரலில் முன்னிருந்த கடினமில்லை.

டாமி தொங்கவிட்ட வாலுடன் தளர் நடையுடன் மெதுவாக நடந்தது. வாயிற்படியையும் தாண்டி விட்டது. டாமி மனம் எவ்வளவு தூரம் சஞ்சலப்பட்டதோ எனக்குத் தெரியாது. ஆனால் டாமி அங்கு நின்று என்னைப்பார்த்த பார்வை என்னை முற்றிலும் உருக்கிவிட்டது. என்னால் சகிக்கமுடியவில்லை. "டாமி!" என்று கூப்பிட்டேன். எங்கிருந்து வந்ததோ டாமியின் கண்களில் அந்த ஜ்வலிக்கும் பிரகாசமும், ஆனந்தமும்! வெகு மகிழ்ச்சியோடு வாலையாட்டிக்கொண்டு என்னைச் சுற்றிச்சுற்றி வந்தது.

"என்மீது நீ வைத்திருக்கும் வாஞ்சைக்கு இந்தத் தடவை மன்னிப்பு," என்று என் இதழ்கள் முணுமுணுத்தன.

சென்னை ஸேவாஸதனம்

ஸேவா ஸதனம் 1928-ம் ஆண்டு ஸர். எம். வெங்கடசுப்பராவ் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. பன்னிரண்டு வருஷ காலமாக யாவரும் போற்றக்கூடிய நிலையில் ஸேவாஸதனம் நடந்து வருகிறது.

ஸேவா ஸதனம் அநாதைப் பெண்களுக்கும், ஏழைப் பெண்களுக்கும் நூதன முறையில் கல்வி போதித்து அவர்கள் வாழ்க்கையைப் பயனுள்ளதாகச் செய்கிறது. அங்கு, கைத்தொழில்கள் கற்பிக்கத் தனியாகக் கைத்தொழில் வாசகசாலை போன்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது; ஆங்கிலம், தமிழ் முதலியன கற்பிப்பதற்கு ஹைஸ்கூல் ஒன்று இருக்கிறது. ஆரோக்ய முறையில் சிறந்த மேற்பார்வையில் ஹாஸ்டல் ஒன்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

ஸர். எம். வெங்கடசுப்பராவ் அவர்களும் ஸ்ரீமதி வெங்கடசுப்பராவும் ஸேவாதனத்தை ஸ்தாபித்து ஒழுங்காகத் தியாக புத்தியுடன் நடத்துகின்றனர். பால்ய விதவைகள் நிறைந்து பெருந் துன்பத்துக்காளாகும் இக்காலத்தில் ஸ்ரீமதி வெங்கடசுப்பராவ் ஸேவா ஸதனத்தை ஸ்தாபித்தது மாதர் முன்னேற்றம் நம் இந்தியாவில் உண்டாக ஓர் அஸ்திவாரக் கல் நாட்டியது போலாயிற்று. ஸேவாஸதனம், அநாதைப் பெண்கள் துக்கத்தோடு விடும் கண்ணீரைத் துடைத்து அவர்களுக்கு ஆதரவளித்து அவர்களது வருங்கால வாழ்க்கையைச் செப்பனிடுகிறது.

1928-ம் வருஷம் ஸேவாஸதனம் ஒரு சிறு ஸ்தாபனமாக இருந்தது. மாணவிகளும் அதிகம் இல்லை. ஆனால் இப்பொழுது இரண்டு லக்ஷம் ரூபாய்கள் செலவழித்து, சென்னை, சேத்துப்பட்டு ஹாரிங்டன் ரோடில் நூதன முறை வசதிகளுடன் கட்டடம் விளங்குகிறது. பன்னிரண்டு வருஷங்களுக்குள் ஸேவாஸதனம் இவ்வளவு முன்னேற்றமடைந்து விளங்குவது பாராட்டத் தக்கதாகும். ஸேவா ஸதனம் வரப்போகும் சுதந்திர இந்தியாவை ஞாபகப்படுத்தித் தானும் அதற்கொரு அடையாளமாக விளங்குகிறது.

ஸேவா ஸதனத்துக்குச் சென்று அதன் சட்டதிட்டங்கள், கல்வி கற்பிக்கும் முறை, முதலியவற்றை நேரில் கவனித்தவர்கள் அதைப் பாராட்டுவதுடன் பொது நல நோக்கத்துடன் இதை ஸ்தாபித்து நிர்வகித்துவரும் ஸர். எம். வெங்கட சுப்பராவ் அவர்களையும் ஸ்ரீமதி வெங்கட சுப்பராவ் அவர்களையும் போற்றுமலிருக்க மாட்டார்கள். இது எல்லோரும் நினைவில் வைத்துப் பாராட்டக்கூடிய சமூகத் தொண்டாகும். ஸேவாஸதனம் வளர் பிறைச் சந்திரனைப் போல் வளர்ந்து முன்னணியில் நிற்க வேண்டுமென மனப்பூர்வமாய் வாழ்த்துகிறோம்.

நல்ல யோசனை!

ஒரு தையற்காரன் ஒரு அறிக்கை வெளியிட்டான் :—"எல்லோரும் கோட்டின் மேற்புறம் ஒரு பைதான் வைத்துக் கொள்கிறார்கள். இனிமேல் இரண்டு பைகள் வைத்துக்கொள்ளவேண்டும்! அதுவும் சொற்ப சம்பளமுடைய குமாஸ்தாக்களுக்கு அது அத்யாவசியமாகும். பஸ், டிராம் டிக்கட்டுகளை வைத்துக்கொள்வதற்கு ஒரு பையும், சம்பள தினத்தன்று ஒரு ரூபாய் நோட்டுக்களை வைத்துக் கொள்வதற்கு ஒரு பையுமாக அவைகளை உபயோகப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் பஸ், டிராம் டிக்கட்டுக்களும் ஒரு ரூபாய் நோட்டுகளும் கலந்துபோய் வித்தியாசம் தெரியாமல் நாம் தொந்தரவடைய நேரும்."

"இந்தியன் எக்ஸ்பிரஸ்"

சுப நிகழ்ச்சிகள்

["பாஸ்கரன்"]

இவ்வருஷம் நம் நாட்டில் விசேஷ சம்பவமொன்று நடைபெற்றிருக்கிறது. அந்தச் சம்பவம் யாவருமறிந்த தாகும். நவயுக மறுமலர்ச்சி எழுத்தாளர்களான இருவருக்கு அறுபதாண்டு நிறைவானது தான் அச்சம்பவம். நாம் அப்பெரியார்களுக்கு முன்பே வந்தனம் கூறிப்பாராட்டி யிருக்கவேண்டும். உரிய காலத்தில் செய்யத் தவறினோம். இருப்பினும் அப்பெரியா ரிருவரும் கலை வளர்ச்சிக்குப் பாடுபடுபவராதலின், அவர்களைப் பற்றிக் கலைவாணியின் திருநாளாகிய ஸரஸ்வதி பூஜை தினத்தன்று பாரத மணி ஸரஸ்வதி பூஜை மலரில் பாராட்டிக் கொண்டாடுவது சாலப் பொருத்த முடையதாகும்.

சென்ற ஜூலை மாதம் 8-ந் தேதியன்று ஸ்ரீ வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதியாருக்கு அறுபதாண்டு நிறைவாயிற்று. சஷ்டியப்த பூர்த்தி சாந்திசெய்து கொள்வதென்பது நம் நாட்டுப் பண்டைய வழக்கமாகும். சாஸ்திர சம்பிரதாயப்படி பாரதியாருக்குச் சஷ்டியப்த பூர்த்தி விழா நடந்தேறியது. பெரம்பூரில் அப்பெரியாரின் இல்லத்தில் அநேக பெரியோர்கள் கூடி அவருக்கு ஆசி வழங்கினர். சிறுவர், சிறுமியர் கொண்டாட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டனர்.

ஸ்ரீ வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதியார் நாற்பது வருஷ காலமாக ஓய்வொழிவில்லாமல் தமிழ்ச் சேவைசெய்து வருகிறார். அவரைப் பற்றி யறிந்தாரனைவரும் அவர் எழுதிய சிறந்த நவீனமாகிய "ஜடாவல்லவர்" என்னும் நூலைப்பற்றி யறிந்திராம லிருக்கமாட்டார்கள். "ஜடாவல்லவர்" ஆசிரியரது சொந்தக் கற்பனையைக் கொண்டு வெளிவந்த நவீனங்களுள் சிறந்து நிற்கும் "பிரதாப முதலியார் சரித்திரம்" "கமலாம்பாள்" "பத்மாவதி" முதலிய நூல்களோடு உன்னத ஸ்தானம் அளிக்கப் பெற்றிருக்கிறது.

ஸ்ரீ வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதியார் தமிழில் அநேக நூல்களெழுதியிருக்கிறார். "பால விநோதினி" என்னும் மாதப் பத்திரிகையைப் பதினறு வருஷகாலம் நடத்திப் பெரும்புகழ் பெற்றிருக்கிறார். காலஞ்சென்ற தேசிய கவி—சி. சுப்ரமண்ய பாரதியாரும் வரகவி—திரு. அ. சுப்ரமண்ய பாரதியாரும் மனமொத்த நண்பர்கள். "தக்ஷிண திலகம்" எனப் பெரும்புகழ் பெற்று விளங்கிய ஸ்ரீ ஜி. சுப்ரமண்ய ஐயரிடம் "சுதேசமித்ர"னில் தேசிய கவியும் வரகவியும் உதவி ஆசிரியர் வேலை பார்த்து வந்தனர். இப்பெரியாரின் சஷ்டியப்த பூர்த்திக்கு பாரதமணி தன் வந்தனத்தைச் செலுத்துகிறது.

* * *

ஹாஸ்ய எழுத்தாளர் திலகம் எனப் பெரும் புகழ் பெற்று விளங்கும் ஸ்ரீ எஸ். வி. வி. (எஸ். வி. விஜயராகவா சாரியார்) அவர்களைத் தமிழ் நாட்டில் அறியாதாரிருப்பது மிகவும் அபூர்வம். அவர் ஆங்கிலத்தில் நகைச்சுவை ததும்ப நூல்களெழுதித் தினசரி வாழ்க்கையில் நாம் நடந்து கொள்ள வேண்டிய விதத்தை "அநாயாசமாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்; அது போதாதென்று தமிழிலும் ஸ்ரீ எஸ். வி. வி. அநேக வாழ்க்கைச் சித்திரங்கள் எழுதி வாழ்க்கையே வாழ்க்கை" என்ற பெயருடன் அவைகளை ஒரு நூலாகத் தொகுத்திருக்கிறார். அந்நூல் பொது மக்களின் நன்மதிப்பைப் பரிபூரணமாகப் பெற்றிருக்கிறது.

ஸ்ரீ எஸ். வி. வி. செய்து வரும் இத்தொண்டு பண்டிதர் பாமரர் யாவருக்கும் பரமதிருப்தியை அளித்து வருகிறது. சென்ற ஆகஸ்டு மாதம் 25-ந்தேதி ஸ்ரீ எஸ். வி. வி. அவர்களுக்குச் சஷ்டியப்த பூர்த்தி விழா நடந்தது. மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரின் தலைமையில் சென்

னை சர்வ கலாசாலைப் பரீக்ஷை மண்டபத்தில் ஒரு கூட்டம் கூடியது. மகா கனம்—சாஸ்திரியார், "எளிய நடையில் இனிய தமிழில் ஹாஸ்யரஸம் பொங்கிப் பொலிய எழுதித் தமிழ்த்தொண்டாற்றும் பிரபல எழுத்தாளர் எஸ். வி. வி. தான்" என்று பாராட்டிப் பேசினர்.

அறுபது வயது முதிர்ந்த இந்த இருவருக்கும் பாரதமணி தன் மனமார்ந்த வந்தனத்தை ஸரஸ்வதிபூஜை தினத்தன்று மங்களகரமான தன் ஒலியின் மூலம் பரப்புகிறது; இவ்விருவரும் நோயற்ற வாழ்வையும் குறைவற்ற செல்வத்தையும் பெற்று இம்மாதிரியான சேவையை இடைவிடாமல் செய்யும்படி தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழும் செழுஞ்சுடராகிய முருகப் பெருமான் தன் கிருபா நோக்கத்தைச் செலுத்துவாராக.

ஸ்ரீ. ஆர். ஸத்யமூர்த்தி ஐயர்

ஸ்ரீ. ஆர். ஸத்யமூர்த்தி ஐயருக்கு-(ஸத்யமூர்த்தியென்னும் பெயருக்கே பிரா பல்யம் இருக்கும் போலிருக்கிறது.) பாரதமணியின் களிப்பைத் தெரிவிக்கிறோம். சமீபத்தில் அவருக்கு ஹைகோர்ட் மாஸ்டர் பதவியிலிருந்து டில்லியில் இன்கம்டாக்ஸ் ஜட்ஜ் என்னும் உயர்தர பதவி கிடைத்திருக்கிறது. ஸர். எஸ். வரதாசாரியரும் ஆர். ஸத்யமூர்த்தி ஐயரும் தமிழ்மக்களுக்குப் பெருமையையும் உற்சாகத்தையும் தாங்கள் டில்லியில் அடைந்த பதவிகளால் கொடுத்திருக்கிறார்கள். சாமர்த்யத்தோடு குணமும் சேர்ந்தால் அழகோடு மணமும் சேர்ந்த புஷ்பம் போல் மானிடவாழ்வுக்கு மேன்மையளிக்குமல்லவா?

நுட்பமான புத்தியும் விசாலமான சட்ட ஞானமும் தெளிவான மேதையும் குழப்பமில்லாத செய்கையும் அதிகாரச் சுறுசுறுப்பும் உழைப்பும் தைரியமும் முன்னேற்ற புத்தியுமுள்ளவர் ஆர். ஸத்யமூர்த்தி ஐயர். அவர் டில்லியில் இந்தியா முழுவதுக்கும் மாசற்ற சேவை செய்வாரென்பதில் ஐயமில்லை. அவருக்கு எல்லாம் வல்ல இறைவன் நோயற்ற வாழ்வையளித்து நம் நாட்டுக்குச் சேவை செய்ய உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளித்துத் திருவருள் புரிவானாக.

ஸ்ரீ பதரிநாத் தர்மசாலை

பரதகண்டத்திலுள்ள புராதனமான புண்ணிய ஸ்தலங்களுள் பதரிநாத் ஒன்று. இது வட இந்தியாவில் இருக்கிறது. இப்புண்ணிய ஸ்தலத்துக்குத் தென்னிந்தியாவிலிருந்து எண்ணிறந்த யாத்திரிகர்கள் செல்கின்றனர். ஆயிரக்கணக்கான மைல்கள் ரயிலில்பிரயாணம்செய்து அந்த திவ்ய க்ஷேத்திரத்துக்குச் செல்லும் யாத்திரிகர்கள் தங்க பதரிநாத்தில் சௌகரியம் மிகக் குறைவு. அந்தக் குறையை நிவர்த்திக்கும் பொருட்டுச் சென்னையிலுள்ள அநேக கனவான்கள் தென்னிந்திய யாத்திரிகர்கள் தங்க சகல சௌகரியங்களுடன் ஒரு தர்மசாலை பெரும் பொருட் செலவில் கட்டத் தீர்மானித் திருப்பது கேட்டு மிகவும் ஸந்தோஷிக்கிறோம்.

இந்த உயரிய புண்ய கைங்கர்யம் நன்கு நிறைவேறுவது கருதி "ஹிந்து" பத்திரிகையின் உரிமையாளர் ஸ்ரீ. கே. கோபாலன் அவர்கள், ஸர். எஸ். வரதாசாரியார் (பெடரல் கோர்ட்டு, நீதிபதி) அவர்களின் தலைமையில் ஒரு பெருங் கூட்டம் கூட்டினர்.

கூட்டம் 15-9-40ந் தேதியன்று "ஹிந்து" பத்திரிகையின் புதிய காரியாலயமாகிய கஸ்தூரி பில்டிங்ஸில் நடைபெற்றது. பதரிநாத்தில் கட்டப்போகிற தர்மசாலைக்கு மதராஸ் தர்மசாலை என்று பெயர் கொடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தர்மசாலையை இருபத்தையாயிரம் ரூபாய் செலவில் நிர்மிப்பதென்றும், அதற்கு உதவி புரியும் கனவான்கள் நூறு ரூபாய்க்குக் குறையாமல் உதவி செய்ய வேண்டுமென்றும் தீர்மானம் செய்தனர்.

இப்புண்ணிய கைங்கர்யத்திலீடுபட்டு உழைக்க முன் வந்திருக்கும் ஸ்ரீ. கே. கோபாலன் முதலிய கனவான்களின் முயற்சி நன்கு நிறைவேறஎல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரியுமாறு மனப்பூர்வமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

நவராத்திரி

(ஒரு பக்தன்)

புரட்டாசி மாதம் சுக்ல பக்ஷத்தில் ஒரு பண்டிகை கொண்டாடப் படுகிறது. அது தென்னிந்தியாவில் நவராத்திரி யென்றும் வட இந்தியாவில் தசரா என்றும் கொண்டாடப் படுகிறது. இப்பண்டிகையை ஒரு பூஜை தினமாகக் கொண்டு பத்து நாட்கள் கொண்டாடுகின்றனர். தென் தேசத்தில் துர்க்கா, லக்ஷ்மி, ஸரஸ்வதி இம் மூவருக்கும் பூஜை செய்யப் படுகிறது. இம்மூவரும் சிவன், விஷ்ணு, பிரம்மா இவர்களுடைய சக்தியை ஸம்ஹாரம், ஸ்திதி, சிருஷ்டி என்பதாகவும் தாமஸம், ராஜஸம், ஸாத்விகம் ஆகிய குணங்களாகவும் பாவிக்கப் படுகிறது.

துர்க்கை அல்லது சிவனுடைய சக்தி, பாபத்தையும், துக்கத்தையும், துர்க்குணங்களையும் நாசம் செய்கிருள். விஷ்ணுவின் சக்தியாகிய லக்ஷ்மி சகல ஐசுவரியங்களையும் கொடுத்து நமக்கு க்ஷேமத்தையுண்டாக்குகிருள். சரஸ்வதி கல்விக்கும் கலைக்குமுரிய தேவதை யல்லவா? அவள் நிர்மலமான ஞானத்தைக் கொடுக்கிருள். இவர்களை முழுமனதுடன் தியானம் செய்ய வேண்டும்.

குணங்களையும் சக்திகளையும் தனியாகத் தியானம் செய்ய முடியாதாகையினுல் அவைகளுக்குத் தகுந்த ரூபங்களை ஏற்படுத்திக் கொண்டு தியானம் செய்ய வேண்டும்.

நவராத்திரி உற்சவம் மழைக் காலத்தில் செய்யப்படுகிறதற்குக் காரணம் அரசர்களும் மற்றவர்களும் மழைக்காலத்தில் வெளியே போய்த் தங்கள் அலுவல்களைச் செய்ய முடியாமல் போகிறது. மழைக் காலம் முடிந்த பிறகு தான் அரசர்கள் யுத்தத்துக்குச் செல்லுகின்றனர். வியாபாரிகளும் மழைக் காலத்துக்குப் பிறகு தான் வியாபாரத்தைத் தொடங்குகின்றனர்.

வித்தை, தொழில், வியாபாரம் முதலியவைகளை ஆரம்பிப்பதற்குமுன் அதற்கு வேண்டிய ஆயுதங்களையோ அல்லது கருவிகளையோ முதலில் பூஜை செய்த பின்புதான் ஆரம்பிக்க வேண்டும். எந்தக் காரியத்துக்கும் பக்தி அவசியம். நம்முடைய ஒவ்வொரு விசேஷ நாளிலும் வெளிப்படையாக இருக்கும் கருத்தைத் தவிர அந்தரங்க அபிப்பிராயத்தையும் தெரிந்து கொண்டால் அந்தந்த தினங்களில் கொண்டாடுவதில் உதாசீன புத்தி இல்லாமல் உற்சாகத்தோடு நடத்த புத்தி யுண்டாகும்—என்பதில் சந்தேகமில்லை.

தஞ்சாவூரில் நாயக்கர்கள் அரசு செலுத்தி வந்தபோது ஆயுதபூஜை தினத்தில் மஹாராஷ்டிரர்கள் கோட்டையைச் சுற்றிக்கொண்டு முற்றுகை யிட்டனர். பூஜையிலிருக்கும் ஆயுதங்களை எப்படி எடுப்பதென்று பயப்பட்டுக் கொண்டு நாயக்க அரசர் மந்திரிகளுடன் ஆலோசனை செய்தார். துளசியைக் கூடை கூடையாகக் கொண்டுவந்து அரண்மனை வாயிலில் கொட்டிவிட்டால் மஹாராஷ்டிரர்களும் ஹிந்துக்களானதால் துளசியைத் தாண்டி வரமாட்டார்கள்—என்று யோசித்தார்கள். மஹாராஷ்டிரர்கள் கோட்டைக்குள் போகத் தயங்கினர். விஷ்ணு ப்ரசாதமான துளசியை எப்படித் தாண்டுவது? மஹாராஷ்டிர சேனபதி தன் சேனைகளுக்குத் துளசியை எடுத்துத் தலையில் வைத்துக்கொண்டு போகும்படியாகக் கட்டளை யிட்டான். என்ன யோசனை பாருங்கள். நாயக்கர்கள் செய்த யோசனையை மஹாராஷ்டிர சேனதிபதி எவ்வாறு மாற்றினன்!

எந்தக் காரியத்தையும் புத்தியோடு நடத்துவதற்கும் யுத்தியில்லாமற் செய்வதற்கும் வித்தியாசமிருக்கிறது. நவராத்திரி பூஜையைப் புத்தி பூர்வமாகச் செய்து துர்க்கை, லக்ஷ்மி, ஸரஸ்வதி இவர்களின் கிருபையை அடையுங்கள்.

வில்லியம் டெல்

[பெ. நா. அப்புஸ்வாமி]

வில்லியம் டெல்லின் கதையை நீங்கள் படித்திருப்பீர்கள்.

பதினன்காம் நூற்றுண்டின் தொடக்கத்திலே ஸ்விட்ஸெர்லாந்து தேசமானது ஆஸ்ட்ரியா நாட்டுக்குக் கீழ்ப்பட்டிருந்தது. அப்பொழுது லூசெர்ன் ஏரிப் பிரதேசத்திலுள்ள மூன்று சிறு மாகாணங்கள்—ஸ்விட்ஸ், ஊரி, உன்டெர்வால்டென் என்னும் மாகாணங்கள்—ஒன்று கூடி ஆஸ்ட்ரியாவின் அதிகாரத்தினின்று தேசத்தை விடுவிக்க முயற்சி செய்து கொண்டிருந்தன. அந்தக் காலத்தில் புர்க்லென் என்னும் ஊரிலே டெல் என்பவன் தனது நிலங்களை மேற்பார்த்துக் கொண்டிருந்தான். அவன் ஒரு பிரபு வமிசத்தைச் சேர்ந்தவன். அவனுடைய மனைவியும் பெரிய இடத்தைச் சேர்ந்தவள். தேச விடுதலை முயற்சியில் அவன் முற்றிலும் ஈடுபட்டிருந்தான். அவன் சிறந்த தேசாபிமானி.

அந்தக் காலத்தில் கெஸ்லெர் என்னும் ஆஸ்ட்ரிய நாட்டினன் ஒருவன் அந்தப் பிரதேசத்துக்கு அதிகாரியாய் நியமிக்கப்பட்டான். வரிகளை வசூல் செய்யவேண்டியது அவனுடைய முக்கிய வேலை. அந்தப் பிரதேசத்திலே ஆஸ்ட்ரியாவின் ஆட்சிக்கு விரோதமான கிளர்ச்சி ஒன்று இருப்பது அவனுக்குத் தெரியவந்தது. அந்தக் கிளர்ச்சியில் சேர்ந்தவர்களைக் கண்டுபிடிக்க அவன் ஒரு யுக்தி செய்தான்.

கடை வீதியிலே கொடி மரம் ஒன்றை நிறுத்தி அதன்மேல் அதிகாரக் குல்லா ஒன்றை வைத்தான். அங்கே வருபவர்கள் எல்லோரும் ஆஸ்திரிய அதிகாரத்துக்கு அறிகுறியாகிய அந்தக் குல்லாவைக் கண்டதும் தங்களுடைய தலைக் குல்லாவை எடுத்துத் தலை வணங்க வேண்டுமென்று உத்தரவிட்டான்.

டெல் என்னும் தேசாபிமானி அங்கே வந்தான். அன்னிய அதிகாரத்துக்குத் தலை வணங்கிக் கீழ்ப்படிய மறுத்தான். அவன் மிகச் சிறந்த வில்லாளி. அதை அறிந்திருந்த கெஸ்லெர் "உன் உயிர் பிழைக்க ஒரே வழி யிருக்கிறது. வேறில்லை. இதோ உன் மகன் தலையில் ஒரு ஆப்பில் பழத்தை வைக்கச் சொல்லுகிறேன். அதோ அங்கே நின்றுகொண்டு, இதை இலக்கு வைத்து, அம்புவிட்டு, இதைத் துண்டிக்கவேண்டும். குறி தவறினல் உன்னைத் தூக்கிலிடுவேன். இது உறுதி" என்றான். அஞ்சாத நெஞ்சு படைத்த டெல் அங்கே நின்றுகொண்டு தன் அம்புறாத் தூணியிலிருந்து இரண்டு கூரிய அம்புகளைப் பொறுக்கி எடுத்துத் தன் இடுப்பில் செருகிக்கொண்டான். தன்னுடைய அருமை மகன் தலையில் வைக்கப்பட்ட பழத்தைத் துண்டித்து வீழ்த்தினன்.

இதைப் பார்த்துக் கொண்டேயிருந்த கெஸ்லெர், 'உயிர் பிழைத்தாய். இன்னொரு அம்பையும் இடுப்பில் வைத்துக் கொண்டாயே, எதற்காக?'' என்றான். 'முதல் அம்பு பழத்தைத் துண்டித்திராவிட்டால், இரண்டாவது அம்பு உன் மார்பைப் பிளந்திருக்கும்' என்று கணீரென்று பதில் சொன்னன் டெல்.

கெஸ்லெருக்குக் கண்ணில் தீப்பொறி பறந்தது. 'டெல்லைப் பிடித்துக் கட்டுங்கள். என்னுடைய கோட்டைக்குப் போய் அங்கே இவனைத் தூக்குப் போடுவோம்' என்றான்.

டெல்லைக் கட்டிப் படகில் ஏற்றினர்கள். கெஸ்லெரும் அவனுடைய ஆட்களும் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். ஏரியில் படகு சென்றது. திடீரென்று புயல்காற்றுக் கிளம்பிற்று. ஏரி குமுறிற்று. படகு தத்தளித்தது. டெல் நல்ல மாலுமி. அந்த ஏரியில் அவன் கண்ணை மூடிக்கொண்டே பட

கோட்டுவான். அதனால் அவனைக் கட்ட விழ்த்துப் படகோட்டச் செய்தனர். அவன் திறமையாய்ப் படகை ஓட்டிக் கரைப் புறத்துக்குக் கொண்டு வந்தான். கிட்ட வந்ததும் தன்வில்லைக் கையிலெடுத் துக் கொண்டு ஓரே பாய்ச்சலில் கரை யிலே தாவினான். காலால் கொடுத்த உதையில் மாலுமியற்ற படகு மறுபடியும் ஏரிப் புயலில் தத்தளிக்கிறது. எப்படியோ கெஸ்லர் இன்னொரு புறத்தில் கரை வந்து சேருகிறான். அவன் வரவை எதிர்பார்த் துப் பதுங்கிக்கொண்டிருந்த டெல் அவன் மேல் அம்பெய்து அவனைக் கொல்கிறான்.

உடனே தேசமெங்கும் குழப்பம் உண் டாகிறது. கலகம் விளைகிறது. இது நடந் தது 1291-ம் வருஷத்தில். டெல் கலகக்கா ரத் தலைவர்களுள் ஒருவனாக விளங்கு கிறான். மார்கார்டென் என்னும் இடத்தி லே 1315-ம் வருஷத்திலே யுத்தம் ஒன்று நடக்கிறது. அதிலே டெல் தீரச்செயல் களை இயற்றுகிறான். ஆஸ்ட்ரியர்கள் முறி யடிக்கப் படுகிறார்கள். ஸ்விட்ஸர்லாந்து தேசம் விடுதலை அடைகிறது.

ஒரு சமயம் ஏரியிலே விழுந்து தத்த ளித்த குழந்தை ஒன்றைக் காப்பாற்ற முயன்ற டெல் தண்ணீரில் அகப்பட்டு கொண்டு உயிரை இழந்தான். அவனு டைய முடிவும் வீரனுக்கு ஏற்ற முடிவு. இது நடந்தது 1354-ம் வருஷத்தில்.

இதுதான் டெல்லின் கதை.

ஆல்ட்டார்ப் என்னும் ஊரிலே கடைத் தெருவிலே டெல் தன் மகன் தலைமேல் உள்ள பழத்தைக் குறிவைத்து அம் பெய்த இடத்திலே வில்லியம் டெல்லின் சிலை ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. ஸ்விட்ஸர்லாந்து தேசத்திலே டெல்லின் உருவச் சிலைகளுக்குக் கணக்கே இல்லை.

டெல், வில் எய்த திறமையே தங்களுக் குச் சுதந்திரம் அளித்ததாகக் கருதும் அந்நாட்டினர் குறிவைத்துச் சுடும் விழாக் களைப் பெரிதாகக் கொண்டாடுகிறார்கள். பிறநாட்டினர்கள்கூட இவ்விழாக்களுக்கு அழைக்கப்படுகிறார்கள்.

படகிலிருந்து டெல் தாவிக் குதித்த இடத்துக்கு 'டெல் முனை' என்று பெயர். அங்கே இந்த 'நற்காரியத்துக்கு' அறிகுறி யாகச் சிறு கோயில் ஒன்று கட்டியிருக்கி றார்கள். டெல்கெஸ்லரைக் கொலைசெய்த இடத்திலும் அந்த 'நற்காரியத்துக்கு' ஞா பகச் சின்னமாக அங்கேயும் ஒரு கோயில் கட்டப்பட்டிருக்கிறது.

இவ்வளவு விஷயங்களும் இருக்க இது முழுப் பொய்க் கதை என்று ராபேல சாபடினி சொல்லுகிறார். அவர், இந்தக் கதையைக் கேட்டதும் இது நிஜ மாக முற்றிலும் நடந்ததா என்று தோன் றுவது இயல்புதான். கொஞ்சம் நடந்தி ருக்கும் பாக்கி எல்லாம் கண் மூக்குக்காது வைத்து ஜோடித்திருக்கும் என்று நினைக் கலாம். ஆனால் வாஸ்தவத்தை ஆராயப் போனபோது தெரிய வந்த விஷயம் பிர மிக்கத்தக்கதா யிருந்தது. அவன் ஞாப கார்த்தமாக அத்தனை உருவச்சிலைகள் இருந்தும், அத்தனை விழாக்கள் கொண்டா டப்பட்டும், மூன்று கோயில்கள் கட்டப் பட்டும், அவன் பிறப்பு, வளர்ப்பு, வாழ்க் கை, மனைவி, குழந்தை லாஞ்சனைகள் முத லியவற்றைப் பற்றி அவ்வளவு விவரங்கள் இருந்தும் டெல் என்னும் ஆள் ஒருவன் இருந்ததே கிடையாது என்பது ஆராய்ச் சிகளால் தெரிய வருகிறது. இச்சரித்திர மானது அடிமுதல் அந்தம் வரையில் ஓரே கற்பனை. ஆதாரம் ஒன்றுமே இல் லாத வெறும் கட்டுக்கதை என்று சொல்லுகிறார்.

இது கட்டுக் கதை என்பதை வருத்தத் துடன் தான் ஒப்புக்கொள்ள வேண்டி யிருக்கிறது.

இம்மாதிரியான கதைகள்—போலிச் சரித்திரங்கள் பிறநாடுகளிலும் நிலவி வரு கின்றன.

ஷாஜஹானின் நியாயம்

[கே. என். கணேசன், காரைக்குடி]

“மநுநீதி கண்ட சோழன் காலத்தில் மட்டும் மணி கட்டி நியாயம் வழங்கவில்லை. மொகலாயர்கள் காலத்தில்கூட அந்த நீதி நடந்து வந்தது. ஷாஜஹான் காலத்தில் ஒரு ஸ்வாரஸ்யமான சம்பவம் நடந்தது............” என்று இரண்டு நண்பர்கள் வெகு ஸ்வாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள் பீச்சில். கொஞ்சதூரம் தள்ளி அவர்களுடன் சம்பந்தப்படாமலிருந்த என் காதுகளிலும் அந்த ஸம்பாஷணை விழுந்து கொண்டேயிருந்தது. அது நடந்து ஒரு வருஷத்துக்கு மேலாகியும் இன்னும் என் மனக்கண் முன் அந்தச் சம்பவம் தோன்றுகிறது.

ஷாஜஹான் யார் என்று தான் உனக்குச் சொல்ல வேண்டாமே! பள்ளிக் கூடத்தில் வாசித்திருப்பாயல்லவா. அவன் காலத்தில் தான் நடந்தது இந்தச் சம்பவம்.

அரண்மனை வாயிலில் ஒரு கயிறு மட்டும் தொங்கிக் கொண்டிருக்கும். அதை இழுத்தால் ஷாஜஹான் இருக்குமிடத்தில் மணியடிக்கும். அதைக் கேட்டால் ஷாஜஹான் எந்த வேலையிலிருந்தாலும் அரண்மனை வாயிலுக்கு ஓடோடி வந்து நியாயம் வழங்குவான்.

ஆனல் வெகு நாள் வரையில் அந்த மணிக்கு வேலையில்லாமலேயிருந்து வந்தது அவன் ராஜரீகத்தில் யாரேனும் நீதி தவறி நடந்தால் தானே நியாயம் வழங்குவதற்கு!

ஒரு நாள் ஷாஜஹான் அந்தப்புரத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தான். ஒரு நாளுமில்லாமல் அன்று என்னமோ எச்சரிக்கை மணியடித்தது.

மணி யோசையைக் கேட்டதும் அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டதுபோல் இருந்தது. ஷாஜஹான் பித்தம் பிடித்தவன்போல் ஆனுன். விரைந்து ஓடிவந்தான் வாயிலுக்கு.

ஒரு பெண்மணி, தலைவிரி கோலமாக அழுதுகொண்டு, “இதற்கு நியாய மில்லையா இந்த ராஜ்யத்தில் ....” என்று புலம்பிக் கொண்டேயிருந்தாள். இதுவரையில் தன் ராஜ்யத்தில் இந்தமாதிரி சம்பவங்களே நடக்காதிருந்த ஷாஜஹானுக்கு, இதைப் பார்த்தவுடன் உலகமே தன்னைச் சுற்றுவது போல் இருந்தது. அவன் இன்னது செய்வது என்று புரியாமலே விழித்தான்.

“அரண்மனையிலிருந்து வந்த ஒரு குண்டு - அப்பெண்மணியின் புருஷன் மேல் பாய்ந்து அவனைக் கொன்று விட்டது” என்ற செய்தியைத் தெரிந்து கொள்வதற்கே

எம். & எஸ். எம். ரெயில்வே

தீபாவளிக்காக

அக்டோபர் மாதம் 19-ந் தேதி முதல் 31-ந் தேதிவரை

100-மைல்களுக்கு மேற்பட்ட பிரயாணத்திற்கு எல்லா ஸ்டேஷன்களுக்குமிடையே எல்லா வகுப்புகளுக்கும் மலிவான ரிடர்ன் டிக்கட்டுகள் கொடுக்கப்படும்.

●

விவரங்களுக்கு அருகிலுள்ள

ஸ்டேஷன் மாஸ்டரைக் கேட்கவும்

அல்லது

கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்

சீப் கமேர்ஷியல் மானேஜர்,

பார்க் டவுன், மதராஸ்.

ஷாஜஹானுக்கு வெகுநேரம் ஆகி விட்டது.

ஷாஜஹான் சற்று நிதானித்தான். தன் மனத்தைத் தேற்றிக் கொண்டான். முகம் சிவந்தது. மீசை துடித்தது.

"இதற்கு நியாயம் ஒரேவகையில் தான் அளிக்கமுடியும். அதற்கு நீ உடன்படச் சம்மதமானல் நான் கட்டளையிடத் தயாராயிருக்கிறேன்" என்றான் ஷாஜஹான்.

இதற்குள் அரண்மனை வாயிலில் ஏராளமான கூட்டம் கூடிவிட்டது. ஜனங்கள் எல்லோரும் இதற்கு நியாயம் எந்த விதத்தில் அளிக்கப் போகிறாரோ என்று ஆச்சரியத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

"நான் தங்களுடைய கட்டளையைச் செய்யத் தயாராய் இருக்கிறேன் ஆனல்......................" என்று ஆரம்பித்தாள் அப்பெண்மணி.

"ஆனல் என்ன ?"

"ஆனல் அது பிறருக்குப் பாதிக்காமல் மட்டுமிருந்தால் நான் தங்கள் கட்டளையை நிறைவேற்றக் கூடும்" என்றாள் அந்தப் பெண்மணி.

"அதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம். இதோ இந்தத் துப்பாக்கியைக் கையில் எடுத்துக்கொள். பிறகு என் ஆக்ஞைப்படி நட" என்று ஒரு துப்பாக்கியைக் கையில் கொடுத்தான்.

"எவனுடைய துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட குண்டு உனக்கு வைதவ்யத்தை உண்டாக்கியதோ அவனை நீ விதவையாக்குவதுதான் சரி. இதுதான் இதற்குத் தக்க நியாயம். இதோ என்னைப்பார்த்துச் சுடு" என்று தன் மார்பைக்காட்டிக் கொண்டு முன் வந்தான் ஷாஜஹான்.

எல்லோரும் ஷாஜஹானின் புத்தியைக் கண்டு மெச்சினார்கள். ஆனல் அவர்களுக்குத் தங்கள் அரசனை இழக்க மட்டும் சம்மத மில்லை. எல்லோரும் ஆவலுடன் அப் பெண்மணியின் பக்கம் திரும்பிப் பார்த்தனர்.

"மகாராஜா! நல்ல காரியம் செய்தீர்கள். என்னல் இந்தப் பழிக்கு ஆளாக முடியவே முடியாது. நான் தங்களிடம் நியாயம் கேட்க வந்ததே பிசகு. நான் ஒரு பாபியல்ல! என்னைத் தயவு செய்து மன்னித்து விடுங்கள். மன்னித்து விடுங்கள்........................" என்று புலம்பியவாறே அப்பெண்மணி எங்கோ மறைந்துவிட்டாள்.

பிறகு ஷாஜஹான் அவளை எவ்வளவு தேடியும், அகப்படவே இல்லை.

நேஷனல் மியூச்சுவல்

அஷ்யூரன்ஸ் ஆப் இந்தியா, லிமிடெட்.

1938-ம் வருஷத்திய இன்ஷூரன்ஸ் ஆக்டில்
ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

தலைமை ஆபீஸ் :

6, பிலிப்ஸ் தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

●

அந்தஸ்தும் செல்வாக்கும் உள்ள கனவான்களிடமிருந்து சம்பளத்திற்குக் கம்பெனியின் ஆர்கனைசர்களாக வேலை செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முந்திய அநுபவம் இருந்தால் சிலாக்கியம். தொழில் உத்தரவாதம் அவசியம்.

மற்ற விவரங்களுக்குக் காரியதரிசிகளுக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

சிதம்பரம் டி. முன்சீப் கோர்ட்டு

O. P. 90/40

—

கந்தசாமி வாண்டையார்—மனுதாரர்
வீரப்ப வாண்டையார்—எதிர் மனுதாரர்

மனுதாரர் இறந்துபோன அமுர்தம் அம்மாளுக்கு வரவேண்டிய கடனை வசூலிக்க தனக்கு வார்சு சர்டிபிகேட் கிடைக்க வேண்டுமென்று மனு கொடுத்து ஷை மனு ஷை கோர்ட்டில் 21-10-40ல் ஈரங்கிக்கு வருவதால் அது விஷயமாய் ஆக்ஷேபனையுள்ளவர்கள் ஷை கோர்ட்டில் காலை 10-மணிக்கு ஷை தேதியில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

K. S. வெங்கடேசய்யர்,
K. S. நடராஜ சாஸ்திரிகள்,
மனுதாரர் வக்கீல்கள்.

கும்பகோணம் சப் கோர்ட்டு

1940 ௵ ஸ்மால் காஸ் 297 நெ.

கும்பகோணம் பெரிய தெரு ஜவுளி வியாபாரம் V. N. சுப்பிரமணியய்யர்	வாதி
ஷை யூர் டபீர் புதுத்தெரு கோபாலய்யர் குமாரர் ராமசாமய்யர்	3-ம் பிரதிவாதி

ஷை 3-ம் பிரதிவாதிக்கு தெரிவிப்பதாவது:

ஷை நெம்பரில் வாதியால் பிருமிசரி நோட்டுப்படி தொகை கிடைக்க உம்முடைய வகையரு பேரில் ரூ. 144-6-0க்கு தாவா செய்யப்பட்டு, உமக்கு சம்மன் சர்வாகாததினால், உம்முடைய சம்மனை ஒட்டி சர்வு செய்யவும் பப்ளிகேஷனுக்கும் உத்திரவாகி 25-10-40 ஈரங்கி போடப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபனை இருந்தால் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

T. K. Aravamutha Ayyangar,
Advocate.

Kumbakonam,
6-10-'40

நோட்டீஸ்

மன்னார்குடி டி. முன்சீப் கோர்ட்டு

1940 ௵ O. S. No. 71/40

கும்பகோணம் மேல் கடலங்குடி தெரு, 36 நெ. வீட்டிலிருக்கும் வடுவூர் முடும்பை ராஜகோபாலய்யங்கார் பாரியை, சுந்திரத்தம்மாள்

—வாதி.

மன்னார்குடி அக்கிரகாரம் முதல் தெருவில் நீடாமங்கலம் நெல் வியாபாரம் P. T. Sous வீட்டிலிருக்கும் இறந்துபோன ராமானுஜய்யங்கார் குமாரர் கிருஷ்ணமாச்சாரியார், — 2-ம் பிரதிவாதி.

இதனால் ஷி 2ம் பிரதிவாதிக்குத் தெரிவிப்பதாவது:—ஜீவனாம்ச பத்திரப்படி ஜீவனாம்ச தொகை கிடைக்க ரூ. 210-0-0க்கு வாதியால் ஷி நம்பரில் தாவா செய்யப்பட்டு ஷி தாவாவில் 2-ம் பிரதிவாதிக்கு சம்மனை ஒட்டிச் சர்வுசெய்ய மனுகொடுத்து ஆர்டராகி 10-10-40க்கு ஈரங்கி போடப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபணையிருந்தால் ஷி தேதியில் பகல் 10மணிக்கு ஷி கோர்ட்டில் ஆஜராகித் தெரிவித்துக்கொள்ளவும்.

V. K. ராஜகோபாலய்யங்கார்,

மன்னார்குடி
1—9—40 } வாதி வக்கீல்.



இடைவிடாத முன்னேற்றம் ஓங்கி வரும் கீர்த்திக்கு ஓர் அறிகுறி!

நியூ ஏஷியாடிக்

லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

இதன் 6-வது வருஷத்தில் பூர்த்தி
யான இன்ஷ்யூரன்ஸ் புள்ளி விவரம்

1939-ல் ரூ. 50 லக்ஷத்திற்கு மேல்
1938-ல் ரூ. 41·74 லக்ஷம்

மானேஜிங் ஏஜண்ட்ஸ்: **பிர்லா பிரதர்ஸ் லிமிடெட்**

நீங்கள் இன்ஷ்யூர் செய்யவோ அல்லது பிரதிநிதி
களாக யிருக்கவோ ஏற்ற சிறந்த கம்பெனி இது.
விவரங்களுக்கு எழுதவும்:

மதராஸ் பிராஞ்சு:

ஏ. சுப்பையா பிராஞ்சு மானேஜர்

289, லிங்க செட்டித் தெரு, ஜி. டி. மதராஸ்.